விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை (14.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

# எதிரணிக் கூட்டணியில் இன்னும் சேரவில்லை



## சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனவரி மாதம் நடத்தப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கான பொதுக் கூட்டணியில், தற்போதைய நிலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்கவில்லை என்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியத் தூதுவர் சின்ஹாவுடன் மூன்று மணி நேரம் பேச்சு!

### சம்பந்தனும் ஹக்கீமும்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை கடந்த சனிக்கிழமை இடம்பெற்றதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கான இந்தியத் தூதுவருடன் இவ்விரு கட்சிகளின் தலைவர்களும் சுமார் 3 மணிநேரம் வரை விரிவான பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தச் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் எவரை ஆதரிப் பது என்று தமிழ்த் தேசியக் 24ஆம் பக்கம் பார்க்க....

## தீர்ப்பின் பிரதியை கோருகிறது ஐ.தே.க

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதில் சட்ட ரீதியான தடையில்லை என்று உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்மானத்தின் பிரதிஒன்றை வழங்குமாறு ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமர்துங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் பற்றி ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமல்ல நாட்டு மக்களும் சரியாக அறிந்து கொள்ள வேண்டும்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானம 24ஆம் பக்கம் பார்க்க....

## தெரிவுக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிறுவப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் நடவடிக் 24ஆம் பக்கம் பார்க்க....

## பொது வேட்பாளர்களின் புரிந்துணர்வு ஒப்பந்தம்

### இன்று கைச்சாத்து

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கூட்டணியாக பொது வேட்பாளரை பெயரிடவிருப்பதாகவும் இந்த பெயர் ஜனாதிபதி தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட பின்பே அறிவிக்கப்படும் எனவும் இது சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படும் என்றும் இதில் 3 திட்டங்கள் உள்ளடக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

இந்த பொது வேட்பாளர் யார் என்பதை தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பிற்கு பின்பே வெளியிடப்படும் என்றும் தெரியவருகின்றது.

பொது வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க, கரு ஜயசூரிய, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, வண- மாதுளுவாவே சோபித தேரர் ஆகியோரின் பெயர்களில் ஒருவர் தெரிவு செய்யப்படலாமென 24ஆம் பக்கம் பார்க்க....

## நிலத்தில் பிளவு 101 குடும்பங்கள் பாதிப்பு

(கண்டி)

கொஸ்லந்தை, மீரியபெத்தயில் கடந்த மாதம் 29ஆம் திகதி பாரிய மண்சரிவுக்கு உள்ளான பகுதிக்கு எதிராகவுள்ள காணியில் சுமார் ஒரு அடி அகலத்துக்கு பிளவு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்தை அடுத்து, அப்பகுதியில் வசித்த 101 குடும்பங்களை, கொஸ்லந்தை ஸ்ரீ கணேஷா வித் 24ஆம் பக்கம் பார்க்க....

## மீனவர்களை விடுவிக்க இந்தியா வலியுறுத்தல்

(கொழும்பு)

நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து தமிழக மீனவர்களையும் நிபந்தனைகள் எதுவுமின்றி உடனடியாக இலங்கை அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐந்து தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்புக்கு எதிராக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்தியா இவ்வாறு வலியுறு 24ஆம் பக்கம் பார்க்க....

## அரசாங்க சேவையாளர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவு ரூ.3000

### ஓய்வூதியர்களுக்கு ரூ.2500

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் யாவருக்கும் 3000 ரூபாய் இடைக்காலக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பான சுற்றறிக்கை வெளியாகியுள்ளது. அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால 24 / 2014 இலக்க சுற்றுநிருபத்தின பிரகாரம் இவ்வறிவித்தல் வெளியாகியுள்ளது.

இதன் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய அரச ஊழியர்களும் சகல அதிபர், ஆசிரியர்களும் எதிர்வரும் 30.06.2015 வரை இடைக்காலக் கொடுப்பனவைப் பெறவுள்ளனர். 01.07.2015 தொடக்கம் நிலுவையுடன் புதிய சம்பளத்தைப் பெறவு 24ஆம் பக்கம் பார்க்க....



இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள மௌரிடேனியா ஜனாதிபதி மொஹமட் அவ்ள்ட் அப்பெட் அஸீஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் நேற்று சந்தித்த போது...

## யாழ்-கொழும்புக்கு மேலதிக ரயில் சேவை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையில், இன்று வெள்ளிக்கிழமை முதல் மேலதிக ரயில் சேவை நடத்தப்படும் என்று யாழ்.புகையிரத நிலைய அதிபர் ரி.பிரதீபன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இந்த மேலதிக ரயில் சேவையானது, கொழும்பிலிருந்து யாழ்ப் 24ஆம் பக்கம் பார்க்க....

## பொது பல சேனா புறக்கணிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டுமென கோரி எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு பதிலடி கொடுக்கும் நோக்கில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைப்புக்கள் கொழும்பு சுகதாச அரங்கில் கூட்டமொன்றை நடத்தியிருந்தது. இந்தக் கூட்டத்தில் பொதுபல சேனா இயக்கம் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொது பல சேனா இயக்கத்தின் 24ஆம் பக்கம் பார்க்க....

## அரசிலிருந்து வெளியேற ஹெல உறுமய காலக்கெடு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய எதிர்வரும 18 ஆம் திகதி அரசாங்கத்தில் இருந்து வெளியேற தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமய முன்வைத்துள்ள யோசனைகளுக்கு ஜனாதிபதி சரியான பதிலை வழங்காது போனால் 18 ஆம் திகதி அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவது என அந்த கட்சி முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் என்பதுடன் அவர் பதவியேற்ற தினமுமாகும்.

24ஆம் பக்கம் பார்க்க....

மலேசியாவில் படிக்க பகுதிநேரமாக 60,000/- வரை உழைக்க O/L மட்டும் போதும்.
சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி உட்பட 26 நாடுகள் பறக்க 100% விசா உறுதிப்பாடு.
அனைத்து நாடுகளுக்கும் Visit visa, மறுக்கப்பட்ட விசா, Student visa ஆலோசனை.
ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனை.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(சி-9072)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொது மன்னிப்பு குறித்து அரசு முடிவு எடுக்கவில்லை

(கொழும்பு)

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து தமிழக மீனவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது குறித்து இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்று ஜனாதிபதியின் பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யாது விட்டால், தமிழக மீனவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும், இது தொடர்பில் இந்தியத் தூதரகத்திடம் தெரிவிக்குமாறு ஜனாதிபதி தன்னிடம் கூறியதாக பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தெரிவித்திருந்தார்.

எனினும், நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து தமிழக மீனவர்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை இந்தியா விலக்கிக் கொள்ள தயாராக இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தமிழக மீனவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்து எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்று ஜனாதிபதியின் பேச்சாளர் மொகான் சமரநாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மட்டுமே முடிவு எடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-11)

# ஜனாதிபதிக்கு எதிரான வழக்கை ஏற்றது நீதிமன்றம்

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் யாப்பின்படி ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு விசாரணை ஒன்றை நடத்த முடியாது என்று முன்வைக்கப்பட்ட வாதத்தை நிராகரித்த நீதிபதி வழக்கை தொடர்ந்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார்.

அரசியல் யாப்பின்படி ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு விசாரணையை நடத்த முடியாது என்றாலும், அவர் நிதியமைச்சராகவும் செயற்படுவதால், நிதியமைச்சர் என்ற வகையில் அவரையும் வழக்கில் சேர்க்க முடியும் என்று நீதிபதி கூறியுள்ளார்.

கோல்டன் கீ நிறுவனத்தில் பணத்தை வைப்புச் செய்ததனால் பாதிக்கப்பட்டவர்களின் சங்கத்தின் சார்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக அந்த அமைப்பின் தலைவி துஷாந்தி ஹறுகொட தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு கோல்டன் கீ நிறுவனத்தில் ஏற்பட்ட நிதி மோசடி காரணமாக அங்கு பணத்தை வைப்புச் செய்த சுமார் 9 ஆயிரத்திக்கு அதிகமானோருக்கு 2 ஆயிரத்து 600 கோடி ரூபாயுக்கு அதிகமான பண இழப்பு ஏற்பட்டதாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, அந்த வழக்கில் ஜனாதிபதியையும் பிரதிவாதியாக சேர்த்திருப்பது, அரசியல் யாப்பின் 35 வது பிரிவின் கீழ் தவறு என்று எதிர்தரப்பு சட்டத்தரணி வாதிட்டார். ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அவர் கோரினார். (எ-11)

# கம்பன் கழகத்தின் இசை வேள்வி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் "ஸ்ரீ ராம நாம கானமிர்தம் இசை வேள்வி - 2014" விழா இன்று தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் மாலை 5.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டம் ஸ்ரீ துர்க்காமணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில்இந்தியக் கலைஞர்களான சந்தானகோபாலன், பம்பாய் ஜெயஸ்ரீ, கத்ரி கோபால்நாத் ஆகியோர் கலந்து கொண்டு இசைப் பேரரங்கை நிகழ்த்தவுள்ளனர். (ஏ)

# அலிக் கற்கை நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

மேலதிக மொழிகள் விருத்திக் கற்கை நெறிக்கான (அலிக்) நேர்முகத் தேர்வு எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்க முடியும் என தென்மராட்சி அலிக் இணைப்பாளர் வே. திருச்சபேசன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வுக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு ஒன்று சாவகச்சேரி நகரசபை மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நீரிழிவு தொடர்பான தொனிப் பொருளில் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், உள வைத்திய நிபுணர் எஸ்.கடம்பநாதன் மற்றும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்தியர் [illegible] சிறிகரன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் அனைவரையும் பங்குபற்றி பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (எ-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



DHL விரைவு! பாதுகாப்பு!! நம்பகத்தன்மை!!!
THIRUMURUGEN COM NET (Pvt) Ltd.
DHL இன் நேரடி அங்கீகாரம் பெற்ற ஒரே முகவராக விளங்கும்
**திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd.**
தற்பொழுது உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவையினை மூன்று வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.
Delivery 3 working days
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல்சிலோன் புத்தகக்கடைக்கு முன்பாக)
T.P: 0212227835 / 0777554528
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)
(7859)


## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் கீழ்குறிப்பிடப்படும் பொருட்களுக்கு/உபகரணங்களுக்கு தகைமையுடையோரிடம் இருந்து சீல் இடப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. தையல் மெசின்கள்
2. நீர் இறைக்கும் இயந்திரங்கள் - எரிபொருள்
3. நீர் இறைக்கும் இயந்திரங்கள் - மின்சாரம்
4. தெளிகருவிகள் - 16 லீற்றர்
5. மீன்பிடி வலைகள்
6. துவிச்சக்கரவண்டிகள் - ஆண்கள்
7. துவிச்சக்கரவண்டிகள் - பெண்

- விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும். இப்பொருட்களை/உபகரணங்களை விற்பனை செய்வதற்கான அங்கீகாரம் வியாபார பெயர் பதிவு கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

- ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 14.11.2014 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து 28.11.2014 ஆம் திகதி பிற்பகல் 1.00 வரை காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா.1000/- கட்டணமாக செலுத்தி விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 01.12.2014 திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் திட்டமிடல் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 01.12.2014 திகதி பி.ப 3.00 மணி க்கு திறக்கப்படும்.

- கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.
(சி-9073)

## முதலாம் ஆண்டு நினைவு பகிர்வு



பத்தன்மோட்டை கண்டாவளையை சேர்ந்த அமரர்

**சின்னத்தம்பி ஆறுமுகம் (இளையதம்பி)**

அன்னை மடியில் 21.03.1935 | ஆண்டவன் அடியில் 27.10.2013

**அமரர் திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்**

அன்னை மடியில் 27.12.1942 | ஆண்டவன் அடியில் 20.04.2013

எம் தோப்பின் மூலபெரு விருட்சங்களே எமக்கு உயிர் கொடுத்து
உருவம் தந்த தெய்வங்களே! எம் வாழ்வில் என்றும் நீர்
உரமாகினீர் உள்ளன்பால் எம் அகத்தில் அழியாத தடமாகினீர்
உங்கள் குகையில் நாங்கள் கொடி மலர்கள் எங்கள் குகையில்
நீங்கள் உயிராய் வாழ்வீர்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவர்களின் முதலாமாண்டு நினைவு நிகழ்வு இன்று (14.11.2014) 171, வன்னியசிங்கம் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறுகின்றது.

அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(சி-9067)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

## கிளைக்குழு பொதுக்கூட்டம்

புலோலி பல நோக்கு கூட்டுறவுச்சங்கக் கிளைக்குழு பொதுச்சபைக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தந்த கிளைகளில் நடைபெறவுள்ளதாக பல நோக்கு கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அன்றைய தினம் 13 பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளைகளுக்கான புதியகிளைக்குழு தெரிவும் இம் பெறவுள்ளது. (இ


அனைவரின் வேண்டுகோளுக்கு இணங்க
மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்



2 வது வெளியீட்டில்
தமிழ்நாட்டில் வெள்ளிவிழா கண்ட காவியம்
ராஜா திரையரங்கில் "கர்ணன்"
16.11.2014 ஞாயிறு மட்டும் காலை 10.30 மணிக்கு
பாடசாலை மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணம் 100/= மட்டுமே
பிள்ளைகளுடன் வரும் பெரியவர்களுக்கு சலுகைக் கட்டணம் வழங்கப்படும்
சிவாஜி ரசிகர்கள் (சி-9065) யாழ்ப்பாணம்.


வலிகாமம் தெற்கு பிரதேச சபை
වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

*My No :Np/14/41(15)/01/Tender/2015* *Date: 27.10.2014*

வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

2015 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல் திருத்தம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 12.11.2014 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை. (மீன் வெட்டுமிடம். மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 8569000.00 |

**தி.பிரகாஷ், தவிசாளர். வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 14.10.2014 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த

எமது குடும்பத் தலைவர்

தோற்றம்:- 1947.01.10 மறைவு:- 2014.10.14

## அமரர் கந்தையா நயினார்

(அம்பாள் பழைய பாட்ஸ்கடை உரிமையாளர்)

அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (14.11.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதனால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.05,5 ஆம் ஒழுங்கை,
அரசடி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(8319)

**குடும்பத்தினர்**

## இராசி பலன்

14.11.2014
(ஐப்பசி 28, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.00 மணிக்கு
சப்தமி முற்பகல் 8.42 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 1.52 மணிவரை
இராகுகாலம் 10.37-12.07 மணிவரை
சுபநேரம் 6.07-7.37 மணிவரை
நான்காம் ஐப்பசி வெள்ளி

வளவன்

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, கட்டடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள், அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

**இடபம்** குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்து முடிப்பீர்கள், நாடி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**மிதுனம்** பேச்சில் கனிவு பிறக்கும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய நட்புகள் உருவாகலாம்.

**கும்பம்** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுவாரஸ்யமான நாள், ஆரோக்கியமான நாள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** இனசன வருகையுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**சிம்மம்** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு** திட்டமிட்ட பணிகளில் சிறுதடை, தாமதங்கள் என்பன ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல் உருவாகும், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்துகொள்ளலாம்.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும்



திரு.ஆ.நித்திலவர்ணன்
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தற்கால உலகளாவிய அபிவிருத்திப்போக்கானது பேண்தகைமையுடையதாக இல்லை என்பதை சூழல், பொருளாதாரம் மற்றும் சமூக குறிகாட்டிகள் எடுத்தியம்புவதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீன்மூன் அவர்கள் குறிப்பிடுகின்றார். மேலும் வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக இருப்பதுடன் அதிகரித்த சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இதற்கு பேண்தகு அபிவிருத்தியே ஒரே தீர்வாகும் எனவும் வலியுறுத்துகின்றார். தமக்கான பேண்தகு அபிவிருத்திக்கான பயணத்தில் ஒவ்வோரு நாடும், பல்வேறு சவால்களினை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இச்சவால்களில் பல, எல்லா நாடுகளுக்கும் பொதுவானவையாகவும் வேறுசில குறிப்பிட்ட நாடுகளுக்கு தனித்துவமானவையாகவும் காணப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் மக்கள் தற்காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக அதிகரித்த வறுமை, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்கள், சக்தி வளங்களின் வினைத்திறனற்ற பாவனை, நீர்ப்பாதுகாப்பின்மை, அதிகரித்த சூழல் மாசடைதல், மனித உரிமை துஸ்பிரயோகம், சுய போக்குவரத்தின் மிதமிஞ்சிய பாவனை, சுற்றாடல் தரம்குன்றல், மற்றும் உலகமயமாக்கல் போன்றவை காணப்படுகின்றன.

### "பேண்தகு அபிவிருத்தி" அல்லது "நிலைத்து நீடித்திருக்கும் அபிவிருத்தி"

ஆரம்ப காலங்களில் "அபிவிருத்தி" என்று பேசப்பட்டுவந்த எண்ணக்கருத்தானது, பிற்காலத்தில் "பேண்தகு அபிவிருத்தி (Sustainable Development)" என்ற மேம்பட்ட பதத்தினால் அழைக்கப்படுகின்றது. இது அனைத்து நாடுகளிலும பயன்படுத்தப்பட்டுவரும் தனித்துவமான எண்ணக்கருவாகும். இதனை வரைவிலக்கணப்படுத்துவது கடினமானதாகும். ஏனெனில் தொடர்ச்சியாக விருத்தியடைந்து (Evolving) செல்லும் ஒரு எண்ணக்கருவாக காணப்படுகின்றது.

"எதிர்காலச் சந்ததியினர்க்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் மக்களின் இன்றைய தேவையினை பூர்த்திசெய்வது மற்றும் வறுமையினை குறைப்பதற்குமான ஓர் நடவடிக்கை" என பேண்தகு அபிவிருத்தியை பிரெண்லாண்ட் ஆணைக்குழு முதன்முதலாக 1987 ஆம் ஆண்டு வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. இது பொருளாதாரம், சமூகம், மற்றும் சூழல் என்கின்ற மூன்று தளத்திலே கட்டியெழுப்பப்படுகின்றது. கலாச்சாரம் மற்றும் தனிமனிதன் என்பனவும் இதன் கூறுகளாக தற்காலத்தில் கருதப்படுகின்றன.

பேண்தகு அபிவிருத்தியானது சுற்றாடல் வரையறைக்குள் வாழ்தல், உறுதியானதும் ஆரோக்கியமானதுமான சமூகத்தை உறுதிப்படுத்தல், பேண்தகு பொருளாதாரத்தை அடைதல், நல்ல ஆளுகையை உறுதிப்படுத்தல் மற்றும் விஞ்ஞான அறிவை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தல் என்ற ஐந்து வழிகாட்டல் தத்துவங்களினால் இயக்கப்படுகின்றது.

### இலங்கைக்கு பொருத்தமான அபிவிருத்தியை கண்டறிதல்

இலங்கைக்கு பொருத்தமான அபிவிருத்தி தொடர்பாக இலங்கையின் ஜனாதிபதி அதிமேதகு மகிந்த ராஜபக்ச அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நாம் அன்று சுதந்திரம் பெறும்போது எம்மைவிடவும் பின்னடைந்திருந்த பல நாடுகள் இன்று எம்மை பின்தள்ளி நீண்ட தூரம் முன்னேறிச் சென்றுவிட்டன. எனினும், இன்று நாம் அந்த நாடுகளைப் பின்பற்றவோ அந்த அபிவிருத்திகளின் சாயலைக் கொண்டு செயற்படவோ தயாராக வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அனைத்தையும் பின்தள்ளிச் சென்று உலகுக்கு அவர்கள் அடையாத அபிவிருத்தியொன்று தொடர்பான புதிய வழிகளைக் காட்டுவதேயாகும்" எனக்குறிப்பிடுகின்றார்.

இச்செய்தியை இங்கு நான் குறிப்பிடுவதன் நோக்கம் யாதெனில், தற்போது எமது நாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அனைத்து இலவசப்பாட நூல்களிலும் முகப்புப் பக்கத்தில் பேண்தகு அபிவிருத்தியை வலியுறுத்தும் இச்செய்தி அச்சிடப்பட்டுள்ளது.

### வடமாகாணம் எதிர்கொள்ளும் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்கள்

இலங்கையில் நடைபெற்ற 30 வருடகால உள்நாட்டு யுத்தம் முடிபுக்கு வந்த பின்னர் முழுநாடும் அபிவிருத்திப் பாதையில் பயணிக்கின்றபோதும், அதிகளவிலான பாதிப்புகளுக்கு உட்பட்ட வடக்கு மாகாணம், அதன் பேண்தகு அபிவிருத்தியில், பல்வேறு பொருளாதாரம்சார், சூழல்சார், சமூகம்சார் மற்றும் கலாச்சாரம் சார்ந்த சவால்களை எதிர்நோக்கி வருகின்றது.

### பொருளாதாரம்சார் சவால்கள்

உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கையின் வடக்குமாகாணத்தில் ஏற்கனவே காணப்பட்ட, மக்களின் பொருளாதார மூலங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. உயிரிழப்புபுகள், உடமை இழப்புக்கள் மற்றும அங்கவீனங்கள் காரணமாக குடும்பங்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தலைவர்கள் காணமற்போனமை அல்லது நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால், வடக்கில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் க்காணப்படுகின்றது.

(தொடரும்)

# அதிசய உலகம்



### 115 வயதாகும் ஆமை ஜோடிகள் விவாகரத்து

ஆஸ்ட்ரியாவில் உள்ள பிரபல்யமான மிருகக் காட்சிச்சாலை ஒன்றில் தற்போது வாழ்ந்து வரும் 115 வயதான இரு ஆமைகள் திடீரென தமக்கிடையே விவாகரத்து செய்துள்ளன.

இவை இரண்டும் ஒன்றாக ஒரே கூட்டில் வசிப்பதற்கு எதிரபபுத் தெரிவித்திருக்கும் அதேவேளை, நிர்ப்பந்தித்தால் தமக்கிடையே சண்டையிட்டுக் கொள்ளவும் செய்கின்றன. நீண்டகாலம் வாழக்கூடிய இந்த மிகப் பெரிய ஆமையினங்களில் திடீரென்று ஏற்பட்டுள்ள இவ் வித்தியாசமான நடத்தை மிருகக் காட்சிச் சாலை ஊழியர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

பிபி மற்றும் போல்டி எனப் பெயரிடப்பட்ட இந்த மிகப் பெரிய ஆமை ஜோடிகள் சுவிட்சர்லாந்தின் பாசெல் சூ இலிருந்து ஆஸ்ட்ரியாவின் க்லாகென் ஃபர்ட் எனும் சூவுக்கு கொண்டுவரப்பட்டு சுமார் 36 வருடங்கள் அங்கு ஒற்றுமையாக வசித்து வந்தன. தற்போது 115 வயதாகும் இந்த இரு ஆமைகளும் ஒன்றாகவே வளர்ந்தும் வந்தன.

இவற்றில் பிபி எனும் பெண் ஆமையே முதலில் கருத்து வேறுபாட்டைக் கொண்டு வந்தது எனவும் இது தனது ஜோடியான போல்டியைத் தாக்கி அதன் ஓட்டின் ஒரு சிறு பகுதியை உடைத்துவிட்டதாகவும் கூறப படுகின்றது. இதனை அடுத்து இரு ஆமைகளையும் சேர்த்து வைக்க ஊழியர்கள் மேற்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை எனவும் பாதுகாப்புக் காரணமாக இவை தனித் தனியே வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

சுமார் 100 கிலோ எடை உடைய இவ்விரு ஆமைகளும் மிகப் பலம் வாய் ந்த தமது தாடை எலும்பு மற்றும் சொண்டினால் தமக்கிடையே கடித்துக் கொண்டால் ஓடுகள் உடைவது மட்டுமல்லாது மரணமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



தென்னை மரங்களில் பதுங்கி வாழும் தேங்காய் நண்டுகள்!

### இப்படியும் ஒரு அதிசய அலையா?

கடலில் ஏற்படும் நீர் அலைகளைப் பார்த்திருப்பீர்கள், ஏன் பாலைவனத்தில் ஏற்படும் மணல் அலைஞ்யக் கூட பார்த்திருப்பீர்கள்.

ஆனால் கற்களே அலையாக மாறியதை பார்த்தி ருக்கின்றீர்களா? ஆம், இந்த அதிசயம் அவுஸ்தி ரேலியாவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது உருவாகிய அலைகள் ஏறத்தாழ 15 மீட்டர்கள் உயர்ந்து அதிசயத்துடன் கூடிய பீதியையும் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

வட்டாரம்:- 08 ஆதன இலக்கம்:- 48

மூத்தவிநாயகர் வீதி (வட்டுக்கோட்டை வீதி)

வட்டாரம் 08, மூத்தவிநாயகர் வீதி, ஆனைக்கோட்டை, ஆதன இலக்கம் 48 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய், கோவில்பற்று, ஆனைக்கோட்டை இறை "முதலி மணல்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 02 கொண்ட இவ்வாதமானது சோமசுந்தரம் வீதி, ஆனைக் கோட்டையைச் சேர்ந்த தம்பிப் பிள்ளை தில்லையம்பலம் அவர்களால் அறுதி உறுதி மூலம் அவ்வூர் தர்ம லிங்கம் சதீஸ்குமார் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.தியாகராசா முகதாவில் நிறைவேறிய 7564 ஆம் இலக்க 2004.11.17 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார் "முதலி மணல்" நிலப்பரப்பு 01 குளி 02 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து முலமாக 14 நாட்களுக் குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் தர்மலிங்கம் சதீஸ்குமார் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். (8314)

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

வட்டாரம்:- 13 ஆதன இலக்கம்:- 60

மல்லாகம் வீதி

வட்டாரம் 13 மல்லாகம் வீதி, ஆதன இலக்கம் 60 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய், கோவில்பற்று, சண்டிலிப்பாய் இறை "ஆவளை" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாயைச் சேர்ந்த குணபாலசிங்கம் கைம்பெண் சிவனேஸ்வரி ஆகிய இவர்களால் நன்கொடை உறுதி மூலம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த வெள்ளிமயில் பெண் கனகேஸ்வரி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.பொ.சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 3484 ஆம் இலக்க 28.11.2011 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "ஆவளை" நிலப்பரப்பு 02 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் வெள்ளிமயில் பெண் கனகேஸ்வரி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(8315) தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

## ஹொங்கொங் போராட்டத்தில் அமெரிக்கத் தலையீடு இல்லை ஒபாமா தெரிவிப்பு

ஜனநாயக சீர்திருத்தம் கோரி ஹொங்கொங்கில் நடைபெற்று வரும் போராட்டத்தில் அமெரிக்கா எந்தவிதமான தலையீட்டையும் மேற்கொள்ளவில்லை என்று அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

சீனாவில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டுறவு மாநாட்டில் கலந்துகொண்ட அவர், ஹொங்கொங் போராட்டத்தில் அமெரிக்காவின் தலையீடு உள்ளது என்ற சீன ஊடகங்களின் கருத்தை மறுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, ஹொங்கொங் பிரச்சினையில் அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விவகாரத்தில் அமெரிக்கா எந்த விதமான தலையீட்டையும் செய்யவில்லை. ஹொங்கொங் மக்களும் சீன மக்களும் இணைந்து தீர்க்க வேண்டிய பிரச்சினை இது என்றார்.

அப்போது உடனிருந்த சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், ஹொங்கொங் போராட்டம் சட்டவிரோதமானது. இது முற்றிலும் சீனாவின் பிரச்சினை. இதில் எந்த ஓர் அந்நிய நாடும் எந்த விதத்திலும் தலையிடக் கூடாது என்றார். (இ-5)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் 2015 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், என்பவற்றை 2015.01.01 தொடக்கம் 2015.12.31 ஆம் திகதி வரை குத்தகைக் காக வழுங்கப்படுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி: | 25.11.2014 பி.ப 1.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : | 26.11.2014 பி.ப 12.00 மணிவரை |
| கேள்விதிறக்கும் திகதி : | 26.11.2014 பி.ப 2.00 மணிக்கு |

1.கேளவிப் பத்திரங்கள் 3 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 2 பிரதிகளை "தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.உள்ளூராட்சிமன்றங்களால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழுங்கப்படமாட்டாது .படிவம் வழுங்கப் பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

4.ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

5.இறைச்சிக்கடைக்கு மாதாந்தவாடகை செலுத்தப்படவேண்டும்.

6.கேள்விப்படிவக்கட்டணம் ,கேள்வித்தொகை மாதவாடகை என்பவற்றுக்கு இரண்டு வீதம் (2%) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (N.B.T)செலுத்தப்படல் வேண்டும்.

7.கேள்வி நிபந்தனைகள் ,அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

8.தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையில் 1/3 பங்கு பகுதியை 05/12/2014 ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ளவேண்டும்.

9.கேள்வி சம்பந்தமான மேலதிக விடயங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகத்திலும் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

## 2015 ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை

| சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன் இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாதகேள்விப் பத்திர பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும்கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்தவாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | |
| 1. மானிப்பாய் பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1345025.00 | |
| 2. மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 10000.00 | 524150.00 | 400.00 |
| 3. மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிகடை | 1000.00 | 5000.00 | 136100.00 | 300.00 |
| 4. மானிப்பாய் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 453750.00 | 400.00 |
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | |
| 1. காக்கைதீவுப் பொதுச் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் இல்லாது) | 1000.00 | 5000.00 | 462195.00 | |
| 2. நவாலி பிரசாத் சந்தை | 1000.00 | 5000.00 | 253173.00 | |
| 3. சாவற்கட்டுச் சந்தை | 1000.00 | 5000.00 | 209935.00 | |
| 4. நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 109960.00 | 400.00 |
| 5. நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 36470.00 | 300.00 |
| 6. நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 59956.00 | |
| 7. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 309000.00 | |
| 8. ஆனைக்கோட்டைச் சந்தி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 60500.00 | |
| பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | |
| 1. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1369950.00 | |
| 2. பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 1000.00 | 5000.00 | 108912.00 | |
| 3. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிகடை | 1000.00 | 5000.00 | 201476.00 | 1500.00 |
| 4. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 133947.00 | 1500.00 |
| பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | |
| 1. மாகியப்பிட்டி பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 161330.00 | |
| 2. இளவாலை பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 159720.00 | |
| 3. மாதகல் பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 120663.00 | |
| 4. மாகியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 61831.00 | 250.00 |
| 5. மாகியப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 12100.00 | 250.00 |
| 6. மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 56265.00 | 250.00 |
| 7. இளவாலைப்பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 156531.00 | |

திரு.சண்முகம் சிவகுமாரன் தவிசாளர் , வலி தென் மேற்கு பிரதேசசபை மானிப்பாய். 14.11.2014 (C-9070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற ஆலோசனையினை எதிர்த்து வழக்குத் தாக்குதல்

## அசாத்சாலி அறிவிப்பு

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியும் என்ற உயர்நீதிமன்றத்தின் ஆலோசனைக்கு எதிராக அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படு இயக்கம் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத்சாலி தெரிவித்தார்.**

ஜனர்திபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்கலாம் என்பது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்ல. ஆலோசனை மட்டுமே. அதற்கு எதிராக யாரும் வழக்கு தாக்கல் செய்யலாம். நாமும் நிச்சயமாக வழக்கு தாக்கல் செய்வோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியபடு இயக்கம் ஏற்பாடு செய்திருந்த ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை அதிகாரபூர்வமாக எவ்வித அறிவிப்பும் தேர்தல்கள் ஆணையகத்தினால் வெளியிடப் படாத நிலையில் ஜனாதிபதி மகிந்த தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் வெளிப்பட்டுள்ளார். அவரது வெற்றிக்கு வழிவகுக்கும் வகையிலான இராசியான தினத்திலேயே தேர்தல் அறிவிக்கப்படவுள்ளது.

உண்மையில் 4 வருட முடிவில் தேர்தலில் போட்டியிட விரும்பினால் அது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதி அறிவிக்க வேண்டும். மாறாக அவரே நாள்குறித்து தனக்கு ஏற்ற நாள் போல தேர்தல் நடத்துவாராயின் இங்கு ஜனநாயகம் கேள்விக்குறியாகயுள்ளதோடு தேர்தல்கள் ஆணையகத்தின் நிலைப்பாடு ஜன நாயகம் இல்லாத சர்வாதிகார ஆட்சியை வெளிப்படுத்துகின்றது.

தேர்தல் பிரசாரத்தினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது அதிகார்பூர்வமற்றவகையில் நடத்திக் கொண்டிருக்கின்றார்.

கிராமப்புறங்களில் இருந்து பேருந்து வண்டிகள் மூலம் அனுதினமும் மக்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு "தன்சல்" வழங்கப்படுகின்றது. கொழும்பில் பிரதான இடங்களில் மின்சார பலகைகள் மூலம் ஜனாதிபதி செய்த நலத திட்டங்கள் ஒலிபரப்பப்படுகின்றது. இது தேர்தல் வரைமுறைகளை மீறும் செயலாகும்.

மேலும் தேர்தல் காலம் நெருங்கி விட்டால் ஜனா திபதி கூறும் முக்கிய விடயம் புலிகள் என்று எதிர்க்கட்சியினரை வர்ணிப்பது புலம்பெயர் தமிழர்களை புலி முத்திரை குத்திப் பேசுவது யுத்த வெற்றியைப் பற்றி பேசிப்பேசி இன துவேசத்தை விதைப்பது உண்மையில் தீவிரவாதி என்றும் 24 கப்பல்களுக்கு சொந் தக்காரர் என்றும் கூறியும் கே.பி யை கைது செய்தது. இப்போது கே.பி அரசாங்கத்துடன் உள்ளார்.

அவரிடம் இருந்த கப்பல்கள் எங்கே? தமிழ் மக்களிடம் இருந்து சூறை யாடிய தங்க நகைகளில் ஒரு பகுதியை தேர்தலினை நோக்காக வைத்து திருப்பிக்கொடுத்த மகிந்த தமிழ் மக்களிடம் இருந்து கைப் பற்றிய முழு தங்க ஆபரணங்களையும் மக்களுக்கு திருப்பி வழங்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார் (இ)

# நீரிழிவு நோயாளிகளுக்கான வழிகாட்டல் கைநூல் வெளியீடு

யாழ் றோட்டறிக்கழக நிதியுதவியுடன் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தால் நீரிழிவு நோயாளிகளுக்கான வழிகாட்டல் எனும் கைநூல் வெளியிடப்படவுள்ளது.

உலக நீரிழிவு தினம் இன்று 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் இன்றைய தினம் பிற்பகல் 3மணிக்கு மேற்படி கைநூல் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.றோட்டறிக் கழகத்தலைவர் எஸ்.அனுராஜ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.இதன் போது நூல் நயப்புரையினை யாழ்.போதனாவைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் சிவன் சுதன் நிகழ்த்தவுள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 130 | 120 | 140 |
| தக்காளி | 150 | 160 | 130 | 160 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 40 | 30 | 50 |
| கோவா | 100 | 120 | 90 | 120 |
| கரட் | 200 | 120 | 150 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 90 | 60 |
| பயற்றங்காய் | 140 | 120 | 140 | 140 |
| லீக்ஸ் | 280 | 220 | 240 | 200 |
| பீற்றூட் | 120 | 80 | 120 | 140 |
| கறிமிளகாய் | 200 | 220 | 170 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 300 | 110 | 160 |
| போஞ்சி | 200 | 200 | - | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 | 80 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 250 | 150 | - | - |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 192

இரத்தினசபாபதி பாலராஜா




சித்ர சறி




சக்தி வேல்

பாஸ்போர்ட் நிரூபிப்பதற்காக மகள் வர்ஷிணியுடன் பொலிஸ் ஸ்டேஷன் கிளம்பினான் சூரியா. ஸ்டேஷனில் 500 ரூபாயும் கையெழுத்தும் வாங்கிக்கொண்டு அனுப்பினார் எஸ்.ஐ.

எஸ்.ஐ அங்கிள் என் பிரெண்டோட அப்பா தான் ஏம்ப்பா அவருக்கு பணம் கொடுத்தீங்க.

அதை கொடுத்தா தான் அவங்க நமக்கு பாஸ்போர்ட் தருவாங்க.

அது தான் இலஞ்சமாப்பா. கண்கள் விரிய கேட்டாள்.

அடுத்த நாள் பள்ளிக்கூடத்திலிருந்து அழுது கொண்டே வரும் தன் மகள் ஸ்வேதாவை ஆதரவாக தூக்கிய எஸ்.ஐ. காரணம் கேட்க.

நேத்து நீங்க என் பிரண்டு வர்ஷினியோட அப்பாகிட்ட இலஞ்சம் வாங்கினீங்களாம் பாட் அங்கிளோட பொண்ணும் பாட் பொண்ணுதான்னு சொல்லி என் கூட பேசமாட்டேன்னு சொல்லிட்டா என்றாள் அழுத படி.

ஒரு கணம் திடுக்கிட்டு போன எஸ்.ஐ. மனத்துக்குள் நினைத்து கொண்டார் இனிமேல்




சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிம




டொறின் மன்மதநாயகம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- கிழக்கு மாகாணம்

## வரலாறு பகுதி I ஒரு மணித்தியாலம்

01. வரலாறு என்பது தனிப்பட்ட பாடமல்லல. மாறாக எல்லாவித பொருட்கள் பற்றிய இயல்புகளும் துறைகளும் கூடி வாழ்கின்ற ஒரு மாளிகை எனும் வரைவிலக்கணத்துக்குரிய வரலாற்று ஆசிரியர்
   1. ஹொலிங்வூட் 2.ஈ.எச்.ஹார்
   3.திரெவிலியன் 4. ஜீ.எச்.வெல்ஸ்

02. இலங்கையின் பல்வேறு இடங்களிலும் பௌத்த பிக்குகள் வசித்த கற்பீலிக்கு மேல் எழுதப்பட்ட மிகிந்தலை, வெஸ்ஸகிரிய, சிதுல்பவ்வ, ரிதிகலை ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டு வகை
   1. குகைக்கல்வெட்டு 2. குன்றுக்கல்வெட்டு
   3. தூண்கல்வெட்டு 3.கற்கலகைக்கல்வெட்டு

03. ஆரியர்கள் தக்கணப் பிரதேசத்திற்கு வருவதற்கு அவர்கள் கடந்து வந்த மலைத் தொடர்
   1.இமய மலைத்தொடர் 2.விந்திய மலைத்தொடர்
   3.சுலைமான் மலைத்தொடர் 4.இந்துகுஸ் மலைத்தொடர்

04.இந்தியாவில் தோற்றம் பெற்ற பதினாறு பெரும் குடியேற்றங்களுள் தட்சசீலம், வாரணாசி, வைசாலி ஆகிய தலைநகரங்களுக்குரிய குடியேற்றங்கள் ஒழுங்கு முறையில் அமைந்த விடைத்தொகுதி
   1. மகதம், கோசலை, அவந்தி 2. வஜ்ஜி, குரு, பாஞ்சாலம்
   3.காம்போஜம், அவந்தி, காசி 4.காந்தாரம், காசி, வஜ்ஜி

05.விஜயனும் அவனது குழுவினரும் குடியிருப்புக்களை அமைத்த கதம்பநதி, கம்பீரநதி,கோணநதி ஆகியவற்றின் தற்போதைய பெயர்களின் சரியான விடைத் தொகுதி.
   1.களனிகங்கை, மகாவலிகங்கை, கல்லோயா
   2.மல்வத்துஓயா, கணதறஓயா, கலா ஓயா
   3.வளவகங்கை, மாணிக்ககங்கை, ஜின்கங்கை
   4. தெதுருஓயா, கணதறஓயா, மகாஓயா

06. "அ" பகுதியில் காணப்படும் சமயக் கட்டடங்களை நிர்மாணித்தவர்கள் "ஆ" பகுதியில் உள்ளனர். அவற்றை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை யாது?

| நிரல் அ | நிரல் ஆ |
|---|---|
| 1. அபயகிரி விகாரை | A மகாபராக்கிரமாகு |
| 2. தூபராமைத்தூபி | B துட்டகைமுனு |
| 3.ஜேத்தவனராமை | C மகாசேனன் |
| 4. மிரிசவெட்டிய | D தேவநம்பியதீசன் |
| 5. கல்விகாரை | E வலகம்பா |

   1.CBAED 2.BAEDC
   3.EDCBA 4. DCBAE

07 பிட்டஹச, மதஹச, அகலஹச போன்ற முப்போக வேளாண்மைச் செய்கைபற்றி குறிப்பிடும் தோணிக்கல்வெட்டு எம்மன்னன் காலத்துக்குரியது.
   1. கீர்த்தி ஸ்ரீ மேகவண்ணன் 2. சத்தாதிஸ்ஸ
   3. நிசங்கமல்ல 4. மகா பராக்கிரமபாகு

08.அநுராதபுரக் காலத்தில் நாடு நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் தெதுறு ஓயாவுக்கும் மகாவலி கங்கைக்கும் வடக்கே உள்ள பிரதேசம் அழைக்கப்பட்ட பெயர்
   1. உருகுணைரட்டை 2.மாயரட்டை
   3.இராசரட்டை 4.மலையரட்டை

09.பின்வரும் ABCDE ஆகிய நிகழ்வுகளை கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை
   1. தலதாசிறித்த எனும் நூல் எழுதப்பட்டமை
   2. ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் கோட்டை அமைக்கப்பட்டமை
   3. களனிவிகாரை மறுசீரமைக்கப்பட்டமை
   4. கவிசிலுமின நூல் எழுதப்பட்டமை
   5. பாண்டியநாடு சென்று தந்ததாது, பாத்திரத்தாது பெற்று வரப்பட்டமை
   1.ABCDE 2.EABCD
   3.DEABC 4.CDEAB

10. தூது இலக்கியங்கள் ஆரம்பமான காலப்பகுதியும், அதிகமாக எழுதப்பட்ட காலப்பகுதியும் அடங்கிய சரியான விடை
   1. குருநாகல், கம்பளை 2. கம்பளை, கோட்டை
   3. தம்பதெனியா, யாப்பகூவ 4. யாப்பகூவ, குருநாகல்

11. இராஜபுத்திரப் பெண்களை அந்தப்புரத்துக்கு கொண்டு வருவதை நிறுத்தியமை மற்றைய சமயத்தவரிடம் இருந்து அறவிட்ட ஜெசியா வரி முறையை ஒழித்தமை போன்ற நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளன்
   1. அவுரங்கசீப் 2. பாபர்
   3. அக்பர் 4. சாஜகான்

12. போலன் கணவாய் ஊடாக வந்த கோரி முகம்மது என்பவனால் அழிக்கப்பட்ட இந்தியப் பிரதேசம்
   1. முல்தான் 2. சிந்து
   3. அசாம் 4. டில்லி

13. சிலுவை யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட நன்மையான விளைவுகளில் ஒன்று
1. கொன்ஸ்தாந்தி நோபிள் நகரம் கைப்பற்றப்பட்டமை
2. ஐரோப்பியர் வர்த்தகம் செய்து வந்த தரைப்பாதை மூடப்பட்டமை
3. ஐரோப்பாவிற்கு கொண்டு செல்லப்பட்ட வர்த்தகப் பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்டமை
4. ஐரோப்பிய வர்த்தகத்துக்கு புத்தொளி கிடைத்தமை

14. ரைட் சகோதரர்களின் முக்கிய கண்டுபிடிப்பான ஆகாயவிமானம் செய்வதற்கான அடிப்படை அமைப்பை வரைந்த ஓவியர்
   1. மைக்கல் ஆஞ்சலோ 2. லியனாடோடாவின்ஸி
   3. பெட்டிசெல்லி 4. ராபயல்

15.ஐம்பெரும் வாவிகளினூடாகச் சென்று வட அமெரிக்காவின் உட்பிரதேசத்தினுள் பிரான்சியக் குடியேற்றங்கள் பரவ வழிவகுத்தவன்
   1.செம்பலேன் 2.கோல்பெயா
   3.வஸ்கொடகாமா 4.கிறிஸ்தோபர் கொலம்பஸ்

16.கடற் பயணங்களுக்காக சென்வின்ஸன்ட் முனையில் வானியல் ஆய்வு மையம் ஒன்றை நிறுவி அதனை நடத்துவதற்கு உதவிகளைப் புரிந்த மன்னன்.
   1.பேடினண்ட் 2.2ஆம் ஜோர்ஜ்
   3.கடலோடி கென்றி 4.8 ஆம் கென்றி

17. "அ" நிரலில் மன்னர்களும் "ஆ" நிரலில் அவர்களுக்குரிய இயற்பெயர்களும் உள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை

| நிரல்-"அ" | நிலை-"ஆ" |
|---|---|
| 1.1ஆம் விமலதர்மசூரியன் | A. சப்புமல் குமாரயா |
| 2.றைகம பண்டாரன் | B.அம்புலுகல குமாரயா |
| 3.1ஆம் இராசசிங்கன் | C.கோணப்பு பண்டார |
| 4.8ஆம் வீரபராக்கிரமபாகு | D.டிகிரி பண்டார |
| 5.6ஆம் புவனேகபாகு | E.மத்தும பண்டார |

   1.EDBAC 2.DBACE 3.BACED 4.CEDBA

18.கி.பி 1602இல் மலையக மன்னனான முதலாம் விமலதர்ம சூரியனை மட்டக்களப்பில் வந்திறங்கி முதன் முதலாகச் சந்தித்த ஒல்லாந்த தூதுவன்
   1.சீபோல்ட்டீவாட் 2.ஸ்பில்பேஜன் 3.விலம்பெக் 4.யோன்பைபஸ்

19.கி.பி 1860இல் வில்லியம் சீமன்ஸ், எமிலிபெரி மாட்டின் தம்பதியினர் இணைந்து விருத்திசெய்த கைத்தொழில் தொடர்பான துறை
   1.இரும்புருக்கு 2.ஆடையுற்பத்தி
   3.நிலக்கரி 4.சுரங்கமறுத்தல்

20.நில அடைப்பு (வேலியடைப்பு) என்பது
   1.இங்கிலாந்தின் கால்வாய் போக்குவரத்தினை இணைத்தல்.
   2.சிறுவிவசாய நிலங்களை இணைத்து பாரிய விவசாயப் பண்ணைகளை அமைத்தல்
   3.கைத்தொழில் பேட்டைகளை ஒன்றிணைத்தல்
   4.நிலக்கரி வயல்களை ஒன்றிணைத்தல்

21.அனைத்திற்கும் மேலாக பணம் முக்கியம் எனக் கருதப்பட்டதனால் உருவான எண்ணக்கரு
   1.பயன்பாட்டு வாதம் 2.தேசியவாதம்
   3.மானிடவாதம் 4.வணிகவாதம்

22.நானே அரசு எனக் கூறிக்கொண்டு சட்டம் இயற்றுதல். அதனை அமுல்படுத்துதல், நீதி வழங்கல் போன்ற அதிகாரங்களைக் கொண்டிருந்த பிரான்சிய மன்னன்.
   1.16ஆம் லூயி 2.12ஆம் லூயி
   3.14ஆம் லூயி 4.15ஆம் லூயி

23. "அ" நிரலில் உள்ள சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் "ஆ" நிரலில் உள்ளனர். அவற்றை தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடை யாது?

| நிரல்-"அ" | நிரல்-"ஆ" |
|---|---|
| 1.இலங்கையின் இறுதி ஒல்லாந்த ஆளுநர் | A.றொபட்பிறவுன்றிக் |
| 2.1762 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனைச் சந்தித்தவர் | B.மெக்டொவல் |
| 3.1803 படையெடுப்பிற்கு தலைமைதாங்கிய தளபதி | C.யோன்பைபஸ் |
| 4.மலையகத்தை கைப்பற்றிய ஆளுநர் | D.பன்ளங்கள்பெக் |

   1.DCBA 2.CBAD
   3.BADC 4.ADCB

24.டி .மியுறன் குழு வருகைக்கு காரணமாக அமைந்த கிளர்ச்சி இடம்பற்ற ஆண்டு
   1.1602 2.1797 3.1803 4.1815

25.மனிங் டெவன் சயர் திட்டத்தின் கீழ் ஆளுநராகச் செயற்பட்டவர்
   1.AE குணசிங்கா 2.CWW கன்னங்கரா
   3.ஹியுகிளிபர்ட் 4.E.W. பெரேரா

26.1818இல் ஆங்கிலேயர் ஆட்சிக்கெதிரான முதலாவது கிளர்ச்சி மலையகத்தில் தோற்றம் பெறுவதற்கு காரணமாக அமையாத விடயம்
   1.பௌத்த பிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை
   2.கண்டிப் பிரதானிகள் அதிருப்தி அடைந்தமை
   3.பிரதானிகளின் வருமான மார்க்கம் தடைப்பட்டமை
   4.டொறிங்டனின் புதிய வரிக்கொள்கை

27.கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கிய மிசனறி இயக்கம்
   1.அமெரிக்கன் மிசனறி
   2.ப்படிஸ்ற் மிசனறி
   3.வெஸ்லியன் மிசனறி
   4.லண்டன் மிசனறி

28. A திசமாறாகம குளம் புனரமைப்பு
   Bவடமாகாணத்தில் முதன்முதலில் நீர்ப்பாசன புனரமைப்பில் ஈடுபட்டவர்
   Cஅம்பாறைக் குளம் புனரமைப்பில் ஈடுபட்டவர்
   Dநீர்ப்பாசனத் திணைக்களத்தை ஆரம்பித்தவர்
மேற்குறிப்பிட்ட பணிகளுள் வெஸ்ற் ரிஜ்வே என்பவரின் பணிகளை கொண்ட விடை
   1.B யும் Dயும் 2.C யும் Aயும் 3.B யும் Aயும் 4.A யும் Dயும்

29.ஐம்பெரும் விவாதங்களுள் ஒன்றான பாணந்துறை விவாதம் இடம்பெற்ற ஆண்டு
   1.1871 2.1873 3.1866 4.1865

30. A.கட்டாய சேவை இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை
   B.இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டமை
   C.16 மாகாணப்பிரிவுகளை 5 மாகாணங்களாகக் குறைக்கப்பட்டமை
   D.ஆளுநர்நாயகம் பதவி அறிமுகப்படுத்தப்பட்மை
மேல் உள்ளவற்றுள் கோல்புறூக் ஆணைக்குழுவின் ஆலோசனைகளைக் கொண்ட விடை
   1.B யும் Cயும் 2.C யும் Dயும்
   3.Aயும் Cயும் 4.B யும் Dயும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களுக்கு ஓர் நற்செய்தி

ஜெயலலிதா சிறைக்கு சென்ற நாள் முதலாக தாடியுடன் வலம் வந்த முதல்வர் பன்னீர், 35 நாட்களுக்குப் பிறகு தாடியை எடுத்துவிட்டார். அத்துடன் ஹேர் கட் செய்து, மீசைக்கு டை அடித்து பழைய பன னீரசெல்வமாக வலம் வர ஆரம்பித்துள்ளார்!

முதல்வராகப் பதவியேற்று ஒரு மாதத்துக்குப் பிறகு தனது சொந்த ஊரான பெரியகுளத்துக்குச் சென்றார் ஓ.பன்னீர்செல்வம்.

கடந்த 31-ம் தேதி சென்னையில் இருந்து மதுரைக்குக் கிளம்பும் ,கடைசி பிளைட்டில் புறப்பட்ட முதல்வர் பன்னீர், இரவு 8.30 மணிக்கு மதுரை விமான நிலையத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கிருந்து ஆண்டிப்பட்டி வழியாக பெரியகுளம் சென்றார்.

அங்கே முதல்வரின் நண்பர்களும் உறவினர்களும் அவருக்காகக் காத்திருந்தனர். இரவு 12 மணி வரை நலம் விசாரிப்புகள் தொடர்ந்தன. அதன் பிறகே வீட்டில் இருந்தவர்கள் வெளியேற்றப் பட்டனர்.

பன்னீர் அமைச்சராக இருந்த சமயத்தில் பெரியகுளத்தில் இருந்தால் காலை சோத்துப்பாறை பக்கம் உள்ள மாந்தோப்பு பகுதிகளில் அவரது நெருங்கிய நண்பர்கள் சிலருடன் வாக்கிங் செல்வது வழக்கம.

ஆனால் இந்த முறை அங்கே செல்லவும் இல்லை. அவருடன் பழைய நண்பர்களும் இல்லை. காலையில் பெரியகுளம் மலையில் உள்ள சிவன் கோயிலுக்குப் புறப்பட்டார். அங்கே சிவன் தரிசனத்தை முடித்ததும், தனது சொந்தத் தொகுதியான போடிக்குச் சென்றார்.

ஜெயலலிதா சிறையில் இருந்த போது அவரது விடுதலைக்காக இறந்தவர்களுக்கு ரூபாய் மூன்று லட்சம் நிவாரணத் தொகை கொடுக்கும் பணியை தனது தொகுதியில் ஆரம்பித்தார். முதல்வர் வருகிறார் என்பதால் போடியில் கூட்டம் கூடியது.

போலீஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டு இருந்தனர். முக்கிய இடங்களில் கூட்டத்தைப் பார்த்ததும் காரில் இருந்தபடியே வணக்கம சொல்லிவிட்டு நகர்ந்தார் முதல்வர்.

பலரும் பூங்கொத்து, சால்வை சகிதமாக நின்றிருந்தனர்.

ஆனால் யாரிடமும் அவற்றை அவர் வாங்கவில்லை. பிற்பகலில் மதுரைக்குச் சென்றார். அங்கே முத்துராமலிங்கத் தேவர் குருபூஜைக்கு வழங்கிய தங்கக் கவசத்தை திருப்பி வங்கியில் வைக்க வேண்டியிருந்தது.




அந்த சம்பிரதாயங்களை முடித்தார். வங்கிக்கு வெளியே பலரும் கோரிக்கை மனுக்களுடன் காத்திருந்தனர். யாரையும் சந்திக்காமல் அங்கிருந்து முதல்வரின் கார் கிளம்பியது. சற்று தூரம் சென்றதும் முதல்வரின் கார் நின்றது. வழியில் ஓர் இளைஞர் கையில் மனுவுடன் நின்றிருந்தார்.

அவரை அருகே அழைத்தார் முதல்வர் பன்னீர். என்ன பிரச்சினை? என்றும் கேட்டார். மதுரை காமராஜர் பல்கலைக்கழக அனுமதி தந்து நடத்திய கல்லூரி ஒன்றில் சானிடரி இன்ஸ்பெக்டர் படிப்பு படித்த மாணவர்களை இன்டர்வியூ வரை அழைத்து எங்கள் படிப்பு செல்லாது என்று சொல்லிவிட்டார்கள் என்று அந்த இளைஞர் சொல்லியிருக்கிறார். உங்க போன் நம்பர் இதுல எழுதியிருக்கீங்களா?' என்று முதல்வர் கேட்க... அந்த இளைஞரும் தலையாட்ட, சரி நான் பார்த்துக்குறேன்!' என்று அங்கிருந்து புறப்பட்டார்.

மறுபடியும் முதல்வர் சென்ற இடம் போடி. சொந்தத் தொகுதி என்பதால் அங்கே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து வைத்திருக்கிறார் பன்னீர். அந்த வீட்டுக்கு அ.தி.மு.க நிர்வாகிகளை வரச் சொல்லி சந்தித்துப் பேசினார்.

இரவு அந்த வீட்டிலேயே தங்கிவிட்டார். மறுநாள் காலைதான் அந்த ஆச்சர்யம். இரவு தாடியுடன் படுக்கப்போன பன்னீர், மறுநாள் காலை வெளியே வந்தபோது தாடியை எடுத்து, ஹேர் கட் செய்து மீசைக்கு டை அடித்து பிரகாசமாகக் காட்சியளித்தார். வழக்கமாக நெற்றியில் விபூதியும், குங்குமமும் வைக்கும் பன்னீர், அன்று ஜெயலலிதா ஸ்டைலில் செந்தூரத்தில் பொட்டு வைத்திருந்தார்.

பன்னீருக்கு வழக்கமாக ஹேர் கட் செய்யும் சலூன்காரரர் பெரியகுளத்தில் இருந்து போடி வீட்டுக்கு வரவழைக்கப்பட்டு பன்னீரை அலங்கரித்ததாகச் சொல்கிறார்கள். சொந்த ஊருக்கு வந்த முதல்நாள் தாடியுடன் இருந்தவர், மறுநாள் தாடி எடுத்த ரகசியம் மட்டும் யாருக்கும் தெரியவில்லை.

போடியில் கட்சிக்காரர்கள் வீட்டு கல்யாண விஷேசங்களுக்கு சென்ற முதல்வர், மதியம் கடமலைக் குண்டு பகுதியில் உள்ள நரியூத்துக்குச் சென்றார். அந்தக் கிராமத்தில் இறந்தவர்கள் குடும்பத்துக்கு நிதி வழங்கினார்.

வழியில் தென்னை மரத்து நிழலில் முதல்வரின் கார் நின்றது. தேனியில் இருந்து வாங்கி வந்திருந்த எலு மிச்சை, தயிர் சாதங்களை காரில் இருந்தே சாப்பிட்டார். இப்படி தென்னை மரத்து நிழல்ல வண் டியை நிறுத்தி சாப்பிட்டு எவ்வளவோ நாள் ஆச்சு... என்று சிலாகித்தா ராம் முதல்வர்.

மீண்டும் பெரியகுளம் வீட்டுக்குச் சென்றவரிடம், மனு கொடுக்க நிறைய பேர் காத்திருந்தனர். அவர்களிடம் மனுக்களை வாங்கிக் கொண்டு, இரவு வீட்டில் இருந்து திண்டுக்கல்லுக்குப் புறப்பட்டார். அமைச்சராக இருக்கும்போது வழககமாக பாண்டியன் எக்ஸ்பிரஸில் தான் சென்னைக்குச் செல்வார். அன்றும் அதேபோல பாண்டியன் எக்ஸ்பிரஸில் புறப்பட்டார் முதல்வர் பன்னீர்.

எளிமை...
எளிமை... எளிமை...!

**- யூனியர் விகடன்**

# ஈழத்தமிழர் நம் தொப்புள்கொடி உறவுகள்; அவர் வலி தீர்ப்பது எம் பொறுப்பு - யூனியர் விகடன்

இலங்கையில் இன்னலுக்கு உள்ளாகும் தமிழர்களின் நிலை இதுதான் என்ற உண்மையை வலியுடன் பதிவு செய்து விட்டுச் சென்றிருக்கிறார் இலங்கை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசிய பேச்சு, மர்மத்திரைகள் பலவற்றை அகற்றியிருக்கிறது. தெற்கிலிருந்து சிங்களவர்களை அழைத்து வந்து வடக்கில் குடியேற்றும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இராணுவத்தினருக்கு வீடுகள் கட்டித் தருவது முதல், தமிழர் பகுதிகளில் சிங்களவர்களை அதிகாரிகளாக நியமிப்பது வரை சிங்களமயமாக்கம் பல வழிகளிலும் நடந்து வருகிறது என்கிறார்.

போரின் விளைவாக, ஒரு லட்சம் தமிழ் விதவை கள் உருவாகியுள்ளனர் என நிஜ நிலைமையை வேதனையுடன் விபரிப்பவர், இந்தியா சார்பாக இலங்கைத் தமிழர்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் ஊழல்கள் மலிந்திருக்கின்றன, அரசியல் சகாயம் பெற்றவர்களுக்கே அந்த வீடுகள் கிடைக்கின்றன என்கிறார். உதவியிலும் ஊழல் நடக்கிறது என்பது பெரும் தலைகுனிவு.



ஈழத் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுவது குறித்து தமிழ்நாட்டில் இருந்து எந்தக் குரல் எழுந்தாலும் இந்தியா சார்பாக இலங்கையில் செய்யப்பட்டுவரும் மறுவாழ்வு பணிகளைத்தான் இந்திய அரசு பதிலாக முன்னிறுத்தும். அந்த மறுவாழ்வின் உண்மை நிலவரம் இதுதான் என்னும்போது அதை உடனே சரிசெய்ய வேண்டியது இந்தியாவின் பொறுப்பு.

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மற்றொரு செய்தி தமிழ் நாட்டுக்கு.... எங்களுக்கு இப்போது தேவை உணர்ச்சிகள் அல்ல; சட்ட பூர்வமானதீர்வு என்கிறார். இந்தக்கருத்தை, தமிழக அரசியல்வாதிகள் கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும்.

ஈழத் தமிழர்கள் நமது தொப்புள் கொடி உறவுகள் என்ற உணர்ச்சிபூர்வ மன நிலைக்கு அப்பாலிருந்து இதைச் சிந்திக்க வேண்டும்.

நமது உணர்ச்சிவசப்பட்ட போராட்டங்கள் அங்கு புதிய துன்பம் ஒன்றைத் தோற்றுவித்துவிடக்கூடாது. எனில், நடைமுறையில் எது ஈழத் தமிழர்களுக்கு நன்மை தரும்? என்பதைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். முக்கியமாக, இந்திய அரசு தனது வரலாற்றை தானே ஒருமுறை நினைவூட்டிக்கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர் சிக்கலைத் தீர்க்க 1987 இல் மேற்கொள்ளப்பட்ட ராஜீவ்காந்தி-ஜெயவர்த்தன ஒப்பந்தத்தில் தமிழர் தரப்பின் சார்பாகக் கையெழுத்திட்டது இந்திய அரசாங்கம் தான்.

ஓர் இனப்பேராட்டத்தின் வரலாற்று' முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் அந்த இனத்தின் பிரதிநிதியாக தானே முடிவெடுத்துச் செயற்பட்ட இந்திய அரசு, அந்தப் பொறுப்பை இப் போதாவது உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஈழத் தமிழர்களின் வலி தீர்க்க வினையாற்ற வேண்டும்!

*வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சென்னையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஆற்றிய உரையை மையமாகக் கொண்டு யூனியர் விகடன் ஆசிரியர் தலையங்கத்தில் பொறுப்பை நிறைவேற்றுங்கள் எனும் தலைப்பில் வெளிவந்த கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலுள்ள கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்

யாழ். பிரதேச செயலகத்துக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் அவரவர் துறைகள் சார்பாக யாழ். இரத்தினா விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பேரவை யின் விசேட கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பேரவையின் தலைவர் திருமதி.சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




இசை, கலை, இலக்கியத் துறை சார்ந்தவர்கள் தற்போதும் தமது துறையில் ஈடுபட்டிருக்கிறார்களா? எனக் கவனம் செலுத்திய பின்னர் குறித்த விருதை வழங்கிக் கௌரவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக் கூட்டத்தில் கலாசாரப் பேரவையின் இவ் வருடத்துக்கான கலாசார விழாவை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்துவ தெனவும் முதல் தடவையாக இவ்வருடம் சிறப்பு மலர் வெளியீடு செய்வ தெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ-7-23)




# இடைநடுவில் பயணிகளை இறக்கி விடும் பேருந்துகள்

## மக்கள் குற்றச்சாட்டு

(பொற்பதி)

**யாழ்.வடமராட்சி கிழக்கில் கேவில் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம், பருத்தித்துறை நோக்கி பயணிகள் பேருந்து சேவையினை நடத்தி வரும் தனியார் பேருந்து சாரதிகள் பயணிகளை இடைநடுவில் இறக்கி விட்டு செல்வதாக பயணிகளால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

வடமராட்சி கிழக்கில் உள்ள வீதிகள் சீரான போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் காணப்படவில்லை.

இதனால் தற்போது பெய்து வரும் பருவமழை காரணமாக வீதி எங்கும் உள்ள கிடங்குகளில் பெருமளவிலான வெள்ளம் தேங்கிகாணப்படுகிறது.

இதன் காரணமாகவே பேருந்து சாரதிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கேவில் வரைக்குமான தொடர்ச்சியான பயணத்தை நடத்துவது இல்லை.

இதற்கு மாறாக ஆழியவளை, வெற்றிலைக்கேணி போன்ற பகுதிகளோடு தமது பேருந்து சேவைகளை நிறுத்தி விடுகின்றார்கள்.

இதனைவிட தொடர்ச்சியான பேருந்து சேவையினை நடத்தி வரும் சில தனியார் பேருந்து சாரதிகள் அப்பேருந்துகளுக்கு சில சமயங்களில் கிடைக்கின்ற வாடகை சேவைகளை கருத்திற்கொண்டு பயணிகள் சேவையினை முற்றுமுழுதாக முடிக்காது இடைநடுவில் பயணிகளை இறக்கி விட்டு வாடகை சேவைக்கு செல்கின்றனர்.

இவ்வாறு இறக்கி விடும் சந்தர்ப்பங்களில் தமது பேருந்து பழுதுபட்டுவிட்டன. எனவே தொடர்ச்சியான சேவையினை எம்மால் தொடர முடியாதுள்ளது என பொய்யான வார்த்தைகளை பயணிகளிடம் கூறிவிட்டு பேருந்து சாரதிகள் தமது வாடகை சேவைகளுக்குச் சென்று விடுகின்றனர்.

இத்தகைய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மருதங்கேணிக்கு சென்ற தனியார் பேருந்தே இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டது. அப்பேருந்தில் வந்த பயணிகளை ஆழியவளைச் சந்தியில் இறக்கி விட்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 20 பயணிகளுக்கு மேற்பட்டவர்கள் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளினால் பயணிகள் மழையில் நனைந்தபடி 10 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றுள்ளனர்

எனவே வடமராட்சி கிழக்கு நோக்கிய பயணிகள் தனியார் பேருந்து சேவையில் உரிய தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7-64)

# முன்னாள் போராளிகளிடம் வடமராட்சியில் விசாரணை

(பருத்தித்துறை)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளும் குழுவினரால் முன்னாள் போராளிகளது குடும்பங்கள் அச்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய சம்பவம் ஒன்று வடமராட்சியில் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து வந்த மேற்படி குழுவினர் முன்னாள் போராளிகள் தொடர்பாக அப்பிர தேசங்களில் விசாரித்ததுடன் போராளிகளின் குடும்பங்களிடம் சென்றும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இப்போராளிகள் விடுவிக்க ப்பட்டு 5 வருடங்கள் கடந்த நிலையிலும் தற்போது தேடி வந்த குழுவினர் இவர்களை விசாரிப்பது போன்று பலதரப்பட்ட கேள்விகளை எழுப்பிச் சென்றுள்ளனர் என அப்பிரதேச மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இச் செயற்பாட்டால் முன்னாள் போராளிகளும் அவர்களது குடும்பங்களும் அச்ச நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7-10)

# செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் சம்மேளன பிரதிநிதிகள் யாழ். வருகை

(நல்லூர்)

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி நாட்டையே உலுக்கிய சுனாமி ஆழிப் பேரலையின்10ஆம்ஆண்டுநிறைவை முன்னிட்டு சர்வதேச செஞ்சிலுவைச் செம்பிறை சங்கங்களின் சம்மேளன பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று நாளை சனிக்கிழமை யாழ். மாவட்ட செஞ்சிலுவைச்சங்க கிளைக்கு வருகை தரவுள்ளது.

சீனா, சிங்கப்பூர் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தேசியத்தலைமையகம் போன்றவற்றின் பிரதிநிதிகள் கொண்ட குழுவினரே இவ்வாறுவருகை தரவுள்ளனர்.

இதன் போது யாழ்.மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தில் கலந்துரையாடல் ஒன்றையும் நிகழ்த்தவுள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.மாவட்ட கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தலைமையில் மேற்படி கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சுனாமியினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் மேற்படி குழுவினர் பார்வையிடவுள்ளதுடன் சுனாமியால் பாதிக்கப்பட்டுவீடுகள் கட்டிக் கொடுக் கப்பட்டுள்ள வீட்டுத் திட்டப் பயனா ளிகளுடனும் கலந்துரையாடல்ஒன்று இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக் கது. (இ-7-134)

# பாடசாலையின் பரிசளிப்பு விழா

(இருபாலை)

யாழ்.சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய முதல்வர் எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, முன்னாள் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் எஸ்.எச்.குலநாயகம் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-136)

# மூத்த இசையறிஞர் மூவருக்கு கௌரவம்

அகில இலங்கை கம்பன் கழகம் இம்மாதம் 14,15, 16, 17 ஆம் திகதிகளில் நடத்தவுள்ள ஸ்ரீ இராமநாம கானாமிர்தம் எனும் பெயரிலான இசைவேள்வியின் மூன்றாம் நாளான 16ஆம் திகதி ஞாயிறு மாலை நடைபெறவுள்ள திருமதி பம்பாய் ஜெயஸ்ரீயின் இசைக்கச்சேரிக்கு முன்பாக யாழ்ப்பாணத்தின் மூத்த இசைக் கலைஞர்களான சங்கீதபூஷணம் எஸ்.பாலசிங்கம், சங்கீதபூஷணம் எஸ்.கணபதிப்பிள்ளை, புல்லாங்குழல் வித்துவான் டாக்டர் கங்காதரன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சங்கீதபூஷணம்பாலசிங்கம்அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்று சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவராவார். யாழில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் எனும் இசை அமைப்பை ஸ்தாபித்து பலகாலம் இசைப்பணி ஆற்றிய இவர் இசை ஆசிரியராய் பணியாற்றினார். இலங்கை வானொலியில் சுப்பர் கிறேட் தர வித்துவானாக விளங்கியவர் இவர்.

சங்கீதபூஷணம்கணபதிப்பிள்ளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று சங்கீதபூஷணம் பட்டம் பெற்றவராவார்.

பல காலம் இசை ஆசிரியராகவும் இசைத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியதோடு இராமநாதன் நுண்கலைப் பீடத்தில்விரிவுரையாளராகவும் இசைப் பரிசோதகராகவும் பணியாற்றியுள்ளார். வடமாகாண சங்கீத சபையின் உப தலைவரான இவரும் இலங்கை வானொலியில் சுப்பர் கிறேட் தர வித்துவானாக விளங்கியவர்.

டாக்டர் கங்காதரன் புகழ்பெற்ற மருத்துவராய் இருந்தபோதும் தனது சுய ஆர்வத்தால் யாழ்ப்பாணத்திலேயே இசை பயின்று தேர்ச்சி பெற்றார். மூர்த்தி ஐயரிடம் முறைப்படி இசைபயின்ற இவரது புல்லாங்குழல் இசைக்கச்சேரிகள் யாழ்ப்பாணத்தில் நடந்த பல இசைவிழாக்களிலும் நடைபெற்றுள்ளன.

இளங்கலைஞர் மன்றம் போன்ற இசை அமைப்புக்களில் இசை அறிஞர்களோடு ஒன்றிணைந்து இசைத்துறைக்கு இவர் ஆற்றிய பணிகள் பல.

இவ் இசை அறிஞர்கள் மூவரையும் கௌரவிப்பதில் பெருமை கொள்வதாக அகில இலங்கைக் கம்பன் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அகில இலங்கை கம்பன் கழகம் ஸ்ரீ இராமநாமகானாமிர்தம் எனும் பெயரிலான இசை வேள்வியினை இம்மாதம் 14, 15,16 , 17 (வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள்) ஆகிய தினங்களில் யாழ்.நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இவ்விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த பிரபல இசைமேதைகளான பத்மஸ்ரீ கத்ரி கோபால்நாத், கலைமாமணி ஸ்ரீமதி கன்னியாகுமாரி ஆகியோர் இணைந்து வழங்கும் ஸக்சபோன், வயலின் சோலா இசை விருந்து நடைபெறவுள்ளது. இரண்டாம், மூன்றாம் நாட்களில் நாத வாணி பம்பாய் ஜெயஸ்ரீயும் கான கலாநிதி நெய்வேலி ஆர்.சந்தான கோபாலனும் பாடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

981

## வேலு வீட்டில் தங்கக்கட்டி!



..அதிக நாட்கள் அணிலை பெட்டிக்குள்ளேயே வைத்திருக்க முடியவில்லை. தோட்டத்திலும் வீட்டிலும் புகுந்து புகுந்து வந்தது.

ஓய்வெடுக்க மட்டுமே பெட்டிக்குப் பக்கத்தில் சென்றது.

ஒருநாள், தன்னுடைய வண்ணப் பெட்டியிலிருந்து சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகிய நிறங்களைக் குழைத்து எடுத்து, அணிலின் வாலில் பட்டைபட்டையாகப் பூசிவிட்டான் வேலு.

வாலை சுழற்றிச் சுழற்றி வீசியபடி தோட்டம் முழுக்க சுற்றிச் சுற்றி வந்தது அணில்.

"எங்கே இருந்தாலும் இந்த நிறத்தை வெச்சு என் தங்கக கட்டியைக் கண்டுபுடிச்சிடுவேன் என்று பெருமையோடு சொன்னான்.

ஒருநாள், வேலுவின் அத்தை குடும்பத்தினர் வந்திருந்தார்கள்.

அத்தையின் பிள்ளைகள், அணிலைத் தொட்டுப் பார்க்கவும் உள்ளங்கையில் ஏந்தவும் விரும்பினார்கள்.

உற்சாகத்தின் வேகத்தில் அளவு மீறி அணிலை அழுத்தி விட்டனர்.

அணில், அவர்களின் உள்ளங்கையில் சுரண்டிவிட்டது.

அவர்கள் அலறியதும், ஓடிச் சென்று மரத்தில் பதுங்கியது.

அம்மாவுக்கு வருத்தம்.

வேலுவிடம் சொல்லி, சொந்தக்காரங்களா இருந்ததால பொறுத்துக்கிட்டாங்க.

வெளி ஆளா இருந்தா, சண்டைதானே வரும்? பேசாம, அந்த அணிலை கோயில் பக்கமா விட்டுரு என்றார்.

பயத்துல செஞ்சிருக்கும்மா. இனி அப்படி நடக்காமப் பார்த்துக்கலாம் என்றான் வேலு.

என்னங்க, உங்க வீட்டுக்குள்ளே அணில் எப்பவும் சுத்திக்கிட்டே இருக்குது.

கவனமா இருங்க.

சாப்பாட்டுப் பொருள்களில் வாயை வெச்சிடப்போகுது" என்று அக்கறைப்பட்டார் பக்கத்து வீட்டுக்காரர்.

திருப்பதி பிரசாதம் கொடுக்க வந்த எதிர்வீட்டுப் பெரியம்மா, கோழி, ஆடு, மாடு வளர்ப்பாங்க.

நீங்க அதிசயமா அணில் வளர்க்கிறீங்க? தடுப்பு ஊசி போட்டுக்கங்க என்று பயமுறுத்தினார்.

திருமணப் பத்திரிகை வைக்க வந்த மணியக்காரத் தாத்தா, அணில்,' குரங்கு எல்லாமே புராண காலத்தில் தெய்வத்துக்குத் துணையாக இருந்த உயிர்கள்.

அதை சரிசமமா, நம்மோடு வெச்சுக்கிறது தெய்வக் குற்றம் என்று குழப்பினார்.

இப்படிப் பேச்சு உருவாகும் ஒவ்வொரு முறையும் அம்மா வேலுவுக்கு அறிவுரை சொல்லி, அணிலை விட்டுவிடச் சொல்வார்.

வேலு, பேசிச் சமாளிப்பான்.

ஒருநாள் காலை நேரம்.

சிற்றுண்டி சாப்பிட கூடத்துக்கு வந்த அப்பா, அணிலின் வாலை மிதித்துவிட்டார்.

வலி பொறுக்காத அணில், கிறீச்' என்று சத்தம் எழுப்பியபடி அவர் காலில் கடித்துவிட்டது.

ஜன்னல் வழியாக எகிறிக் குதித்து தப்பியது.

நான் சாயங்காலம் வரும் போது, அது இங்கே இருக்கக் கூடாது என்று எச்சரித்துவிட்டுப் போனார் அப்பா.



மாலை வரை காத்திருக்கவும் அம்மா தயாராக இல்லை.

வேலு பள்ளிக்குக் கிளம்பும் போது, ஒரு கைப்பையில் அணிலைப் பிடித்துக்கொடுத்து, போற வழியில் கோயில் தோட்டத்துல விட்டுரு என்றார்.

வேலுவின் முகம் சுருங்கியது.

அம்மா, அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

நீ விடலைன்னா, மதியம் நானே கொண்டுபோய் விட்டுருவேன் என்றார்.

தலை குனிந்தபடி அந்தப் பையை வாங்கிக்கொண்டான் வேலு.

அணிலுடன் கழித்த நாட்களை, கோயில் வரை அசைபோட்டபடி நடந்தான்.

கோயில் தோட்டத்தில் பையைக் கவிழ்த்து, அணிலை ஓட விட்டான்.

தலையைத் திருப்பித் திருப்பி மிரண்டு பார்த்த அணில், வாலைச் சுழற்றியபடி ஒரு மரத்தின் மீது ஏறியது.

கிளைகளுக்குப் பின்னால் மறைந்துவிட்டது.

அன்று முழுக்க பள்ளியில் வேலு யாருடனும் பேசவில்லை.

அணிலைப் பற்றிய நினைவாகவே இருந்தான்.

சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பும் வழியில், தோட்டத்துக்குள் எட்டிப் பார்த்தான்.

தங்கக்கட்டியின் முகம் எங்கேயும் தென்படவில்லை.

சத்தமாக "தங்கக்கட்டி" என்று கூப்பிட்டபடி தேடினான். அணிலைப் பார்க்கவே முடிய வில்லை.

அடுத்த நாள் முதல் காலை, மாலை என இரண்டு வேளைகளிலும் கோயிலுக்குச் சென்று தேடியபோதும் வாலில் நிறம்பூசப் பட்ட அவனுடைய தங்கக்கட்டி. வேலு பார்வையில் படவே இல்லை.

அணிலின் குணத்தை மனிதர்கள் புரிந்துகொள்ளவிலை. மனிதர்களைப் புரிந்துகொண்ட அது, விலகிச் சென்றுவிட்டது.

*(முற்றும்)*





## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2014 14

- ❖1885 - செர்பியா பல்கேரியா மீது போர் தொடுத்தது.
- ❖1889 - நெல்லி பிளை என்ற பெண் ஊடகவியலாளர் 80 நாட்களுக்குள் உலகைச் சுற்றி வரும் தனது திட்டத்தை 72 நாட்களுக்குள் வெற்றிகரமாக முடித்தார்.
- ❖1918 - செக்கொஸ்லவாக்கியா குடியரசாகியது.
- ❖1922 - பி.பி.சி தனது வானொலி சேவையை ஐக்கிய இராச்சியத்தில் தொடக்கியது.
- ❖1956 - ஹங்கேரியில் போர் முடிவுக்கு வந்தது.
- ❖1963 - ஐஸ்லாந்து தீவின் அருகில் உள்ள சூர்ட்ஸி என்னும் தீவு வட அட்லாண்டிக் கடலில் எழுந்த எரிமலையால் புதிதாகத் தோன்றியது.
- ❖1965 - வியட்நாம் போர்: லா ட்ராங் என்ற இடத்தில் அமெரிக்கப் படைகளுக்கும் வடக்கு வியட்நாம் படைகளுக்குமிடையில் பெரும் போர் வெடித்தது.
- ❖1969 - அப்பல்லோ திட்டம்: அப்போலோ 12 விண்கப்பல் மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனை நோக்கிச் சென்றது.
- ❖1971 - மரைனர் 9 செவ்வாய் கோளை சென்றடைந்தது. இதுவே பூமியிலிருந்து வேறொரு கோளின் செயற்கைச் செய்மதியாகச் செயற்பட்ட முதலாவது விண்கலமாகும்.
- ❖1975 - மேற்கு சகாராவை விட்டு ஸ்பெயின் விலகியது.
- ❖1990 - கிழக்கு ஜேர்மனி மற்றும் மேற்கு ஜேர்மனிகளின் இணைப்பிற்குப் பின்னர் போலந்துக்கும் ஜேர்மனிக்குமிடையிலான எல்லைகள் வரையறுக்கப்பட்டன.
- ❖1991 - நாடு கடந்த நிலையில் வாழ்ந்த கம்போடியாவின் இளவரசர் நொரொடோம் சிஹானூக் 13 ஆண்டுகளின் பின்னர் புனோம் பென் திரும்பினார்.
- ❖1996 - டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- ❖2001 - ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை ஆப்கான் கூட்டுப் படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன.

### பிறப்புகள்

- ❖1840 - குளோட் மொனே, பிரெஞ்சு ஓவியர் (இ. 1926)
- ❖1889 - ஜவகர்லால் நேரு, இந்தியப் பிரதமர் (இ. 1964)
- ❖1930 - எட்வேர்ட் வைட், நாசா விண்வெளி வீரர் (இ. 1967)
- ❖1931 - இரா. பெருமாள் ராசு, இந்தியக் கவிஞர்
- ❖1954 - காண்டலீசா ரைஸ், ஐக்கிய அமெரிக்காவின் 66ஆவது செயலாளர்
- ❖1971 - அடம் கில்கிறிஸ்ற், ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்.

### இறப்புகள்

- ❖1831 - ஹெகல், ஜேர்மன் நாட்டு மெய்யியல் அறிஞர் (பி. 1770)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தான்தோன்றித்தனமாக சி.வி.செயற்பட முடியாது

## அரசு திட்டவட்டம்

**வடமாகாண முதலமைச்சர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதை தவிர்த்து தான்தோன்றித்தனமாக செயற்பட முடியாது. எனவே அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அவருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று முன்தினம் சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வலியுறுத்தினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத்தின் கைத்தொழில், வாணிபம், முதலீட்டு ஊக்குவிப்பு, கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகம் ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் வடக்கில் கூட்டுறவுத்துறையின் வீழ்ச்சி குறித்து கருத்துக்களை முன்வைத்தார். மற்றும் கட்டட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாண கூட்டுறவுத்துறை உள்ளிட்ட அனைத்து விடயங்களின் மேம்பாடுகள் குறித்தும் நாம் செயற்பட்டு வருகின்றோம். இவ் வேலைத்திட்டத்தில் வடமாகாண சபையும் இணைந்து செயற்பட வேண்டும்.

இதற்கான அழைப்பினை விடுத்து வருகின்றோம். இணைத்துக் கொண்டும் செயற்படுவதற்கும் முயற்சிக்கின்றோம். எனினும் வடமாகாண முதலமைச்சர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதை தவிர்த்தே வருகிறார். இவ்விடயத்தில் அவர் தான்தோன்றித்தனமாக செயற்பட்டு வருகிறார்.

அவரால் அப்படி செயற்படமுடியாது. ஆகவே அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு வடமாகாண முதல்வருக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டும். நாம் இணைந்து செயற்படவே விரும்புகின்றோம். அவரிடம் அந்த எண்ணம் இலலை என்றார்.

நாம் எமது முதலமைச்சருக்கு அழுத்தங்களை பிரயோகிப்போம். எனினும் அரசாங்கம் தனது பொறுப்புக்களை உணர வேண்டும்.

கடற்றொழில்வளத்துறை அமைச்சர் வடமாகாண சபையுடன் இணைந்து செயற்பட்டு வருகிறார். வடமாகாண சபையும் அவருடன் இணைந்து செயற்பட்டு வருவதை நான் இந்த சபையில் கூறியிருந்தேன்.

ஆகவே வடமாகரண சபை அரசுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளது. ஆனால் அரசு வடமாகாண முதலமைச்சரையும் இணைத்துக்கொண்டு செயலாற்ற வேண்டும். எதிர்காலத்திலாவது இந்த முயற்சிகளை முன்னெடுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஆளும் தரப்புடன் இணையமாட்டேன்

### மங்கள தெரிவிப்பு

எந்தக் காரணத்திற்காகவும் ஆளும் கட்சியில் இணைந்து கொளளப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். ஆளும் கட்சியில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக்கொள்வதாக ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து சிங்கள ஊடகமொன்று மங்கள சமரவீரவிடம் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார். அமைச்சுப் பதவி ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தாம் ஆளும் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை. அரசாங்கத்தின் எந்தவொரு அமைச்சரும் என்னை சந்தித்து பேசவில்லை. எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். சில ஊடகங்கள் அண்மைய நாட்களில் எவ்வித அடிப்படையுமின்றி என்னைப்பற்றி அவதூறு செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (இ-5)

## இலங்கை நீதித்துறை முன்னேறியுள்ளதாம்

### சீன குழுவினிடம் நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



இலங்கையில் ஏற்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளோடு இணைந்ததாக நீதித்துறையும் முன்னேற்றம் கண்டு வருவதாக, நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சீன உயர் நீதிமன்றத்தில் நிறைவேற்று உதவி தலைவர் நீதியரசர் ஷென் டியோங் தலைமையிலான நீதிபதிகள் அடங்கிய உயர்மட்ட தூதுக் குழுவினரிடம் இலங்கையின் நீதியமைச்சர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் முற்பகல் நீதியமைச்சர் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். நீதியமைச்சர் ஹக்கீமுடன் அமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டி சில்வா, சிரேஷ்ட உதவிச்செயலாளர் ஏ.கே.டீ. அர்ந்து, அமைச்சரின் இணைப்புச் செய லாளர் ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (இ-5)

## ஒக்டோபர் மாதம் 3,700 பேர் டெங்கு நோயினால் பாதிப்பு

இலங்கையில் கடந்த ஒக்டோபர் மாதம் 3 ஆயிரத்து700 பேர் டெங்குக் காய்ச்சலுக்குள்ளாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த்தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் தகவல்களின் பிரகாரம், கடந்த வருடத்தின் ஒக்டோபர் மாதத்திலும் பார்க்க இவ்வருடத்தின் ஒக்டோபர் மாதத்தில் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த 2013 ஒக்டோபர் மாதம் ஆயிரத்து 600 பேர் வரை டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும், இவ்வருடத்தின் ஒக்டோபர் மாதம் வரையான காலப் பகுதியில் 35ஆயிரத்து842 பேர் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 32ஆயிரத்து 63 நோயாளர்களே டெங்குக்காய்ச்சலுக்கு ஆளாகியிருந்தனர்.

அத்துடன், மேல்மாகாணத்திலும் கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 16ஆயிரத்து 540 போ வரை மேல் மாகாணத்தில் பாதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாண்டில் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் 20 ஆயிரத்து 235 பேர் டெங்குக்கு ஆளாகியுள்ளனர்.

இதற்கமைய, கொழும்பு மாவட்டதில் 11 ஆயிரத்திற்கும் அதிகமனோர் டெங்குக் காய்ச்சலுக்கு ஆளாகியுள்ளமை பதிவாகியுள்ளதாக தொற்று நோய்த்தடுப்புப் பிரிவின் தகவல் தெரிவிக்கிறது. இவ்வெண்ணிக்கையில் மொரட்டுவ, கல்கிசை, தெஹிவளை. மஹரகம, கொலன்னாவ ஆகிய பிரதேசங்களில் 9 ஆயிரம் பேரும் கொழும்பு நகர் பகுதியில் 2 ஆயிரதது 700 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் தொடர்ச்சியாக நிலவிய மோசமான வரட்சியான காலநிலையின் பின்னர் ஏற்பட்ட மழை வீழ்ச்சியைத் தொடர்ந்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

நிறுவன வளாகங்களையும் வீட்டுச் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதுடன் நுளம்புகள் காணப்படும் இடங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளிலும் உரியவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனவும் காய்ச்சல் இருநாட்களுக்கு மேல் நீடித்தால் அரச வைத்தியசாலைகளுக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறும் மக்களை அறிவுறுத்தும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு டெங்கு நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக டெங்கு ஒழிப்புப் பீரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தொடர்மாடி குடியிருப்பினை மகிந்த கையளிக்கவுள்ளார்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

மிகப்பெரிய தொடர்மாடி குடியிருப்பான ரந்திய உயன குடியிருப்பு தொகுதி எதிர்வரும் 18 ஆம் திகதி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மைய பணிப்பாளருமான பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மோதரை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரந்திய உயன குடியிருப்பு தொகுதியில் ஆயிரத்து 137 வட்டுகள் சகல வசதிகளுடன் அமைககப்பட்டுள்ளன.

மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வந்த மக்களுக்காக இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. குறித்த பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தமக்கான முகவரி இல்லாத நிலையில் வாழ்ந்தார்கள்.

தாச்சிவத்தை, போக்குவத்தை, 31 ஆம் வத்தை என்று தமக்கான முகவரிகளை கொண்டிருந்த மக்களுக்கு இப்போது சிறந்த முகவரி கிடைத்துள்ளது. இனி அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி ரந்திய உயனவில் வசிக்கின்றோம் என கூறலாம்.

இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள், இனி தமது நண்பர்களிடம் தாம் வசிக்கும் முகவரியை தயங்காமல் கூறமுடியும். இது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப் பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களினால் சாத்தியமாகியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, இங்குள்ள மக்களை கொழும்பிலிருந்து அகற்றி வெளிப்பிரதேசங்களில் குடியமர்த்த போவதாக கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ஆனால் இன்று அப்படியெதுவும் நடக்கவில்லை. இங்கிருந்து எந்தவொரு மக்களும் அகற்றப்படவில்லை, அவர்கள் மீண்டும் தாம் வாழ்ந்த இடங்களிலேயே குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் தமது பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளையோ அல்லது தாம் தொழில் புரிந்த இடங்களையோ மாற்றுவதற்கான தேவையேற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வந்த சீன ட்ராகன்!



சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிகள், கொழும்புத் துறைமுகத்துக்கு அடிக்கடி வரத் தொடங்கியுள்ள விவகாரம், இராஜதந்திர மட்டங்களில் சர்ச்சையாக உருவெடுத்து வருகிறது. சீன நீர்மூழ்கிகள் அடிக்கடி கொழும்புத் துறைமுகத்துக்கு வரத்தொடங்கியுள்ளதை, இந்தியா கவலையுடனும் கலக்கத்துடனும் பார்க்கத் தொடங்கியுள்ளது.

இதை வழக்கத்துக்கு மாறானதொரு செயற்பாடாகவே இந்தியா கருதுகின்றபோதிலும், இலங்கை கடற்படையும் சீனப் பாதுகாப்பு அமைச்சும் இது வழக்கமான நடைமுறையே என்று தட்டிக்கழிக்க முனைகின்றன. இந்நிலையிலேயே, சீன நீர்மூழ்கிகளின் அடுத்தடுத்த கொழும்புப் பயணங்கள், வழக்கத்துக்கு மாறானதொன்றா என்ற கேள்விக்கு விடை தேடவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கடந்த செப்டெம்பர் மாத நடுப்பகுதியில், கொழும்புக்கு வருகைதருவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகவே, சீனாவின் நீர்மூழ்கியொன்றும் பாரிய விநியோக போர்க்கப்பலொன்றும் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருந்தன. சீன நீர்மூழ்கிக்கப்பலொன்று இந்துசமுத்திர பிராந்திய நாடொன்றின் துறைமுகத்துக்கு மேற்கொண்ட முதலாவது, வெளிப்படையான பயணம் இதுவாகும். அதுவும், இந்தியாவுக்கு மிக நெருக்கமாகவுள்ள கொழும்புத் துறைமுகத்தில், கிட்டத்தட்ட ஒரு வாரகாலம் சீன நீர்மூழ்கி தரித்துநின்ற விவகாரத்தை இந்தியா அவ்வளவு இலகுவாக எடுத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால், இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய விவகாரம்.

ஏற்கெனவே சில மாதங்களுக்கு முன்னதாக, இந்தியப் பெருங்கடல் பகுதியில் குறிப்பாக, இலங்கை கடற்பரப்பில் சீன நீர்மூழ்கிகளின் நடமாட்டத்தை இந்தியக் கடற்படையின் சோனார் கருவிகள் கண்டுபிடித்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், அவ்வாறு எந்த நடமாட்டத்தையும் தாம் அவதானிக்கவில்லை என்று ஒரே வார்த்தையல் கூறி முடித்திருந்தது இலங்கை கடற்படை.

என்றாலும், கடந்த செப்டெம்பர் மாதம் கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கியொன்று தரித்திருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியானபோது, அதை இலங்கை கடற்படை நிராகரிக்கவில்லை. அதேவேளை, அந்தச் செய்தியை இலங்கை கடற்படை ஏற்றுக்கொள்ளவுமில்லை. எந்தக்கருத்தும் கூறாமல் அமைதி காத்துவந்தது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த அமைதி, கடந்த மாத இறுதியில் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா, புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் வாய் திறக்கும் வரையில் - சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்திருந்தது.

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருந்த சீனாவின் நீர்மூழ்கி தொடர்பான தகவல் வெளியானதுமே உசாரடைந்த இந்தியா, இது குறித்து இலங்கையிடம் கவலையை வெளிப்படுத்தியது. இதற்கு பின்னர், இந்திய பாதுகாப்புச் செயலாளர் ஆர்.கே.மாத்தூர் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று கொழும்பு வந்து அரசாங்கத்துடன் பேச்சு நடத்தியது. அதையடுத்து, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த மாதம் 20ஆம் திகதி புதுடெல்லிக்கு அழைக்கப்பட்டு பேச்சு நடத்தப்பட்டது.

இதன்போது, எந்தவொரு சீன நீர்மூழ்கியும் இலங்கையில் தரித்துநிற்பதை இந்தியாவால் ஏற்றுக்கொள்ள முடியாதென்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் திட்டவட்டமாக எச்சரிக்கை விடுத்திருந்ததாக இந்திய ஊடகங்கள் கூறுகின்றன. அதையடுத்து, கடந்த மாத இறுதியில், 5 நாள் பயணமாக புதுடெல்லிக்குச் சென்றிருந்த இலங்கை கடற்படைத் தளபதியிடமும் இது குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எடுத்துக்கூறப்பட்டிருந்தது.

முதலாவது சீன நீர்மூழ்கி கடந்த செப்டெம்பர் மாத முற்பகுதியில் கொழும்புக்கு வந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்து, அது பற்றிய இந்தியாவின அதிருப்தியும் கருத்தும் வெளியிடப்படுவதற்கு முன்னதாகவே, தமது நீர்மூழ்கிகளின் அடுத்தடுத்த வருகைகளுக்கான அனுமதியை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுவிட்டது சீனா.

ஒக்டோபரிலும் நவம்பரிலும் கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிகள் தரித்து நிற்பதற்கு, இலங்கை அரசாங்கம் கடந்த செப்டெம்பர் மாதமே அனுமதி கொடுத்துவிட்டது. இதற்கு பின்னரே, இந்தியாவின் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்தியா எதிர்த்தாலும், சீனாவுக்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்யும் தைரியம் இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கவில்லை. ஏனென்றால், சனாவிடம் இலங்கை மிகப பெரியளவில் கடனை வாங்கிக் குவித்திருக்கிறது. எல்லா விடயங்களிலும் சீனாவிடமே தங்கியிருக்கப் பழகிக்கொண்டுள்ளது. அந்த நாட்டுடன் நெருக்கமான உறவையும் பேணிவருகிறது.

இந்தியாவின் அதிருப்தியை பொருட்படுத்தி, சீன நீர்மூழ்கிகள் கொழும்பு வருவதற்கு வழங்கிய அனுமதியை இலங்கை அரசாங்கம் இரத்துச் செய்தால், சீனாவின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். எனவே, இரண்டாவது சீன நீர்மூழ்கியின் வருகைக்கு இலங்கை அரசிடமிருந்து எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை.

கோத்தபாய ராஜபக்ஷவிடம் புதுடெல்லியின் அதிருப்தி வெளியிடப்பட்ட 10 நாட்களுக்குள் கடற்படைத்தளபதி புதுடெல்லியிலிருந்து திரும்பிய 24 மணி நேரத்துக்குள்ளாகவே, கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசித்திருந்தது அடுத்த சீன நீர்மூழ்கியான சங்சென்-2. இது இராஜதந்திர வட்டாரங்களில் ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால், இந்தியாவின் கருத்தையும் கவலையையும் புறக்கணித்துவிட்டு, முதல் நீர்மூழ்கி விவகாரத்தின் சூடு ஆறுவதற்குள்ளாகவே, அடுத்த நீர்மூழ்கி வந்திருக்கிறதே என்று அவர்கள் குழப்பமடைந்தனர்.

இந்தியாவின் கவலையையும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், சீன நீர்மூழ்கிக்கு இலங்கை அனுமதி அளித்தது, இந்தியாவை அவமானப்படுத்துமொரு செயலாகவே பார்க்கப்படுகிறது.

இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேராவிடம், சீன நீர்மூழ்கி பற்றி கேள்வியெழுப்பியபோது, அவர் வந்தது அணுசக்தி நீர்மூழ்கியல்ல என்றும் அது டீசல் மற்றும் பற்றரியில் இயங்கும் நீர்மூழ்கியே என்றும் கூறி சமாளிக்கப் பார்த்தார். அத்துடன், இந்தியாவின் பாதுகாப்பு எமது பாதுகாப்பு என்றும் இந்தியாவின் பாதுகாப்பு விடயத்தில் சமரசத்துக்கு இடமளிக்கமாட்டோம் என்றும் அவர் கூறியிருந்தார்.

அந்த உறுதிமொழி ஒரு சில நாட்களுக்குள் மீறப்பட்டுவிடுமென்று இந்தியத் தரப்பில் கொஞ்சமும் எதிர்பார்க்கப்பட்டிருக்கவில்லை. இப்போது இரண்டாவது சீன நீர்மூழ்கியும் கொழும்பில் தரித்துநின்றுவிட்டுத் திரும்பியிருக்கிறது.

முதல் முறை, சீன நீர்மூழ்கி கொழும்பில் தரித்துநின்ற விவகாரம் ஊடகங்கள் மூலம் வெளிச்சத்துக்கு வந்ததையடுத்து, சீன பாதுகாப்பு அமைச்சு அதை ஒப்புக்கொண்டது. அதுவும், சீன பாதுகாப்பு அமைச்சில் நடந்த நாளாந்த செய்தியாளர் சந்திப்பில், அமைச்சின் பேச்சாளரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கான பதிலின்போதே, சீனா அதை ஒப்புக்கொண்டது.

சோமாலிய கடற்கொள்ளையருக்கு எதிராக ஏடன் வளைகுடாவில், நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சீன கப்பல்களுக்கு பாதுகாப்பளிக்கச் செல்லும் வழியிலேயே, சாங் ஜென் நீர்மூழ்கி கொழும்பில் தரித்துச் சென்றதாக குறிப்பிட்டிருந்தார் சீன பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர். சீன நீர்மூழ்கி கொழும்பு வந்த விவகாரத்தை கடந்த 26ஆம் திகதி புதுடெல்லியில், முதன்முறையாக இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா ஒப்புக்கொண்ட பின்னர், கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலும் அது பற்றி கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த கடற்படைப் பேச்சாளர், கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய, 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் 238 வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிகள் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்துசென்றிருப்பதாக தெரிவித்திருந்தார். நல்லெண்ணப் பயணமாகவும் எரிபொருள் நிரப்பவும் மாலுமிகள் ஓய்வெடுக்கவுமே இவை இலங்கைத் துறைமுகங்களுக்கு வருவதாகவும் இது சர்வதேச அளவில் நடக்கின்ற வழக்கமானதொரு செயற்பாடே என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்மூலம், சீன நீர்மூழ்கியின் கொழும்புப் பயணத்தை, வழக்கமானதொன்றே என்றும் அதில் பாதுகாப்பு உள்நோக்கம் ஏதுமில்லை என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார். மீண்டும், இரண்டாவது நீர்மூழ்கி கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநின்றபோதும், அவர் அவ்வாறே கூறியிருந்தார்.

ஆனால், இந்தியாவோ இதை வழக்கமானதொரு நடைமுறையாக எடுத்துக்கொள்ளத் தயாராகவில்லை. ஏடன் வளைகுடாவில், கடற்கொள்ளை எதிர்ப்பு நடவடிக்கையில், நீர்மூழ்கிகளை பயன்படுத்துவது என்பதும் அங்கு செல்வதாக கூறிக்கொண்டு, அவை கொழும்புத் துறைமுகத்தில் அடிக்கடி தரித்து நிற்கத் தொடங்கியுள்ளதும் வழக்கத்துக்கு மாறான்தென்று குறிப்பிட்டுள்ளார் இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற புலனாய்வு அதிகாரியான கேணல் ஆர்.ஹரிகரன்.

புதுடெல்லியிலுள்ள இந்திய உயர்மட்டத்தில், இரண்டாவது நீர்மூழ்கியும் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருந்தமை குழப்பத்தையும் விசனங்களையும் ஏற்படுத்தியிருந்தது. அதுவும், வியட்நாம் ஜனாதிபதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட சில நாட்களின் பின்னரே, சீன நீர்மூழ்கி கொழும்பு வந்திருந்தது.

இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வியட்நாம் சென்றபோதே, முதலாவது சீன நீர்மூழ்கி கொழும்பில் தரித்துநின்றது. இந்தப் பயணங்கள் குறுகிய நாட்களுக்குள் திட்டமிட்டு மேற கொள்ளப்பட்டவை அல்ல. இந்திய - வியட்நாம் உறவுகளுக்கு பதிலடி கொடுக்குமொரு நகர்வாகவே தமது நீர்மூழ்கிகளை கொழும்புக்கு சீனா அனுப்புகிறதா என்ற சந்தேகத்தையும் இந்திய அதிகார மட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், இரண்டாவது நீர்மூழ்கி கொழும்பில் தரித்திருந்தபோது, இந்தியா கடும் கோபத்தில் இருப்பதாக வெளியான செய்திகள் குறித்து. சீன பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியொருவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தியாவின் கவலை தேவையற்றது என்றும் தமது நீர்மூழ்கிகள் எரிபொருள் நிரப்பவும் ஓய்வெடுக்கவுமே கொழும்பில் தரித்து நிற்பதாகவும் அது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு வழக்கமான நடை முறையே என்றும் சீன பாதுகாப்பு அமைச் சின் அதிகாரி கூறியிருந்தார். ஆக, நீர்மூழ்கிகளின் வருகை விடயத்தில் இலங்கையும் சீனாவும் ஒத்த கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளன.

முதலாவது, இரண்டு நாடுகளுமே. நீர்மூழ்கிகளின் கொழும்புத் துறைமுகத்துக்கான பயணம் குறித்த தகவலை தாமாக வெளியிடவில்லை. முடிந்தளவுக்கு மறைப்பதற்கே முயன்றன.

இலங்கை கடற்படை, வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் எந்த நாட்டிலிருந்து வந்தாலும், அது பற்றிய செய்திகளை படங்களுடன் வெளியிடும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், சீன நீர்மூழ்கிகளின் வருகை பற்றிய தகவலை மட்டும், ஒன்றுக்கு இரண்டு தடவைகளும் வெளியிடவேயில்லை.

இரண்டாவது, இரு நாடுகளுமே நீண்ட மௌனத்துக்கு பின்னர், செய்தியாளர்கள் கேள்வியெழுப்பிய சந்தர்ப்பத்தில் மாத்திரம், அதனை ஒப்புக்கொண்டன. மூன்றாவது, எரிபொருள் நிரப்பவும் ஓய்வெடுக்கவும் வெளிநாட்டுத் துறைமுகங்களை நாடுவது வழக்கமான நடைமுறையே என்று இரு நாடுகளுமே கூறியுள்ளன. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, இந்த விடயத்தில் இரு நாடுகளும் ஏற்கெனவே பேசித் தீர்மானித்துவிட்டே கருத்துக் கூற முனைந்துள்ளதாக தோன்றுகிறது.

இந்த விடயத்தில், அயல் நாடான இந்தியாவிடம் இலங்கை வெளிப்படைத்தன்மையுடன் நடக்கத் தவறியுள்ளது. இதன் விளைவாகவே, இது வழக்கமானதொரு பயணமா, வழக்கத்துக்கு மாறான பயணமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

சீனாவுடன் கொண்டுள்ள நெருக்கத்தை பயன்படுத்தி, இந்தியாவை அலட்சியம் செய்யும் இலங்கையின் போக்கு அண்மைக்காலமாகவே அதிகரித்துவிட்டது. அதனாலேயே, கடந்த சில வருடங்களாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு களில் உச்சநிலை இன்னமும் ஏற்படவில்லை.

இந்நிலையை சீர்செய்ய புதுடெல்லி அண்மையில் மேற்கொண்ட முயற்சிகளுக்கு, நீர்மூழ்கி விவகாரத்தின் மூலம் இலங்கை பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது.

இத்தகைய நிலையில், என்னதான் இது வழக்கமானதொன்று என்று சீனாவும் இலங்கையும் கூறிக்கொண்டாலும், இந்தி யாவின் பார்வையில் இது வழக்கத்துக்கு மாறானதொன்றாகவே தென்படும். ஏனென்றால். இது இந்தியாவை அதிகம் ஆத்திரத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

*-கே.சஞ்சயன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

## 35ஆவது டெஸ்ட் சதம் சச்சின் உலக சாதனை!



124

..அறுவைச் சிகிச்சை முடிந்து நான்கு மாத கால ஓய்விற்குப் பின்னர் அவர் மீண்டும் விளையாட்டுகளில் பங்கேற்கலாம் என்று மருத்துவக் குழு அனுமதி அளித்தது. இதனைத் தொடர்ந்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாடு வாரியமும், அவரை மலேசியாவில் நடைபெற இருக்கும் டி எல் எஃப் கோப்பைக்கான போட்டிகளுக்குத் தேர்வு செய்தது. தோள் பட்டை வலி முற்றிலுமாக குணமடைந்த நிலையில் மலேசியாவில் நடைபெற்ற போட்டியில் மிகச் சிறப்பாக ஆடிய ஒரே இந்திய வீரர் சச்சின் தான்.

2006 செப்ரெம்பர் 14 ஆம் திகதி மேற்கு இந்தியக் குழுவினர் இந்தியாவிற்கு வந்தனர். அப்போது தனது விளையாட்டுத் திறனின் மீது சந்தேகம் கொண்டவர்களின் வாயை அடைக்கும் வகையில் வலுவான மேற்கு இந்தியத் தீவுகளின் அணிக்கு எதிராக தனது 40 ஆவது ஒருநாள் சதத்தை அடித்தார். மழை காரணமாக லெவிஸ் டக் வொர்த் முறையில் மேற்கு இந்தியத் தீவு அந்தப் போட்டியில் வெற்றி பெற்றது. சச்சின் அடித்த 141 ரன்கள் வீணாகிப்போயின. இருப்பினும் தான் மீண்டும் ஃபார்முக்கு வந்துவிட்டதை உணர்ந்த அந்தப் போட்டி அவருக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

இந்தியாவையும் சசச்சினையும் ஏமாற்றிய 2007 உலகக்கோப்பை

2007 உலகக் கோப்பை பயிற்சி ஆட்டங்களில் போது சச்சினுக்கும் பயிற்சியாளர் கிரெக் சாப்பலுக்கு இடையே கருத்து மோதல்கள் ஏற்பட்டன. துவக்க ஆட்டக்காரராக சச்சின் களம் இறங்கிச் சரியாக விளையாடாததால் பின்னர் வரும் வீரர்கள் மனதளவில் சோர்வடைகிறார்கள். இதுவே அணியில் தோல்விக்குக் காரணமாகிறது. எனவே, சச்சின் மூன்று அல்லது நான்காவது வீராக களம் இறங்குவது நல்லது என்று பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்தார். இந்த பேட்டி சச்சினை எரிச்சலூட்டியது. தனது திறமையின் மீதான நம்பகத் தன்மையையே இது காட்டுகிறது என்ற முடிவிற்கு வந்தார். பொதுவாக எந்த விமர்சனங்கள் பற்றியும் கவலைப்படாத சச்சினை இந்தப் பேட்டி வேதனைக்குள்ளாக்கியது. யார் என்ன சொன்னாலும் அமைதி காக்கும் சச்சின் இதுவரை எந்தப் பயிற்சியாளருமே என் திறமையைச் சந்தேகித்ததில்லை என்று பதிலுக்கு க்ரெக் சாப்பலை கோபத்தில் ஒரு பிடி பிடித்தார்.

பயிற்சியாளருக்கு தனது குழுவில் விளையாடும் வீரரை விமர்சனம் செய்ய உரிமை உண்டு. அதனை ஏற்றுக் கொண்டு நடக்க வேண்டியது குழுவினரின் கடமை என்று சச்சின் அளித்த பதில் மீது இந்தியக் கிரிக்கெட் வாரியத்திடம் க்ரெக் சாப்பல் புகார் அளித்தார். 2007 ஏப்ரல் 7 ஆம் திகதி இந்தியக் கிரிக்கெட் வாரியம் சச்சின் ஏட்டிக்குப் போட்டியாக பேட்டி அளித்தது குறித்து விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியது.

2007 உலகக் கிரிக்கெட் போட்டிகள் மேற்கு இந்தியத் தீவுகளில் ஆரம்பமாயின. தனது கருத்துக்கு பதிலடி கொடுத்த சச்சின் மீது தீராத கோபத்தில் இருந்த க்ரெக் சாப்பல் பழி வாங்கச் சரியாக தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

- லட்சியம்:- உலகின் நெ.1 விளையாட்டு வீரன்
- பிடித்த மைதானம்:-ஆஸ்ரேலியாவின் சிட்னி
- பிடிக்காத மைதானம்:- பெங்களூர் மைதானம்
- வேறு விளையாட்டு:-டென்னிஸ்
- கனவு மங்கை:-எனது மனைவி அஞ்சலி
- வெறுப்பது:- வதந்தி
- பிடித்த உடை:-:ஜீன்ஸ், டீசர்ட்
- பிடித்த கடவுள்:- பிள்ளையார் சாய்பாபா மீதும் பக்தி உண்டு
- பிடித்த வாசகம்:-உனக்கு நீயே உண்மையாக இரு




கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

...ஒரு கணம் இங்கேயிருப்பீர்கள்; அடுத்த கணம் அமெரிக்காவில் இருப்பீர்கள்; அடுத்த கணம் உங்கள் அலுவலகத்தில் இருப்பீர்கள்; அடுத்த கணம் உங்கள் குழந்தைகளைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பீர்கள்.

இந்தக் கட்டுப்படுத்தப்படாத எண்ணங்களின் ஓட்டம்- இதுதான் உங்களுடைய மனதின் நிலை. இந்த மனதின் கையில்தான் உங்கள் வாழ்க்கையை ஒப்படைத்திருக்கிறீர்கள்! இந்த மனம்தான் உங்களுடைய எல்லாக் கவலைகளையும் உற்பத்தி செய்கிறது. இந்த மனம்தான் உங்கள் வாழ்க்கையை உங்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறது. நீங்கள் இந்த அளவிற்குப் புரிந்துக்கொண்டாலே, கவலை மற்றும் உள்பேச்சு இவற்றிலிருந்து விடுதலையை நோக்கி ஒரு பெரிய அடியை எடுத்து வைக்கிறீர்கள்

ஒரு சின்னக்கதை...

ஒரு நாள், சாலையில் ஒரு விபத்து நடந்திருந்தது. மக்கள் கூடிவிட்டனர். புத்தம் புதிய கார் ஒன்று ஒரு சுவற்றின் மீது மோதியிருந்தது. அவர்கள் ஓட்டுனரிடம் கேட்டனர். ஐயா, உங்களுக்கு சரியாக ஓட்டத் தெரியவில்லை என்றால், ஏன் காரை ஓட்டுகிறீர்கள்? என்று, அதற்கு அவர் சொன்னார், எனக்கு எப்படி ஓட்டுவதென்று தெரியும். எப்படி நிறுத்துவதென்றுதான் தெரியாது.

(பலத்த சிரிப்பு)



பாருங்கள், நீங்களும் இது[illegible] தான் ஒரு வண்டியை ஓட்டிச் செல்கிறீர்கள். உங்களுக்கும் அதை எப்படி நிறுத்துவதென்பது தெரியவில்லை. உங்கள் மனம்தான் உங்களுக்கு நிறுத்தத் தெரியாத வண்டி. சில [illegible]வது உங்கள் உள்பேச்சை நிறுத்த முயற்சி செய்யுங்கள்... முடிகிறதா?

நீங்கள் அதனைக் கட்டுப்படுதத முனைந்தால், அதை நிறுத்த வேண்டும் என்கிற இன்னொரு கூடுதலான எண்ணத்தினால், எண்ண ஓட்டம் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு இன்னும் அதிகமாகும்!

நீங்கள் உங்கள் மனதைச் செலுத்திக்கொண்டிருக்கவில்லை. உங்கள் மனமே உங்களைச் செலுத்திக்கொண்டிருக்கிறது!

**ஆன்மீகம் 74**

கவலையைப் புரிந்துகொள்ள நமது மனதில் இயல்பைப் பற்றிய ஆழமான உள்நோக்குப் பார்வை தேவை.

மனதின் வழியாகவே கவலைப்பட முடியும்- எனவே வெறியேறும் வழியும் மனதின் வழியாகத்தர் இருக்க முடியும். ஆனால், நாம் கவலையின் மூலத்தை ஆழ்ந்து நோக்காமல், அதற்கான தீர்வை எப்பொழுது தவறான இடங்களிலும் வெளியிலுமே தேடிக் கொண்டிருக்கிறோம். நிறைய பணம் இருந்தால் எல்லாக் கவலைகளும் தீர்ந்துவிடும் என்று நாம் நினைக்கிறோம்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## இலங்கையில் அதிகரித்துவரும் லீஸ்மானியாசிஸ்(Leishmaniasis) நோயும் அதற்கான விழிப்புணர்வும்

லீஸ்மானியாசிஸ் (Leishmaniasis) என்பது லீஸ்மானனியா (Leishmania) எனப்படும் தனிக்கல புரோட்டோசோவாவினால் (Protozoa)ஏற்படுகின்ற Sandfly எனப்படும் சிறிய வகைப் பூச்சியினால் காவப்படுகின்ற ஒருநோயாகும். இந் நோயானது இன்றுஉலகம் முழுவதும் 90 நாடுகளில் காணப்படுவதுடன் 12 மில்லியன் மக்கள் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 350 மில்லியன் மக்கள் இந் நோயின் தாக்கத்தை எதிர்நோக்கியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்நோய் 1992 ஆம் ஆண்டு இனங்காணப்பட்டது. அதற்குமுன்னர் இந்நோய் மத்தியகிழக்கு நாடுகளுக்கு சென்று திரும்பும் சிலரில் அவதானிக்கப்பட்டு வந்தது. பின்னர் படிப்படியாக அதிகரித்து தற்போது அதிகளவான நோயாளிகள் இனங்காணப்பட்டுவருகின்றனர். 2009 ஆம் ஆண்டில் 676 நோயாளிகளும் 2010ஆம் ஆண்டில் 428 நோயாளிகளும், 2011ஆம் ஆண்டில் 930 நோயாளிகளும் இனங்காணப்பட்டனர். லீஸ்மானியாசிஸ் அதிகளவில் அநுராதபுரம், பொலநறுவை, அம்பாந்தோட்டை, மாத்தறை,குருநாகல் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகிறது என சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

லீஸ்மானியாசிஸ் நோயானது மூன்றுவகையாகப் பிரிக்கப்படுகின்றது. அவை சரும லீஸ்மானியாசிஸ் (Cutaneous leishmaniasis)Visceral leishmaniasis, நாசித் தொண்டை லீஸ்மானியாசிஸ் (Muco – Cutancousl eshmaniasis) என்பனவாகும. Cutaneous leishmaniasis சருமத்தை பாதிக்கின்றது. இது சிகிச்சை மூலம் விரைவில் குணமடையக்கூடியது. Visceral leishmanl asis ஈரல், மண்ணீரல், என்புமச்சை, நிணநீர்கணுக்கள் போன்றவற்றை பாதிப்பதுடன் சிகிச்சையளிக்காத விடத்து மரணத்தை ஏற்படுத்தக் கூடியது. (Muco – Cutancous leshmaniasis) நாசித்- தொண்டை மென்சவ்வுகளைதாக்குவதுடன் முகத் தோற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இவற்றுள் இலங்கையில் அதிகளவில் காணப்படுவதுCutaneous leishmaniasis ஆகும். இலங்கையில் 2006ஆம் ஆண்டில் முதலாவது Viscrall eishmaniasis இனங்காணப்பட்டதுடன் Visceral leishmaniasis, Muco – cutanc ousl eishm aniasis மிகக் குறைந்தளவே இனங்காணப்பட்டுள்ளது.

லீஸ்மானியாசில் 21 வேறுபட்ட வகையான Leishmania இனால் ஏற்படுத்தப்படுகின்றது. ஆயினும் இலங்கையில் ஒருவகையான Leishmania மட்டுமேகாணப் படுகி



1,2- Cutaneous leishmaniasis
3- Visceral leishmaniasis
4,5- Muco- cutaneous leishmaniasis

ன்றது. அது Leishmania donovani இனமாகும். இது வழமையாக ஒரு Viscralleishmaniasis நோயாக்கியாக இனங்கானப்பட்ட போதிலும் இங்கே அது ஒரு cutaneous leishmanias is நோயாக்கியாக உள்ளது.

Leishmania காவியினை எடுத்துக்கொண்டால் அதுSandfly எனப்படும் சிறியவகை பூச்சிகளாகும். உலகில் 900றக்கும் அதிகமான இனங்களில் அண்ணளவாக 30 வகையான்வை மட்டுமே இந் நோயை காவுகின்றன. இவை 2-3mm நீளமுடையவை. இதில் பெண்பூச்சிகள் தமது முட்டை விருத்திக்காக விலங்குகளின் குருதியை உறிஞ்சுகின்றது. பெண்பூச்சிகளும்,ஆண்பூச்சிகளும் தமதுஉணவாகதாவரச்சாற்றை உறிஞ்சுகின்றன. இவை நிறையுருமாற்றத் தை காண்பிக்கும் ஒருபூச்சி வகை




யாகும். அதாவது இவை நான்கு வாழ்நிலைகளை தமது வாழ்க்கை வட்டத்தில் கொண்டிருக்கின்றன. அவை முட்டை,குடம்பி, கூட்டுப் புழு, நிறையுடலி என்பனவாகும். பெண் Sandfly தனது முட்டைகளை மணற்பாங்கான இடங்களிலும்,சுவர்வெடிப்புகள் ,கறையான் புற்றுகள்,எலிவளைகள்,உக்கிய இலைகள் உள்ள இடங்களில் இடுகின்றன. முட்டையானது 1-2 கிழமைகளில் பொரித்து குடம்பி வெளிவருகின்றது. இது 4-6 கிழமைகளில் கூட்டுப்புழுவாகி 5-10 நாட்களில் நிறையுடலி(Sandfly) வெளிவருகின்றது. இதில் முட்டை, குடம்பி, கூட்டுப்புழு கண்டறிவதுகடினமாகும். இவற்றின் வாழ்க்கை வட்டம் 40- 50 நாட்கள் எடுக்கின்றது. ஒரு பூச்சி ஒருதடவையில் 30 -50 முட்டைகளை இடுவதுடன் அதன ஆயுட்காலம் 2-3 வாரங்களாகும்.

Leishmania ,இனதும் Sandfly இனதும் இடைத்தொடர்பை எடுத்துக் கொண்டால் Leishmania இரண்டுவிருந்துவழங்கியை தமது வாழ்க்கை வட்டத்தைபூர்த்தி செய்வதற்கும் உணவுத்தேவைக்கும் பயன்படுததுகின்றது. அவை Sand fly உம் முள்ளந்தண்டுளி விலங்குமாகும். பொதுவாக Leishmania இன் இயற்கை தேக்கமாக (Natural reservoirs) காட்டுவிலங்குகளான எலிகள், (Wild rodents) ஊனுண்ணிகள், Marsup ials, மற்றும் ஏனைய முலையூட்டிகளும் காணப்படுகின்றன. மனிதன் காட்டுப் பகுதிகளுக்கு அண்மையில் குடியிருக்கும் போதும் காட்டுப் பகுதிகளில வேலைக்குசெல்லும் போதும் (Leishmania) தொற்றுள்ள Sandly கடிக்குமிடத்து தொற்றுக்குள்ளாவதுடன் அந்தநோயாக்கியின் தேக்கமாவும் (reşervoir) ஆகிறான். பின்னர் இவ்வாறான தொற்றுக்குள்ளானவர்கள் மூலம் காவிகள் காணப்படுகின்ற ஏனைய இடங்களுக்கு பரவுகின்றது. ,Sandflyவிலங்குகளின் குருதியை உறிஞ்சும் போது அவ்விலங்கு Leishmania இனைக் கொணடிருந்தால் அது Sandfly இன் உணர்வு கால்வாய்ப் பகுதியை சென்றடைகின்றது. விலங்குகளின் குருதியில் உள்ளபெருங்குழியத்தில் (Macrophage) இனுள் சவுக்கு முனை அற்ற Leishmania இனநிலையான amastigote காணப்படும். Sandly இல் உணர்வுக கால்வாயில் Macrophage உடைந்து amastigote நிலையில் உள்ள Leishmania வெளியேறி உடனடியாக சவுக்குமுனை யுள்ள அசையக் கூடிய Promastigote நிலையை அடைகின்றது. அது Sandfly இன் உணவுக்கால்வாயில் இரு கூற்றுப் பிளவுமூலம் பெருக்க மடைகின்றது. 4 -5 நாட்களின் பின்னர் உணவுக்கால்வாயில் முன்நோக்கி நகர்ந்து Sand fly உமிழ்நீர் ச்சுரப்பியை (Salivary gland) சென்றடைகின்றது. Sandfly தனது அடுத்த முறைகுருதியை உறிஞ்சும் போது உமிழ்நீருடன் சேர்த்து (Leishmania) இனையும் அந்த விலங்கினுள் அல்லது மனிதனினுள் செலுத்துகின்றது விலங்குகளின் உடலில் Promastigote MdJ Macrophage இனுள் சென்றுஅங்கு amastigote நிலைக்கு மாற்றமடைந்து பெருக்கமடைந்து




வாழ்வதுடன் நோயினையும் தோற்று விக்கின்றது.

இலங்கையில் Phlebotomu sargentipes எனப்படும் sandfly இனம் காவியாகக் கருதப்படுவதுடன் ஏனைய நாடுகளில் காவியாக உள்ள இனங்களும் இலங்கையில் காணப்படுவதுஆய்வுகள் மூலம் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நோயினைதடுப்பதற்குநாம் Sand fly கடிப்பதைத் தவிர்த்தலும் அதனை கட்டுப்படுத்துவதுமே சிறந்த வழிமுறையாகும். Sandfly கடிப்பதை தவிர்ப்பதற்கு காடு களை அண்டியபகுதிகளில் குடியிருப்பதை தவிர்க்கவேண்டும். இத்துடன் அவை கடிக்கக்கூடியமாலை, இரவு வேளைகளில் அவற்றை தவிர்ப்பதற்கு உறங்கும் போது நுளம்புவலைகளை உபயோகிப்பதுடன் கை,கால்களையும், மூடக் கூடிய ஆடைகளையும் பயன்படுத்த வேண்டும். அத்துடன் நுளம்புகளை விரட்டபயன்படுத்துவது போல எண்ணெய அல்லது வேறு பதார்த்தங்களையோ கை,கால்களில் பூசுவதும் இவற்றை தவிர்ப்பதற்குரியமுறைகளாகும். அத்துடன் வீடுகள்,கழிவறைகள் போன்றவற்றில் உள்ளவெடிப்புக்களை நிரப்புவது இவற்றின் பெருக்கத்தை தடுக்கும்.

இப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நுளம்புக் கட்டுப்பாட்டில் பயன்படும் பூச்சிநாசினிகளைவிசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தமுடியும். இத்துடன் ஏனைய விருந்துவழங்கிதொடர்பிலும் அவதானத்துடன் இருத்தல் வேண்டும். எமது வீட்டிலுள்ள நாய். பூனை, எலிகள், ஏனைய முலையூட்டிவிலங்குகள் போன்றன தொற்றுக்குள்ளாதலும் நோய் பரவுவதற்கு ஏதுவாகஅமையும்.

தற்போதைய வைத்தியசாலை தோல் சிகிச்சை பிரிவின் தரவுகளின்படி மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுடன் கிளிநொச்சி. முலலைத்தீவு, வவுனியா போனற இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் இந் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அறியக் கூடியதாக உள்ளது. எனவே இந்நோய் தொடர்பில் மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டு நோய் காவிக ளையும் Reservoir host இனையும் கண்டறிவதுடன் இந்நோய் தொடர்பில் கூடிய கவனத்தை எடுப்பதும் மிகவும் தேவையான தொன்றாக உள் ளது. Sandfly தொடர்பான சில ஆய்வுகள் இலங்கையின் தேசிய ஆராய்ச்சி சபையின் (National Resear ch Council , Sri Lanka) நிதியுதவியுடன் விலங் கியல்துறை. யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

த. தர்மதா,
ஆராய்ச்சிஉதவியாளர்,
விலங்கியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 122

GOD particle (kadavul thukal) என்பதன் அர்த்தம் என்ன?

புதிர் 122 இற்கான விடைகளை 24.11.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி
யாழ். பல்கலைக்கழகம்

### புதிர் 121இற்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.ராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

புதிர் 121க்கான கேள்வியும் விடையும்:
et al என்பதன் அர்த்தம் என்ன?
And others

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல.122

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை தோற்கடிக்க நாம் தயாராகிவிட்டோம்

## அத்துரலிய ரத்ன தேரர் சூளுரை



10 இலட்சம் மக்களை திரட்ட முடியும்

நாம் முன்வைத்துள்ள 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் நிச்சயம் நாங்கள் அவரை தேர்தலில் தோற்கடிப்போம். இதற்கான சக்திகள் அனைத்தும் இன்று ஒன்றிணைந்துள்ளன. எனவே மக்களின் பலத்துடன் ஜனாதிபுதியை தோற்கடிக்க நாம் தயாராகிவிட்டோம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் இணைத்தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

ஒரு இரவில் 10 இலட்சம் மக்களை திரட்ட எம்மால் முடியும். எனவே நீங்கள் ஜனாதிபதி தேர்தலை நடத்துங்கள். நாங்கள் உங்களை வீட்டுக்கு அனுப்புகின்றோம். நாங்கள் அதற்கு தயாராகிவிட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு முத்தையா மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தூய்மையான நாள் ஒன்றுக்கான அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள், தொழிற்சங்க அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள் என்பன கலந்து கொண்டன.

இதில் தேரர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நலனுக்காகவே 19 ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைத்துள்ள நாங்கள் அதனை நிறைவேற்றுமாறு கூறுகின்றோம். ஆனால் அரசாங்கம் இதுவரை அதனை நிறைவேற்றவில்லை. இந்நிலையில் தற்போது ஒரு விடயத்தை தெளிவாக குறிப்பிடுகின்றோம்.

### தோற்கடிப்போம்

அதாவது நாம் முன்வைத்துள்ள 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலுக்கு செல்வாராக இருந்தால் அவரை நிச்சயம் நாங்கள் தோற்கடிப்போம்.

ஒரு இரவில் 10 இலட்சம் மக்களை திரட்ட எம்மால் முடியும். எனவே நீங்கள் ஜனாதிபதி தேர்தலை நடத்துங்கள். நாங்கள் உங்களை வீட்டுக்கு அனுப்புகின்றோம். நாங்கள் அதற்கு தயாராகிவிட்டோம். மக்களின் பலத்துடன் ஜனாதிபதியை தோற்கடிக்க நாம் தயாராகிவிட்டோம்.

### முக்கிய தலைவர்கள் களத்தில

இந்த மேடையில் ரணில் விக்ரமசிங்க, கருஜயசூரிய, சஜித் பிரேமதாச, ஓமல்பே சோபித தேரர், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் ஒன்றிணைந்துள்ளனர். அந்த வகையில் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமாயின் ஜனாதிபதியை தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவோம்.

யுத்த வெற்றி பெருமை எமக்கே உரியது. இந்த முக்கிய தலைவர்களை இங்கு ஒன்றிணைத்தமை தொடர்பில் தூய்மையான நாளைக்கான அமைப்பு மகிழ்ச்சியடைகின்றது. தாம் யுத்தத்தை வெற்றிபெற்றதாக சிலர் மார்தட்டுகின்றனர். ஆனால் வெற்றிபெற முடியாது என்று கூறப்பட்ட யுத்தத்தை வெல்ல முடியும் என்று நாங்களே கூறினோம். எனவே இந்த யுத்த வெற்றியின் பெருமை எமது கட்சியையே வந்து சேர வேண்டும்.

கட்சிகளின் எலும்புக் கூடுகள் மட்டுமே ஆளும் கூட்டணியில் இன்று அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் சிதைவடைந்துள்ளன. இந்தக் கூட்டத்தில் பலரை பார்க்கின்றேன். கட்சிகள் எலும்புக் கூடுகள் மட்டுமே அங்கு உள்ளன. மேலும் இன்று பல அமைச்சர்கள் இங்கு வர முயற்சித்தனர். ஆனால் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வரும்வரை காத்திருக்கின்றனர்.

### 10 அமைச்சர்கள் வருவர்

எனவே அறிவிப்பு வெளியானதும் 10 முக்கியஸ்தர்கள் அரசாங்கத்திலிருந்து எமது பக்கம் வருவார்கள். உபாய அபிவிருத்தி சட்ட மூலத்தின் ஊடாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முதலீடு களுக்கு வரிச்சலுகை வழங்கினர். ஆனால் அதில் கசினோவை யாருகவும் தெரியாமல் கொண்டு வந்தனர். ஆனால் நாங்கள் அதனை எதிர்த்தோம். இன்றும் ஜேம்ஸ் பாக்கரினால் இங்கு வர முடியாமல் உள்ளது. இந்த அரசாங்கத்தின் கீழ் எந்தவொரு உள்நாட்டு வர்த்தகரும் முன்னேற்றமடைந்தனரா என்று கேள்வியெழுப்புகின்றோம்.

### சீனாவின் சந்தையாக இலங்கை

இலங்கை இன்று சீனாவின் சந்தையாக மாறிவிட்டது. ஒரு பட்டம் பறந்தாலும் அது சீனாவினுடையாகவே உள்ளது. கொழும்பில் சீன நகரை அமைக்கப் போகின்றனர். அவ்வாறு அமைத்ததும் கசினோ விபச்சாரம் என்பன இங்கு வரும். கடலை நிரப்பி என்ன செய்யப்போகின்றனர் என்று தெரியவில்லை.

### தேர்தலை நோக்கிய வரவு செலவுத்திட்டம்

ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தே வரவு செலவுத்திட்டத்தை முன்வைத்துள்ளார். சம்பள அதிகரிப்பை வழங்கியுள்ளார். இதனால் நாட்டில் விரைவில் பாரிய பொருளாதார பணவீக்கம் உருவாகும். இந்த சம்பள அதிகரிப்பை கடந்த வருடம் ஏன் வழங்கவில்லை என்று கேட்கின்றோம். அலரி மாளிகையின் சமையலறையில் பணிபுரிபவரும் நீதியரசராக நியமிக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது என அவர்மேலும் தெரி வித்தார். (இ)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மு.கா.முடிவெடுக்கவில்லையாம்

## அமைச்சர் பசீர் விளக்கம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒட்டுமொத்த தீர்மானத்துக்கு அமையவே தான் செயற்படவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் அமைச்சருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உங்களின் ஆதரவு யாருக்கு என்று அவரிடம் வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாரை ஆதரிப்பது என்று இதுவரையில் தீர்மானம் எடுக்கவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதியுயர்பீடம் கூடி இதற்கான முடிவை எடுக்கும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒட்டுமொத்த முடிவுக்கு இசைவாகவே நான் முடிவெடுப்பேன்.

ஆனால், என்னுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் நான் கட்சியின் அரசியல் அதியுயர்பீடக் கூட்டத்தில் முன் வைப்பேன். அந்தக் கருத்துக்களுக்கு உடன்பட்ட வகையில் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதியுயர் பீடத்தில் இருக்கின்ற உறுப்பினர்களையும் எனது கருத்தின்பால் வென்றெடுப்பதற்கான முயற்சிகளை அரசியல் அதியுயர்பீட கூட்டங்களில் நான் செய்வேன்.

கடந்த காலங்களிலும் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரப் இருந்த காலத்திலிருந்து அதியுயர்பீடக் கூட்டங்களில் நான் கருத்துக்களை தெரிவித்து அதன்பால் பெரும்பான்மையானவர்களை ஈர்த்த அனுபவம் எனக்கு உள்ளது. இந்தக் காலகட்டத்திலும் எதிர்வரும் தேர்தல் வியூகங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்றும் அந்த வியூகங்கள் எவ்வாறு அமைந்தால், முஸ்லிம்களுக்கு நன்மையானது போன்ற கருத்துக்களை கூறி பெரும்பாலான உறுப்பினர்களை ஈர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## தமிழ்த் தாத்தா

1887ஆம் ஆண்டு, ஆவணி மாதம், ஒரு முக்கியமான நாள்– ஆவணி அவிட்டம். கும்பகோணம் கல்லூரியிலே ஒருவாரம் விடுமுறை.

அந்த விடுமுறையை பயனுள்ள வகையிலே செலவு செய்ய ஒருவர் நினைத்தார்.

திருநெல்வேலிப் பக்கம் போய் பழைய ஏட்டுச்சுவடிகள் தேடலாம் என்று நினைத்தார் அவர்.

திருநெல்வேலிப் பகுதியிலே பரம்பரை வித்துவான் வீடுகளிலே "பத்துப்பாட்டு" ஏடுகளைத் தேடலாம் என்று முடிவு செய்தார்.

அவரின் அப்பாவோ, " சிராவனத்துக்கு இங்கே இருக்க வேண்டாமா? இந்த நேரத்திலே வெளியூருக்கு போகவேண்டுமா என்றார்.

ஆனால் இவரோ அதைவிட பத்துப்பாட்டுத்தான் முக்கியம் என்று நினைத்தார். அப்பாவிடம் ஏதோ சமாதானம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

ஒரு ஒற்றை மாட்டு வண்டியிலேறி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனார். பாதி வழியிலே வண்டில் குடைசாயுது! இவர் கீழே விழுகிறார்! இவர் மேலே தகரப்பெட்டி விழுகுது! இதற்காக அவர் பயணத்தை நிறுத்தவில்லை.

ரயிலிலே ஏறினார். ரயில் புறப்பட்டது. தஞ்சாவூர் தாண்டிப்போகும்போது அப்போது திடீரென்று பாதி வழியிலே அதுவும் நின்றது. இவர் "என்ன விடயம்" என்று எட்டிப்பார்த்தார்.

ஒரு அதிகாரி வேகமாக வந்து, "கீழே இறங்கி வேறு பெட்டியிலே ஏறுங்கள்" என்றார். முன்னே இருந்த பெட்டியிலே தீப்பிடித்து விட்டதாம். அதற்குத்தான் அப்படி சொல்லியிருக்கிறார்.

இவர் கீழே இறங்கி வேறு பெட்டியிலே உட்கார்ந்தார். ஒரு வழியாக ரயில் திருநெல்வேலிக்குப் போய்ச் சேர்ந்தது.

இப்படி விடாப்பிடியாக இருந்து தமிழ் இலக்கியங்களை நமக்குத் தேடித்தந்தவர் யார் என்று நினைக்கிறீர்கள்? வேறு யார்? நமது தமிழ்த்தாத்தாதான் உ.வே.சாமிநாதஐயர்.

நாமாக இருந்தால் ஒற்றை மாட்டுவண்டி குடை சாய்ந்தபோதே" நேரம் சரியில்லை" என்று சொல்லி வீட்டுக்குத் திரும்பியிருப்போம்.

கும்பகோணம் கல்லூரியிலே ஒருநாள், 1900 ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதி. இளம்கலை மாணவர்களுக்கு இவர் தமிழ்ப்பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

அப்போது ஒரு மாணவர் எழுந்து இவரிடம் சொல்கிறார்," ஐயா எங்கள் விடுதிக்கு ஒருவர் வந்திருக்கிறார். முன்பு வசதியாக வாழ்ந்தவர். இப்போது வறுமையிலே இருக்கிறார். கடன் சுமை அதிகம்.

பெரிய துணி மூட்டை ஒன்று வைத்திருக்கிறார். அதிலே பழைய தமிழ்ச் சுவடிகள் நிறைய உள்ளது. நூறு சுவடிகளுக்கு மேல் இருக்கும். அவ்வளவையும் அன்பளிப்பாக கொடுப்பதற்கு வந்திருக்கிறார். அவர் "தனக்கு பணம் எதுவும் வேண்டாம்! அவற்றைப் பாதுகாத்தால் போதும் என்கிறார்" என்று அந்த மாணவர் கூறினார்.

தமிழ்த் தாத்தாவிற்கு தாங்கமுடியாத மகிழ்ச்சி. உடனே நேரில் சென்று வாங்க நினைத்தார்.

ஆனால் அந்த மாணவர் தானே போய் அந்த சுவடிக் கட்டுக்களை எடுத்து வந்து தன் ஆசிரியரிடம் கொடுத்தார்.

சுவடி தந்த பெரியவரை பார்க்காமல் இருந்தால் அது பெரிய பாவம் என்று சொல்லி, உடனே விடுதிக்குப் போனார் உ.வே.சா!

ஆனால் அதற்குள் அந்தப் பெரியவர் தன்னுடைய பெயரையோ, ஊரையோ யாரிடமும் சொல்லாமலேயே போய்விட்டார்.

அவரைப் பார்க்க முடியவில்லை என்று தமிழ்த் தாத்தாவுக்கு பெரிய மனவருத்தம்.

அது யார்? என்ற விபரம் யாருக்குமே தெரியாமலேயே போய்விட்டது.

ஆனால் அந்தச் சுவடியை வாங்கி வந்து கொடுத்த மாணவர் பெயர் சாம்பசிவ செட்டியார் என்று உ.வே.சா. சொல்லியிருக்கிறார்.

"தமிழ் விடு தூது" அந்த சுவடிக் கட்டிலே தான் இருந்ததாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களில் போட்டியிட ஜெயலலிதா தகுதியிழப்பு

## உறுதிப்படுத்தியது தமிழக அரசிதழ்



மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி, தமிழகத்தின் முன்னாள்முதலமைச்சரும்அதி மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா, 10 ஆண்டுகள் தேர்தலில் நிற்க தகுதியிழப்பு செய்யப்பட்டுள்ளதாக சட்டப் பேரவைத் தலைவர் பிறப்பித்த உத்தரவு அரசாணையாக, தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தலைவர் பி.தனபால், செயலாளர் ஜமாலுதீன் ஆகியோரது உத்தரவு, அரசாணையாக தமிழக அரசிதழில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) வெளியிடப்பட்டது.

அதில், "இலஞ்ச ஒழிப்புச் சட்டம் 1988 பிரிவு 13 (2)-இன்படி, ஊழல் வழக்கில் ஜெயலலிதாவுக்கு பெங்களூர் நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ள நிலையில், இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 191, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 ஆகியவற்றின் அடிப்படையில் அவர் தகுதியிழப்பு செய்யப்படுகிறார். அவருக்கு தண்டனை வழங்கப்பட்ட 2014ஆம்ஆண்டு செப்டெம்பர் 27ஆம் திகதி முதல், தமிழக சட்டப்பேரவை உறுப்பினரில் இருந்து தகுதியிழப்பு ஆகிறார். தண்டனைக் காலம் மற்றும் அதற்குப் பிந்திய 6 ஆண்டுகளும் அவர் தகுதியிழப்பு செய்யப்படுகிறார். இந்த உத்தரவு அவரது விடுதலை தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்பட்டு மாறுபடும். எனவே, தற்போதைய நிலையில் கடந்த செப்டெம்பர் 27ஆம் திகதி முதல் ஸ்ரீரங்கம் எம்.எல்.ஏ தொகுதி காலியானதாக அறிவிக்கப்படுகிறது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற ஜெயலலிதா, முதலமைச்சர் பதவியுடன் ஸ்ரீரங்கம் தொகுதி எம்.எல்.ஏ பதவியையும் இழந்தார். அவரது தகுதியிழப்பு குறித்து முறையான அரசாணை, கடந்த 8ஆம் திகதி தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில், மேல்முறையீட்டு மனுக்களில் விடுதலை அல்லது தண்டனையில் மாற்றம் இல்லாவிட்டால், தற்போதைய உத்தரவுப்படி ஜெயலலிதா 10 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)




## குடும்பக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்த பெண்களின் உயிரிழப்பு கவலை அளிக்கின்றது

### ஐ.நா.செயலாளர் தெரிவப்பு

சத்தீஷ்கார் மாநிலம், பிலாஸ்பூர் மாவட்ட வைத்தியசாலையில் கடந்த 8ஆம திகதி குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை முகாம் நடந்தது. இதில் 83 பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெண்களில் 69 பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 13 பெண்கள் உயிரிழந்தனர். 50இற்கும்மேற்பட்ட பெண்கள சிகிச்சைக்காக அப்பலோ, சி.ஐ.எம.எஸ்., கே.ஐ.எம்.எஸ. உள்ளிட்ட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்நிலையில் சத்தீஷ்காரில் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துக் கொண்ட பெண்கள் இறப்பு கவலையளிக்கிறது என்று ஐ.நா.சபை பொதுச்செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். இத்தகைய வைத்திய நடைமுறைகள், பாதுகாப்பான மற்றும் சுகாதார வழியில் நடத்தப்படும் என உறுதிப்படுத்த அரசு சரியாக கவனம் செலுத்த வேண்டும் என்று ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. (இ-5)

# பலி எண்ணிக்கை அதிகரிப்பு

சத்தீஷ்காரில் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து பலியானவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. முகாமில் 83 பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்த வைத்தியர் ஆர்.கே.குப்தா பொலிஸ் காவலில் வைக்கபபட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.



சத்தீஷ்கார் மாநிலம், பிலாஸ்பூர் மாவட்ட வைத்தியசாலையில் கடந்த 8ஆம் திகதி குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை முகாம் நடந்தது. இதில் 83 பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெண்களில் 69 பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 11 பெண்கள் உயிரிழந்தனர். 50இற்கும்மேற்பட்ட பெண்கள் சிகிச்சைக்காக அப்பலோ, சி.ஐ.எம்.எஸ்., கே.ஐ. எம்.எஸ. உள்ளிட்ட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில் மேலும் 2 பெண்கள் உயிரிழந்ததை தொடர்ந்து பலி எண்ணிக்கை நேற்று முன்தினம் 13 ஆக உயர்ந்தது. 20 இற்கும் மேற்பட்ட பெண்களின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளது. சம்பவம் தொடர்பாக முதலமைச்சர் ராமன் சிங் விசாரணைக்கு உத்தர விட்டுள்ளார். இதற்கிடையே 7 பேரைக் கொண்ட டில்லி எய்ம்ஸ் வைத்தியசாலை வைத்தியர்கள் குழுவினர் நேற்று முன்தினம் பிலாஸ்பூர் வந்தனர். அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்து பாதிப்புக்குள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண்களை பார்வையிட்டனர்.

இந்த சம்பவத்தில் அலட்சியமாக செயற்பட்டதாக கூறி பிலாஸ்பூர் தலைமை வைத்திய, சுகாதாரத்துறை அதி காரி வைத்தியர் ஆர்.கே. பான்ஜே, லேப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஆர்.கே.குப்தா, மாநில குடும்பக் கட்டுப்பாட்டுத்துறை அமைப்பாளர் வைத்தியர் கே.சி. உராவ், தகாத்பூர் பகுதி வைத்திய அதிகாரிவைத்தியர் பிரேம் சந்த சிங் ஆகிய 4 பேரை உடனடியாக தற்காலிக பணிநீக்கம் செய்தும் முதலமைச்சர் ராமன் சிங்உத்தர விட்டார்(இ-5)

# இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கு ஆசியான் நாடுகளுக்கு மோடி அழைப்பு விடுப்பு

இந்தியாவில் பொருளாதார, தொழில், வர்த்தக முன்னேற்றத்தில் புதிய சகாப்தம் தொடங்கியுள்ளது. இதில் ஆசியான் நாடுகளும கூட்டாளிகளாக பங்கேற்கலாம் எனறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.




மியன்மார் தலைநகர் நேபீடாவல்12 ஆவது இந்தியா - ஆசியான்மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஆசியான் அமைப்பைச் சேர்ந்த 10 நாடுகளின் தலைவர்கள், இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர். மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்ன் தொடக்க உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்தி மொழியில் உரையாற்றினார். அவர் பேசியதாவது, இந்தியாவுக்கும், ஆசியான் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளுக்கும் இடையே வர்த்தகம், மதம், கலாசாரம், கலை, பாரம்பரிய ரீதியாக பழங்காலம் தொட்டே நெருங்கிய தொடர்பு உள்ளது. அதை அடிப்படையாகக் கொண்டு தற்போதும் நட்புறவு தொடர்கிறது.

இப்பிராந்தியத்தில் சமநிலையும், அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்பட இந்தியாவும், ஆசியான் நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும். இருதரப்புக்கும் இடையேயான உறவு, எந்தவிதமான முரண்பாடுகளின்றி இயல்பானதாக உள்ளது.

நான் பிரதமராக பொறுப்பேற்று 6 மாதங்களாகின்றன. இந்த கால கட்டத்தில் கிழக்காசிய நாடுகளுடனான நட்பை நாங்கள் பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்தியாவின் கிழக்கை நோக்கி என்ற கொள்கை, தற்போது கிழக்கில் (நாடுகளில்) செயற்படுதல் என்ற புதிய கொள்கையாக மாறியுள்ளது.

பொருளாதார மேம்பாடு, தொழில் மயம், வர்த்தகம் ஆகியவற்றில் இந்தியாவில் புதிய சகாப்தம் தொடங்கியுள்ளது. ஆனால், இதை விட அதிகளவு சாதிக்கும் திறன் நமக்கு உள்ளது. பொருளாதார மேம்பாடு, வளர்ச்சிப் பாதையில் எங்களுடன் இணைந்து நீங்கள் செயறபட வேண்டும். இந்தியாவில் முதலீடு செயய முன்வர வேண்டும்.

உலகஅரசியல்மற்றும்பொருளாதார விவகாரங்களில் ஆசியான் அமைப்பின் கருத்தை மற்ற நாடுகள் அறிந்து கொள்ள ஆர்வம் காட்டும் அளவுக்கு இந்த அமைப்பு தனி அடையாளத்தைப் பெற்றுள்ளது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் அனைத்தும்ஒற்றுமையுடனும், ஒத்துழைப்புடனும் செயற்பட ஆர்வமாக உள்ளன. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி மேலும் தெரிவித்தார். (இ-5)

பாரதச் செய்தி

## தலைவி ஆங் சான் சூசியுடன் இந்திய பிரதமர் மோடி பேச்சு



12 ஆவது ஆசியான் - இந்தியா மாநாடு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகள் மாநாடு ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக மியன்மார் நாட்டுக்கு 2 நாட்கள பயணமாக சென்றுள்ள பிரதமர் மோடி, நேபிதா நகரில் உள்ள பார்க் ராயல் ஹோட்டலில் தங்கியுள்ளார். நேற்று முனதினம் பல்வேறு நாட்டு தலைவர்களை சந்தித்து பேசிய மோடி, மியன்மார் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவியும், அந்த நாட்டில் ஜனநாயகத்துக்காக 25 ஆண்டுகளுக்கும் மேலாக குரல் கொடுத்து வருபவரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகியையும் சந்தித்தார். இந்த சந்திப்பு மோடி தங்கியிருந்த ஹோட்டல் அறையில் நடந்தது. அப்போது இந்தியாவை தனது 2ஆவது தாய்நாடு என்று ஆங் சான் சூகி தெரிவித்தார். சூகியை மோடி சந்தித்து பேசியது இதுவே முதல் முறை ஆகும்.

சூகியின் தாயார் தா கின் யி 1960களில் இந்தியாவுக்கான மியன்மார் தூதராக பணியாற்றியவர் என்பதும், 1964ஆம் ஆண்டு ஆங் சான் சூகி டில்லி லேடி ஸ்ரீராம் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கான செயலமர்வு

வவுனியாவில் அமைந்துள்ள, சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கான வண்ணத்துபூச்சிகளின் இறக்கைகளை பலப்படுத்துவோம் எனும் தொனிப் பொருளினாலான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில், வளவாளராக உளநல மருத்துவர் எஸ். சிவதாஸ் கலந்துக் கொள்வார் என வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா தெரிவித்துள்ளார். (அ-2-250)

# புகையிரத இறங்குதளத்தின் நீளத்தை அதிகரியுங்கள்

(மல்லாவி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான புகையிரத சேவையின் போது புகையிரதங்களில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் இறங்கு தளத்தின் (மேடை) அளவு குறைவாக இருப்பதனால் தாம் பல்வேறு இடர்பாடுகளை சந்திப்பதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான புகையிரத சேவையின் போது புகையிரதங்களில் இணைக்கப்பட்டுள்ள பயணிகளின்இருக்கைப்பெட்டிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் புகையிரத நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் இறங்கும் தளத்தின் நீளத்தின் அளவு குறைவாகவும் இருப்பதால் புகையிரதத்தில் இருந்து இறங்கும் பயணிகள் புகையிரத தண்டவாளங்களில் இறங்குவதாக தெரிவிக்கின்றனர்.

இதன் போது பல்வேறு இடர்பாடுகளை பயணிகள் எதிர்கொள்வதாகவும் புகையிரத திணைக்களம் இதனை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவ வேண்டுமென பயணிகள் கோரிக்கையொன்றையும் முன் வைத்துள்ளனர்.

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான புகையிரத சேவையின் போது யாழ்தேவி இரவு நேர தபால் புகையிரதம் ஆகியவற்றின் பயணத்தின் போது அதிகரித்துள்ள பயணிகளின் தொகை காரணமாக 11 பெட்டிகள் தொடக்கம் 16 பெட்டிகள் வரை புகையிரதத்தில் இணைக்கப்படுகின்றன.

இதன் காரணமாக புகையிரத நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் இறங்கும் தளம் (மேடை) அண்ணளவாக 800 மீற்றர் அளவில் காணப்படுவதால் 11 பெட்டிகள் வரை மேடையினுள் உள்ளடங்க மிகுதி பெட்டிகள் தண்டவாள பகுதியில் நிறுத்தப்படுவதால், பயணிகள் தமது பயணப்பொதிகள் மற்றும் குழந்தைகள், வயோதிபர்கள் உள்ளடங்கலாக பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியிலேயே தண்டவாளப்பகுதியில் இறங்குவதாக தெரிவிக்கின்றனர்.

தண்டவாளத்தின் அருகில் புல்லு மற்றும் செடிகள் காணப்படுவதால் விஷஜந்துகளின் ஆபத்துக்களையும் எதிர்கொள்வதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே புகையிரத திணைக்களம் பயணிகளின் தொகைக்கேற்ப மேலதிக புகையிரத சேவையினை ஆரம்பிப்பதுடன் பயணிகள் இறங்கும் மேடையின் நீளத்தையும் அதிகரித்து நிர்மாணித்து உதவ வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-15)




## கரை எழில் விருது பெறுவோர்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் கரை எழில்-2014 விருது வழங்கும் நிகழ்வு மார்கழி மாதம் நடைபெறவுள்ளதாக கரைச்சி பிரதேச செயலக பண்பாட்டு அலுவலர் கு.ரஜீவன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இவ்விருதில் கலை, இலக்கிய பணிகளுக்காக விருது பெறுவோரின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஆ.வேலு (அக்கராயன்குளம்), சி.சின்னராசா (அக்கராயன் குளம்), அ.கனகரத்தினம் (கனகபுரம்), பொ.உமாகாந்தன் (தொண்டமாநகர்), வெ.சரவணபவனாந்தம் (பாரதிபுரம்) இவர்களுக்கான விருது அன்றைய தினம் கரைச்சி பிரதேச செயலக பண்பாட்டு விழாவில் வைத்து வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2-277)

# திருவையாறு பகுதியில் நிழல்தரு மரங்கள் தறித்துவீழ்த்தப்படுகின்றன

## தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் வீதியோரங்களுக்கு அருகில்காணப்படும்நிழல் தரும் மரங்கள் மற்றும் பயன் தரும் மரங்கள் சட்டவிரோதமான முறையில் தறிக்கப்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் அரசிற்கு சொந்தமான முதிரை, பாலை ஆகிய மரங்கள் பொதுமக்களின் தேவைக்காகத் தறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதியோரங்களில் காணப்படும் நிழல்தரு மரங்கள் தறிக்கப்படுவதால்வெயிலின்போது நிழலில் தரித்து நிற்பதற்கு இடமின்றி மக்கள் அசௌகரியப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் விடயம் தொடர்பில் சமூக ஆர்வலர்களால் கிளிநொச்சிமாவட்டவனவளதிணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையால் கார்த்திகை மாதம் மரநடுகை மாதம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகள், பொது இடங்களில் மரநடுகையை மேற்கொள்வதற்காக வடமாகாண விவசாய அமைச்சினால் மரக்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு மரநடுகை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் அனைவரும் இவ்வரிய வாய்ப்பை பயன்படுத்தி மரநடுகையில் ஒன்றிணைய வேண்டுமென வடமாகாண விவசாய அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம் எனும் தொனிப் பொருளில் மரநடுகை மாதம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி பகுதியில் மரங்கள் தறிக்கப்படுவது ஏன்? என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் கூடிய கவனமெடுத்து மரங்கள் தறிக்கப்படுவதை தடுத்து நிறுத்தவேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர் (அ-2-27)



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம், சிறுவர், பாதுகாப்பு சிறுவர்பொறுப்பு கடமை தொடர்பான விழிப் புணர்வை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேசசெயலர்பிரிவில் உள்ள கிளி ஊற்றுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் விழிப்புணர்வு செயலமர்வொன்றினை நடத்தியதைப் படத்தில் காணலாம். (படம்:-சிவநகர்செய்தியாளர்)

## வவுனியாவில் டெங்கு ஒழிப்பு



வவுனியா மாவட்டத்தில் டெங்கு நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கையை வவுனியா சுகாதார பணிமனையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது மாரி காலம் ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

இந்நிலையில் இந் நோய்த தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் வருமுன் காப்போம எனும் தொனிப்பொருளில் இந்நடவடிக்கை சுகாதார பணியாளர்களினால் வவுனியா நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக, நேற்று முன்தினம் வவுனியா சுகாதார திணைக்களத்தினால் வவுனியா நகர்ப்பகுதி மற்றும் வைத்தியசாலை சுற்றுவட்ட வீதிகளில் புகையடிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வருடமும் வவுனியா மாவட்டத்தில இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு டெங்கினால ஏற்படக்கூடிய உயிரிழப்புகளை குறைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-2-250)

## விபத்தில் ஐவர் காயம்

(கிளிநொச்சி)

தனியார் பேருந்தின் மீது எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதித் தள்ளியதில் பேருந்து சாரதி உட்பட பயணிகள் ஐவர் காயமடைந்தனர்.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் ஊடாக முல்லைத்தீவு நோக்கி பயணித்த தனியார் பேருந்து உடையார்கட்டு மகாவித்தியாலயத்திற்கு முன்பாக சென்று கொண்டிருந்த பொழுது வேகமாக எதிரே வந்த டிப்பர் வாகனம் ஒன்று பாதசாரி ஒருவருடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காக வீதியின் மையப் பகுதியை நோக்கித் திருப்பிய வேளை பேருந்தின் மீது பக்கவாட்டில் மோதித் தள்ளியது.

இதில் பேருந்தின் சாரதி உட்பட பயணிகள் ஐவர் காயமடைந்தனர். இது தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொள்கின்றனர். (அ-2)

# ஆசிரியர் சேவை தரம்-3-II இற்குள் எம்மை உள்ளீர்ப்பு செய்யுங்கள்

## வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியம் கோரிக்கை

ஆசிய உதவியாளர்களின் சம்பளத்தை அதிகரித்து இலங்கை ஆசிரியர் சேவை தரம்-3-II இற்குள் உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மேற்படி சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது நிரந்தர ஆசிரியர் நியமனத்தை வழங்குமாறு கோரிய தொடர்ச்சியான பல போராட்டங்களை மேற்கொண்ட பின்னர் கடந்த 2013.07.01 முதல் ஆசிரிய உதவியாளர் என்னும் நியமனம் வழங்கப்பட்டு மாதச் சம்பளமாக பத்தாயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது.

வன்னியில் இடம்பெற்ற யுத்தங்களால் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளைச் சந்தித்து எல்லாவற்றையும் இழந்து பாதிக்கப்பட்டவர்களாகிய நாம் தற்போதும் எமது தொழிலுக்கேற்ற ஊதியம் இன்றிப் பாதிக்கப்பட்டு வருகின்றோம்.

வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து இக்கால கட்டத்தில் அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த அடிப்படைச் சம்பளம் 15 ஆயிரம் ரூபா ஆக்கப்பட்டுள்ளபோது எமது சம்பள முழுத் தொகை வெறும் 10 ஆயிரம் ரூபா மட்டுமேதான்.

ஆசிரிய உதவியாளர்களுக்குச் சம்பளம் வழங்கும் போது வாழ்க்கைப்படியும் இல்லை, அரச ஊழியர்களும் இல்லை. ஆனால் கிராமங்களில் வாழ்வாதார உதவித் திட்டங்கள் போன்ற நலத் திட்டங்கள் வழங்கும் போது ஆசிரிய உதவியாளர்களது குடும்பங்கள் அரச ஊழியர் குடும்பமாகக் கணிக்கப்பட்டு எவ்வித உதவித் திட்டமும் வழங்கப்படுவதில்லை. குடும்பப் பொறுப்புள்ளவர்களாகிய வன்னி ஆசிரிய உதவியாளர்களின் இந்நிலைக்குத்தீர்வு தான் என்ன?

அரசநிறுவனங்களில் 180 நாட்கள் தற்காலிக ஊழியராக சேவையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் போது அரச பாடசாலைகளில்5வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றிய எமக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் இல்லை.

தொடர்ச்சியாக அல்லற்படும் வன்னி ஆசிரிய உதவியாளர்களின் நிலையினையும் கருத்திற் கொண்டு ஆசிரிய உதவியாளர் என்றுள்ள எமது நியமனத்தை இலங்கை ஆசிரியர் சேவை தரம்-3-II இற்குள் உள்ளீர்த்து எமது சம்பளத்தை அதிகரித்து வழங்கி உதவ ஆவன செய்யுமாறு எமக்கு நியமனம் வழங்கிய வடக்கு மாகாணக் கல்வி அமைச்சை வன்னி ஆசிரிய உதவியாளர்களாகிய நாம் கேட்டுக் கொள்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோரிக்கைகளை நிறைவேற்றாவிடில்

# பணிப்புறக்கணிப்பு

(மல்லாவி)

வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் தாம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு கோரி வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் உட்பட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐந்து மாவட்டங்களில் கடமையாற்றும் அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கு கடந்த முதலாம் திகதி மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஆயினும் இதுவரை உரிய தரப்பினர் எவரிமிருந்தும் பதில் கிடைக்கவில்லையெனவும் இதனால் தனியார் பேருந்து சேவை பணிப்புறக்கணிப்பு செய்யும் சூழ்நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின்தனியார்பேருந்து உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும் மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு பணியில் ஈடுபடும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகளும் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி மவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடத்திய கலந்துரையாடலின் போது தாம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினை தொடர்பாக தீர்மானங்களை எடுத்தனர்.

எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்தக் கோரி மகஜர் ஒன்றை மேற்படி பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஆயினும் இதுவரை உரிய தரப்பினர் எவரிமிருந்தும் தமக்கு தீர்வோ பதிலோ கிடைக்கவில்லையெனவும் இதனால் தாம் தனியார் பேருந்து சேவைப் பணியினை புறக்கணிப்பதன் ஊடாக தமது கோரிக்கைகளை உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாகவும் மேற்படி மாவட்டங்களைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். (அ-2-15-277)

### வெள்ளி விழாவும் பரிசளிப்பு விழாவும்

கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தின் வெள்ளி விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கெ.அன்ரன் மரிய தாஸ் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் மற்றும் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்புவிருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர்கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் ஸ்தாபகர் ப.தணிகாசலம், பாடசாலையில் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் க.சசிவலிங்கம், சென் ஜோன்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் ஏ.முருகானந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவ் விழாவில் வெள்ளி மலர் வெளியீடும் 25 வருடங்களாக பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இவ்வாண்டுக்கான பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும் நடைபெறவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (அ-2-277)

## வாகன விபத்தில் பெண் படுகாயம்

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்தில் எல்வ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் குடும்பப் பெண்ணொருவர் முகத்தில் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து சம்பவம் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் மாங்குளம் சந்தியில் இடம்பெற்றது.

இதில் துணுக்காய் வீதி மாங்குளத்தைச் சேர்ந்த திருமதி செல்வரெட்ணம் சதீஸ்குமார் (வயது-39) என்பவர் முகத்தில் படுகாயமடைந்தார். இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி வேகமாக பயணித்த எல் வாகனம் மாங்குளம் சந்தியை அண்மித்து துணுக்காய் பகுதியை நோக்கி திரும்ப முற்பட்ட வேளையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையிலிருந்து மாங்குளம் மகா வித்தியாலயம் நோக்கி புறப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் கடமை புரிகின்ற சுகாதார பணியாளர் படுகாயம் அடைந்துள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த பிரஸ்தாப குடும்பப் பெண் முகத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அத்தோடு பயணித்த மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்தது.

போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த மாங்குளம் போக்குவரத்து பொலிஸார் எல் வாகன சாரதியை கைது செய்ததுடன் வாகனத்தையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைமேற்கொண்டனர். (அ-2-15)




### காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு

(மல்லாவி)

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள கொல்லர் புளியங்குளம், மன்னகுளம் ஆகிய கிராமங்களில் மக்கள் குடிமனையினுள் காட்டு யானைகள் உட்புகுந்து அட்டகாசம் செய்வதால் தமது வாழ்வாதார பயிர்ச்செய்கைகள் பாதிப்படைவதாக அப் பகுதி மக்கள் தமது பகுதி கிராம சேவையாளர் உட்பட துறை சார்ந்த அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டது ஏ-9 வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ளதுமான கொல்லர் புளியங்குளம், மன்னகுளம் ஆகிய கிராமங்களுக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியிலிருந்து தனியாகவும் மற்றும் கூட்டம் கூட்டமாகவும் வரும் காட்டு யானைகள் மா, பலா, தென்னை உட்பட பொருளாதாரப் பயிர்களான வாழை, மிளகாய், வெங்காயம் ஆகிய பயிர் வகைகளையும் நாசப்படுத்தி வருகின்றன.

இதனால் இரவு பொழுதை மக்கள் கண்விழித்து தீப்பந்தங்களைக் கொளுத்தியும் ஒலிகளை எழுப்பியும் யானைகளை காட்டுக்குள் விரட்டுகின்றனர்.

ஆயினும் அவை மீண்டும் மீண்டும் குடிமனையினுள் நுழைவதால் உரிய தரப்பினர் இதனைக் கவனத்தில் எடுத்து யானைக் கூட்டத்தை அடர்ந்த காட்டு பிரதேசங்களுக்குள் விரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-15)

## “எங்களுக்கு வேணும்” சிறுவர் விழிப்புணர்வு வீதி நாடகம் முன்னெடுப்பு



(குருமன்காடு)

சிறுவர் நன்னடத்தை திணைக்களம் மற்றும் சனத்தொகை சேவாலங்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகத்தினால் எங்களுக்கு வேணும் எனும் சிறுவர் விழிப்புணர்வு வீதி நாடகம் வவுனியா நகரில் நடத்தப்பட்டு வருகின்றது.

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள சிறுவர் தொடர்பான பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சிறுவர்களை விட்டு தாய் வெளிநாடு செல்லல், சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் சிறுவர் மத்தியில் விழிப்புணர்வு ஊட்டும் வீதி நாடகம் நேற்று முன்தினம் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. கிராமங்களிலும் இவ் வீதி நாடகத்தை அரங்கேற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளதாக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜே.கெனடி தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் இவ் வீதி நாடகம் நேற்று முதல் கிராமங்கள் தோறும் அரங்கேற்றப்படுகிறது. இவ் வீதி நாடக ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலாளர் கா.உதயராசா, உதவிபிரதேசசெயலாளர்ஸ்கன்னன், கிராம அலுவலர்கள், பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர். (அ-2-250)

## கஞ்சா வைத்திருந்தவர் வவுனியாவில் கைதானார்

(குருமன்காடு)

வவுனியா பேருந்து நிலையப் பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்து மூலம் வவுனியா பேருந்து நிலையத்திற்கு நேற்று முன்தினம் வந்திறங்கிய நபர் ஒருவரின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட சிவில் உடையில் நின்ற பொலிஸார் அவரது கையில் இருந்த பயணப்பையை சோதனையிட்டனர்.

இதன்போது கருவாட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 650 கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் குருநாகல் பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் யாழிலிருந்து குருநாகலுக்கு கஞ்சாவை கொண்டு செல்வதற்கே பேருந்து நிலையத்தில் இறங்கியிருந்தார் என்பதும் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-2-250)

## வடமாகாண வணிக போட்டியில் வவு.தெற்கு வலயம் முதலாமிடம்

(குருமன்காடு)

வடமாகாண வணிகப்போட்டி கடந்த 2 ஆம் திகதி யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் வட மாகாண வர்த்தக பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகள் பங்குபற்றின.

இதில் வவுனியா தெற்கு வலயம் 8 இடங்களைப் பெற்று வடமாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ளதாக வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெ.சோமராஜா அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின்விபரம்வருமாறு,

முதலாம் இடம்பெற்ற மாணவர்கள்

பிரிவு-I (குறுவினா)
யோ.தருணன் (வ/தமிழ்.ம.ம.வி).

பிரிவு-II
சு.தபோஷினி (வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி)

பிரிவு-III (பேச்சு)
ப.தயாளினி (வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம்பெற்ற மாணவர்கள்

பிரிவு-I (குறுவினா)
யோ.யதுர்ஷிகா (வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி)

பிரிவு-II (கட்டுரை)
கோ.சாருஹாசினி (வ/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி)

பிரிவு-III (குறுவினா)
கி.தனிஸ்காந் (வ/விபுலானந்தா கல்லூரி)

மூன்றாம் இடம்பெற்ற மாணவர்கள்

பிரிவு-II (குறுவினா)
சி.மயூரன் (வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

பிரிவு III (பேச்சு)
இ.கேதுஜா (வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி) (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு லயன்ஸ் கழகங்களால் உதவு பொருட்கள்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சுன்னாகம், மல்லாகம் தெல்லிப்பழை, மானிப்பாய் நகரம், உரும்பிராய், இணுவில் ஆகிய லயன்ஸ் கழகங்கள் இணைந்து செயற்றிட்டங்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மேற்கொண்டுள்ளன.

லயன்ஸ் கழகங்களின் மாவட்டத் தலைவர் லயன் சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பதில் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி திவாகரன், லயன்ஸ் கழக இரண்டாவது உதவி மாவட்ட ஆளுநர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளரும் லயன்ஸ் கழக வலயத் தலைவருமாகிய லயன் சி.ஹரிகரன் ஆகியோர் உரையாற்றினர்.

வைத்தியசாலையின் அபிவிருத்திகள் குறித்தும் மீள்குடியேற்றப் பிரதேசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் வைத்தியசாலையின் தேவைகள் குறித்தும் பதில் வைத்திய அத்தியட்சகரால் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

மேற்படி நிகழ்வில் செயற்றிட்டங்களாக 36 ஊன்றுகோல்களும், 3 சக்கர நாற்காலிகளும், 24 கண் வில்லைகளும் வழங்கப்பட்டதுடன், வைத்தியசாலை வளாகத்தில் பயன்தரு மரங்களும் லயன்ஸ் கழகங்களால் நடப்பட்டன.

மேற்படி நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் லயன் சோ.சுகிர்தன், லயன்ஸ் கழக மாவட்டத்தின் முதற்பெண்மணி றொஸ்னி இக்னேசியஸ் கமிலஸ், ஆளுநர்சபை பொருளாளர், ஆளுநர்சபை இணைப்பாளர்கள், ஆளுநர்சபை உறுப்பினர்கள், லயன்ஸ் கழக அங்கத்தவர்கள், வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (இ)

# போரில் அரசாங்கம் வெற்றி பெற நிறைவேற்று அதிகாரம் காரணம்

## அமைச்சர் சுசில் விளக்கம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்திருந்தால் ஒருநாளும் போரை வென்றிருக்க முடியாது எனவும் நாட்டில் மீண்டும் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகள் நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்யுமாறு கோரி வருவதாக அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

நாட்டில் பாரியளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. நகரங்களுக்கு மட்டுமன்றி கிராமங்களுக்கும் அபிவிருத்தி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த நாட்டு மக்களுக்கு நிறைவேற்று அதிகாரம் பிரச்சினையில்லை.

நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்யுமாறு எதிர்க்கட்சிகள் எழுப்பி வரும் கோசம் மிகவும் பலவீனமானது. இன்று நாட்டில் சிந்திக்கக் கூடிய வாக்காளர்களே இருக்கின்றார்கள். ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் முக்கியமான ஓர் அரசியல் கட்சியாகும்.

எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் யானைச் சின்னத்தில் ஒரு வேட்பாளரை நியமிக்க முடியவில்லை. 2010 ஆம் ஆண்டில் கரு ஜயசூரிய 17 பேருடன் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார். பின்னர் அவர் எதிர்க்கட்சிக்கு தனியாகவே சென்றார்.

நல்ல தலைவராக இருந்திருந்தால் கரு ஜயசூரியவிற்கு தனியே சென்றிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. எதிர்க்கட்சியின் பொது வேட்பாளர் இதுவரையில் தெரிவாகவில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே இந்த நாட்டின் சிறந்த பொது வேட்பாளர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# காணி அளவிடும் நடவடிக்கை நேற்று தடுத்து நிறுத்தப்பட்டது

யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் பகுதியில் மக்களுக்கு சொந்த மான காணிகள் அரசாங்கத்தினால் நேற்றுக் காலை சுவீகரிக்க எடுக்கப்பட்ட முயற்சி வடமாகாண சபை உறுப்பினர்களின் முயற் சியால் கைவிடப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் குறித்த பிரதேசத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு காணிகள் அளவிடும் நடவடிக்கைகள் திடீரென இடம்பெற்றன.

இதேவேளை இந்நடவடிக்கையினை தடுத்து நிறுத்தும் பொருட்டு காணிகளின் உரிமையாளர்களும் அப்பிரதேச மக்களும் அப்பகுதியில் கூடி தடுத்து நிறுத்தினர்.

இதன் காரணமாக அப்பகுதியில் மேலும் பெருந்தொகையான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு காணி சுவீகரிப்பு நடவடிக்கையினை மேலும் முன்னெடுத்து செல்வதற்கு நில அளவை த்திணைக் களத்தினர் முயற்சித்தனர்.

இத்னையடுத்து அங்குள்ள காணி உரிமையாளர்களாலும் மக்களா லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு தெரியப் படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், பா.கஜதீபன், பருத்தித்துறை நகர சபையின் உப தவிசாளர் சதீஸ் ஆகி யோர்வருகைதந்து உரிய அதிகாரிகளுடன் கலந் துரையாடிய தைய டுத்து காணி அளவீடுகள் அனை த் தும் உடனடிய ா க கைவிட ப்பட்தாக வட க்கு மாகாண சபையின் உறுப்பினர் எஸ்.சுகி ர் தன் தெரிவித்தார்.

மேலும் அப்பகுதி யிலுள்ள மக்கள் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், தமது உறுதிக் காணிகள்தமக்குவேண்டுமெனவும் அதனை கைவிடுவதற்கு தாம் ஒரு போதும் தயாராக இல்லை எனவும் எமது குறைகளை கேட்டு சம்பவ இடத்திற்கு உடனடியாக வந்து உதவி புரிந்த மாகாண சபை உறுப்பினர்களுக்கு நன்றிகளை தெரிவித்ததாகவும் கூறியிருந்தனர். அத்துடன் கட்டைக் காட்டு பிரதேசத்தில் திடீரென குவிக்கப்பட்ட இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் தாம் பெரிதும் பதற்றம்அடைந்துள்ளோம் எனவும் தெரிவி த்தனர்.

எனவே மக்களது சொந்தக் காணிகள் சுவீகரிக்கப்டுவது முற் றிலும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களுக்கு அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-7-6)


## நிரந்தர வேலைவாய்ப்பு

சம்பளம் 18000/=, 25000/=,32000/= மாதம் கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளில் 195 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் (ஜேம்/டொபி/சொக்லேட்/யோக்கட்/பிளாஸ்டிக்/கிளவுஸ்/பால்மா....)இன்னும் பலவற்றிக்கு உற்பத்தி, லேபல்,பொதியிடல் பிரிவுகளுக்கு 18-45 வயது ஆண்,பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் (விசேடம் பெண்கள், குழுக்கள் நண்பர்கள், தம்பதியினராகவும் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள். வருகை அன்றே வேலை.

(சி-9066) தொடர்புக்கு:- 077 1116770/ 077 6838231



## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்

### கேள்வி அறிவித்தல்

யாழ்.மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய (10.02.2015-09.02.2016) கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

01.யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம்
02.மல்லாகம் நீதிமன்ற வளாகம்
03.சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்
04.ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்
05.பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்
06.யாழ்ப்பாணம் சிறுவர் நீதவான் நீதிமன்றம்

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ.100/= ஐயும் மீளளிக்கக்கூடிய ரூ.25000/= ஐயும் செலுத்தி 28.11.2014 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 28.11.2014 பிற்பகல் 2 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பிற்பகல் 2.30 மணிக்கு விலை மனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்கவேண்டும்.

அ.பிரேமசங்கர்,மேல்நீதிமன்ற நீதிபதி/ தவிசாளர். (சி/9069)
மேல்நீதிமன்ற பெறுகைக்குழு, மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்.



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 54 செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: B/3709 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 53 1/2 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.A<br>தொ.இ: G/3710 |
| பிறப்பு: 1984 RC<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 20 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: B/3712 | பிறப்பு: 1991 RC<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 20 1/4 சூரிசெவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3711 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 48 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/3713 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 30 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA,MA<br>தொ.இ: G/3717 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 9 1/4<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: HNDE/ பொறியியலாளர்<br>தொ.இ: B/3714 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3723 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
...காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிருகிறது எபோலா

# 5000 பேர் உயிரிழப்பு

## ஒரு வாரத்தில் 200 பேர் பலி!



ஆபிரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள கினியா, லைபிரியா, சியாராலியோன், மாலி ஆகிய நாடுகளில் எபோலா நோய் பரவி வருகிறது.

நோயை கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் மற்றும் பல்வேறு நாடுகளும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு போதிய பலன் கிடைக்கவில்லை. இதுவரை இந்த நோய்க்கு 5 ஆயிரத்து 160 பேர் பலியாகி இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை எபோலாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை தாண்டி யிருப்பது உலக நாடுகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 200 பேர் பலியாகி இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

லைபீரியா நாட்டில் தான் நோய் தாக்குதல் அதிகமாக உள்ளது. அங்கு மட்டும் 2ஆயிரத்து830 பேர் உயிரிழந்துள்ளனர். கினியா நாட்டில் ஆயிரத்து100 பேர் உயிரிழந்துள்ளனர். மாலி நாட்டில் நோய் தாக்குதல் இப்போது தான் தொடங்கி உள்ளது. அங்கு நேற்றுமுன்திணம மட்டும் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது இந்த நாடுகளில் 14 ஆயிரம் பேர் எபோலா நோய் தாக்குதலுக்கு ஆளாகி உள்ளனர். அவர்களை காப்பாற்ற தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இறந்தவர்களை பாதுகாப்பாக புதைபபதற்கு மட்டும் 370 பயிற்சி பெற்ற குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (இ-5)

## ஜி 20 மாநாட்டினை முன்னிட்டு பிரிஸ்பேனில் பலத்த பாதுகாப்பு

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் நடைபெறவுள்ள ஜி 20 மாநாட்டையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ள ஜி 20 அமைப்பு மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய மற்றும் சீன ஜனாதிபதிகள் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

கடந்த காலங்களில் இம்மாநாடுகள் நடைபெற்ற இடத்தில் முதலாளித்துவத்துக்கு எதிரான பல்வேறு அமைப்பினர் போராட்டங்களை நடத்தியுள்ளனர். குறிப்பாக கடந்த 2006ஆம் ஆண்டு மெல்போர்னில் நடைபெற்ற மாநாட்டின்போது, போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இது தவிர, ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் அச்சுறுத்தலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால், பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த அவுஸ்திரேலிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பிரிஸ்பேனில் மாநாடு நடைபெறும் இடத்தில் சந்தேகத்துக்கிடமான வகையில் யாராவது சுற்றித்திரிந்தால், அவரின் ஆடைகளை களைந்து சோதனை செய்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பிரிஸ்பேன் பகுதியில் விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மாநாடு நடைபெறும் இடத்துக்குச் செல்வதற்கான வீதிகளில் தடுப்புகளை அமைத்து பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-5)

## 43 மாணவர்கள் கொலை எதிரொலி

# மெக்சிக்கோவில் சட்டசபை கட்டடம் தீ வைத்து எரிப்பு

அமெரிக்காவின் அண்டைய நாடான மெக்சிகோவில் போதை மருந்து கும்பலும், ஆயுத கும்பல்களும் பயங்கர குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் லுகுலா என்ற இடத்தில் 3 வாரத்துக்கு முன்பு கல்லூரி மாணவர்கள் 43 பேரை ஆயுத கும்பல் ஒன்று கடத்தி சென்றது. இப்போது 43 மாணவர்களையும் அவர்கள் கொலை செய்துள்ளது தெரியவந்துள்ளது.

இதனால் லுகுலா நகரத்திலும் குரைரோ மாநிலத்திலும் பயங்கர கலவரம் வெடித்துள்ளது. மக்கள் தெருவில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். நேற்று முன்தினம்குரைரோ சட்டசபை கட்டடத்தை நோக்கி பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு சென்றனர். அவர்களை பொலிஸார் தடுதது நிறுத்த முயன்றனர். ஆனால் பொலிஸாரை அவர்கள் தாக்கி விட்டு அந்த சட்டசபை கட்டடத்துக்குள் நுழைந்து தீவைத்தனர்.

கட்டடத்தின் அருகே நிறுத்தியிருந்த 10இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. ஆளும் கட்சி அலுவலகத்துக்கும் தீ வைத்தார்கள். தொடர்ந்து அங்கு கலவரம் நடந்து வருகிறது.

மாணவர்கள் கடத்தப்பட்டு 3 வாரம் கடந்த நிலையிலும் அரசு அவர்களை மீட்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காததால் மக்கள் கொந்தளித்து இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


# ஆறாத்துயருடன் 45ஆம் நாள் நினைவஞ்சலி

அகம் மகிழ:-28.12.1991

மனம் நெகிழ :-01.10.2014



## நவரட்ணம் துஷிகேசன்

முகாமைத்துவ வணிகபீட 2 ஆம் வருட மாணவன்
யாழ்.பல்கலைக்கழகம்;யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன்

*எங்கள் துஷிக்குட்டி எங்கு சென்றாய்?*
செம்மொழி பேசிடும் செந்தமிழ்ச் செல்வா
சிறுபிள்ளை மழலைமொழியில் செந்தமிழ் பொழிந்தாயே
உன் கல்வித் திறமை கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோமே
காலனவன் ஒரு நொடியில் உன்னைக் கவர்ந்தானே
எங்கள் துஷிக்குட்டியே எங்கு சென்றாய்?
ஒழுங்கை தெரிந்தால் ஓடோடி வந்திடுவோம்
பாதை தெரிந்தால் பாய்ந்தோடி வந்திடுவோம்
அம்மம்மா மடியில் இருந்து பாலுண்டு வளர்ந்தாயே
அம்மம்மா தனது கண்கண்ட பேரன் என்று சொல்லுவாவே
அம்மம்மா சென்ற பாதையை நாடினையோ?
நீயில்லா இவ்வுலகில் செவ்வானமும் சிவக்கவில்லையே
சென்ற இடம் தூரமோ தூயவனே ஓடிவா
நாமெல்லாம் கொஞ்சி மகிழ்ந்திடவே

"பசுபதி"
இல.11, முத்தமிழ் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உனது பிரிவால் துயருறும்
பசுபதீ-விஜயலட்சுமி
(சின்னக்கிளி)அம்மம்மா
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்திற்கு பல கருவிகள் உண்டு; அவற்றுக்கு எல்லாம் பொருத்தமான கைப்பிடி ஏமாற்று.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் மகிந்தவை ஆதரிக்கும் சாயல் தெரிகிறது

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து யாழ் புகையிரத நிலையத்தை திறந்து வைத்த நிகழ்வில் கலந்துகொள்ள மறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்,

பின்னாளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த பின் வழங்கிய தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர்.

தேநீர் விருந்துபசாரத்தின் போது ஜனாதிபதியை ஆரத்தழுவுவதில் கூட்டமைப்பினர் காட்டிய அவா கண்டு அதிசயிக்காதோர் இல்லையெனலாம்.

சரி! எல்லாவற்றையும் பொறுத்த பூமித்தாய் கூட்டமைப்பின் இத் திருக்கூத்தையும் பொறுத்தருளும் என்பதால் அதுபற்றியும் அலட்டிக்கொள்ளாமல் விட்டு விடலாம்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைக் கால கருத்துக்கள், அறிவிப்பிப்புக்களைப் பார்க்கும் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்கான சாயல் தெரிவதைக் கண்டு கொள்ள முடியும்.

கடந்த முறை நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்து விட்டு சம்பந்தர் அப்படியே இருந்து விட்டார்.

சம்பந்தரின் அறிவிப்பைத் தனக்குச் சாதகமாக்கிய மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகினார்.

மகிந்த ராஜபக்ஷ முதற் தடவை ஜனாதிபதியாக வருவதற்கு விடுதலைப்புலிகள் காரணம் என்று கூறப்படுவதும் உண்டு.

ஆக, முதலில் விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி ஜனாதிபதியாக வந்தவர் இரண்டாவது தடவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்தி பதவியை தனதாக்கிக் கொண்டார். மேற்குறிப்பிட்ட இரண்டு தடவைகளும் மறைமுகமானவை.

இப்போது மூன்றாவது தடவை. மூன்றாவது தடவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெளிப்படையாக ஆதரிக்கும் போல் தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பது தொடர்பில், தேர்தல் விஞ்ஞாபனத்தில் விபரிக்கப்படுமாயின் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க முடியும் என்று கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

நிபந்தனை விதிப்பதுபோன்ற இந்த அறிவிப்பு ஆச்சரியமானதே! தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்று விட்டால் அது அப்படியே சட்டமாகி- சரித்திரமாகி விடும் என்று கூட்டமைப்பு நம்புவதற்குள் கடுமையான போலித்தனம் தெரிகிறது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது தமிழத் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்ட விடயங்களில் பெரும்பாலானவை இன்னமும் அரங்கேறாமல் இருக்கின்றன.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் முன்வைக்கப்படும் தேர்தல் விஞ்ஞாபனத்தை கீதையென்றோ? திரிபீடகமென்றோ? புனித விவிலியம்மென்றோ? அல்லது திருக்குரானென்றோ? கூட்டமைப்புக் கருதுவது அபத்தமானது.

தேர்தல் விஞ்ஞாபனமும் ஏமாற்றப்படலாம் என்பது கூட்டமைப்பினருக்குத் தெரியாத சமாச்சாரம் அல்ல.

அதேநேரம் சர்வதேச நாடுகளும் ஜெனிவாவில் கூடி இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற;

இலங்கை மீது போர்க் குற்றச்சாட்டு தொடர்பில் ஐ.நா சபை விசாரணை மேற்கொள்வதில் தீவிரம் காட்டி வருகிறது.

இச்சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பு மௌனமாக இருப்பதை விடுத்து, ஆள்மாறி ஆள் அறிக்கை விடுவது அவ்வளவு நல்லதல்ல. கால சூழல் மீது கூட்டமைப்பு கவனஞ்செலுத்துவது அவசியம்.

# தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை மோசமான கோரிக்கைகளை முன்வைக்கத்தூண்டும்

## ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஆனந்தசங்கரி

தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையால் எதிர்ப்பலைகள் மிக விரைவாக வலுவடைந்து வருவதால் மேலும் மோசமான கோரிக்கைகள் முன்வைக்கக் கூடிய சூழ்நிலைகளை உருவாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி எழுதியுள்ள கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

தங்களுக்கு சங்கடத்தை தரக்கூடிய ஆனால் தட்டிக்கழிக்க முடியாத இந்த விடயத்தில் தலையிடுமாறு கேட்பதற்கு என்னை அனுமதிக்கவும். எமது நாட்டுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய முக்கிய விடயம் மட்டுமல்ல, ஓர் முக்கிய நெருங்கிய பெரிய அயல்நாட்டுடனான எமது உறவையும் தளரச்செய்யும். சம்பந்தப்பட்ட நாட்டிலிருந்து ஒரு வேண்டுதல் வருவதற்கு முன்னதாக நாமாகவே முன்வந்து நடவடிக்கையெடுக்க வேண்டும். எப்போது தேவையென கருதும் போதெல்லாம் நானாக முன்வந்து சில முக்கிய விடயங்கள் சம்பந்தமாக எனது ஆலோசனைகளை தங்களுக்கு வழங்கியுள்ளேன். நாட்டின் நன்மைகருதி வழங்கப்படும் ஆலோசனைகளில் இதுவும் ஒன்றுதான்.

நாட்டின் சட்டவிதிகளுக்கமைய விதிக்கப்பட்ட மரணதண்டனைதான் ஐந்து இந்திய மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையாகும். ஆனால் இப்பிரச்சினை குறிப்பாக கச்சதீவு பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகளுடன் தொடர்புள்ளமையால் நான் மிகவும் விநயத்துடன் வேண்டுவது தங்களுக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி விதிக்கப்பட்டுள்ள தண்டனையை மேல்நீதிமன்றில் மீள் பரிசீலனைக்குட்படுத்தி, அல்லது தண்டனையை குறைத்து குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுமாறு வேண்டுகிறேன். இவ்வேண்டுகோளானது 60 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட அரசியல்வாதியிடமிருந்து வருகிறது. அவர் தங்களுடன் பாராளுமன்றத்தில் இருந்தமையால்தான் இவ்விரு நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் வரலாற்றை அறிந்திருக்கிறார்.

மே மாதம் 25ஆம் திகதி 1995ஆம் ஆண்டு "டெய்லி நியூஸ்" பத்திரிகையிலும், இரு நாட்களின் பின்பு "தினமின" சிங்கள பத்திரிகையிலும் வெளிவந்த "தற்போதைய நிலையிலுள்ள இலங்கை-இந்திய உறவு" என்ற தலைப்புடன் வெளிவந்த கட்டுரை என் கைக்கு கிட்டியது.

இன்று மிகவும் பிரச்சினைக்குரிய விடயம் கச்சதீவு ஆகும். அதுபற்றி அக்கட்டுரையில் பின்வருமாறு நான் கூறியிருந்தேன். "ஸ்ரீமதி இந்திரா காந்தி இலங்கைக்கு கச்சத்தீவை கையளிக்கின்றபோது மிகப்பெரிய எதிர்ப்பும் ஆட்சேபனையும் இருந்தது. ஆட்சேபித்தவர்களுக்கு இதுவொரு பெறுமதியற்ற கற்பாறை நிறைந்த தீவு" என சமாதானம் கூறி எதிர்ப்பாளர்களை மௌனப்படுத்தினார். அவர் அவ்வாறு செய்வதால் இந்திய நாட்டின் பாதுகாப்புக்கு ஒரு காலத்தில் பங்கம் ஏற்படும் என்பதை நன்கு அறிந்திருந்தார். இது உண்மையில் இந்திரா காந்தி அம்மையாருடைய நட்பு நிறைந்த நற்செயலாகும். இலங்கை ஒருபோதும் தமக்கு துரோகம் செய்யாது என நம்பிக்கை கொண்டிருந்தார்.

அக்கட்டுரையில் நான் பல்வேறு விடயங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளேன். அவற்றில் சில முக்கியமானவையும் நம் இரு நாடுகள் சம்பந்தப்பட்டவையுமாகும்.

ஏனையவை ஒருபுறமிருக்க, கச்சதீவு சம்பந்தமாக எழுதப்பட்டுள்ள பகுதியை ஊன்றிப் படியுங்கள். அன்றைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கச்சதீவு இலங்கைக்கு கையளிக்கப்பட்டவேளை இந்திய மாநிலங்கள் சில குறிப்பாக தமிழ்நாடு பெரும் எதிர்ப்புக் காட்டியது. கச்சதீவு பற்றி ஸ்ரீமதி இந்திராகாந்தி அம்மையார் தெரிவித்ததை நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தேன். கச்சதீவை விடுதலைப் புலிகள் தமது தளமாக பயன்படுத்த வாய்ப்புண்டு என கவலையுற்றதோடு அது பின் நாட்களில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமெனவும் அறிந்திருந்தார். அவ்வாறு ஒருவர் இன்றும் சிந்திப்பதில் தவறில்லை. விசேடமாக எமது நாடும் சீனாவும் காட்டிவரும் நெருங்கிய உறவும், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள்ள உறவில் ஏற்பட்டுள்ள விரிசலுமாகும்.

இந்திய சாணக்கியத்திலும், ஜனநாயகத்திலும் இருந்து நாம் கற்க வேண்டிய பல விடயங்கள் உண்டு. கச்சதீவு சம்பந்தமாக நமது நாடு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் இந்திய மீனவருக்கு பல உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. இருந்தும் இன்று கச்சதீவு இலங்கையின் ஏக சொத்தாகும். கச்சதீவு இன்று ஓர் பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

**ஜனாதிபதி அவர்களே!**

நான் எப்போதும் கச்சதீவு பிரச்சினை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டுமென விரும்பியவன். மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள சம்பவத்துக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பலைகள் மிக விரைவாக வலுவடைந்து வருவதால் மேலும் மோசமான கோரிக்கைகளை முன்வைக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கும். முன்னொரு சந்தர்ப்பத்தில் அரசினுடைய ஆலோசனையை பெற்றே அப்போது உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தற்போது வலுவடைந்துவரும் ஆட்சேபனை அலை சிலசமயம் அரசின் ஆலோசனையை பெறாமலே சுயாதீனமான ஒரு முடிவை உச்ச நீதிமன்றம் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதை கவனத்தில் கொள்ளவும். ஆகவே மிக அவதானத்துடன் விரைவாக செயற்படும்படி தங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### அமைதியின் சொற்கள்

உங்கள் வாழ்க்கையில் அமைதி ஏற்படவேண்டும். இதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யாதவரை உங்கள் வாழ்க்கை குறையுள்ளதாகவே இருக்கும்.

(பிரேம் ராவத்)

## அமைய ஊழியர்களை நிரந்தரமாக்க 25/2014 சுற்றறிக்கை வெளியானது

அரசாங்க சேவை,மாகாண அரசாங்க சேவை, அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் தற்காலிக, அமைய (நாளாந்த), பதில்கடமை, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு தற்போது கடமையில் ஈடுபட்டு வருகின்ற உத்தியோகத்தர்களுக்கு 24.10.2014 ஆம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு 2015 வரவு செலவுத் திட்டத்திற்கமைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 25/2014 ஆம் இலக்கமுடைய சுற்று நிருபத்தின் மூலம் இந்நியமனங்கள் தொடர்பாகத் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 24.10.2014 ஆம் திகதியில் 180 நாட்கள் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம் சாராத உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் ஆகியோர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்றும் ஆரம்பத் தரம் - தேர்ச்சியற்ற உத்தியோகத்தர், ஆரம்பத் தரம் - அரைத தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தர், ஆரம்பத் தரம் - தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தர் ஆகிய சேவைத் தரங்களுக்குரியவர்கள் ஆகக் குறைந்தது 8 ஆம் வகுப்பு அல்லது 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

**அதிகமாக தூங்காதே**

★ பிறரை நன்மை செய்யத் தூண்டுங்கள். அதிலும் உங்களுக்கு நன்மை உண்டு. பிறர் செய்யும் தீமையை விட்டு தடை செய்யுங்கள். அதிலும் உங்களுக்கு நன்மை உண்டு.

★ தந்தையின் உடன்பிறப்பு சிறிய தந்தை, தாயின் உடன்பிறப்பு சிறிய தாய் இருவரும் தாய், தந்தைக்கு நிகரானவராகும்.

★ குறையாக இருந்தாலும் தொடர்ந்து செய்யக்கூடிய நற்செயல்களே அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமாக இருக்கும்.

★ நன்மை என்பது நல்லகுணம். தீமை என்பது உள்ளத்தில் மறைந்திருக்கும் கபடம். கபடத்தை பின்பற்றாதீர்கள்.

★ அதிகமான தூக்கம் உள்ளத்தை மரணிக்கச் செய்யும். அதனால், கவலைகள் உண்டாகும்.

★ கண்ணில்லாத குருடர்களுக்கு உதவி செய்பவரின் 100 குற்றங்கள் மன்னிக்கப்படும்.

★ மலர்ந்த முகத்துடன் இருப்பீராக! மலர்ந்த முகத்தவரை அல்லாஹ் நேசிக்கின்றான். கடுகடுத்த முகத்துடையவர்களை வெறுக்கின்றான்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2014
"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய
பழமரங்களைக் கேட்டுப்பார்
உனது பரம்பரையின் கனவுகளை
இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்"
-கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனானது மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி





மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை நடத்திய 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட தொடரில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை சம்பியனாகியது.

போட்டிகளின் இறுதிப் போட்டி அண்மையில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற அரையிறுதிப் போட்டிகளில் யாழ். இந்துக் கல்லூரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதின.

இப் போட்டியில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றாலும் இறுதியில் யாழ்.இந்துக் கல்லூரி 46:40 என்னும் புள்ளிகள் கணக்கில்சென்பற்றிக்ஸ்கல்லூரியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப்பாடசாலை மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை மரூண் அணிகள் மோதின.

இதில் 36:30 என்னும் புள்ளிகள் கணக்கில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை நீல அணி வெற்றி பெற்று இறுதிக்கு தகுதிபெற்றது.

விறுவிறுப்பாக இடம் பெற்ற அரையிறுதியில் இரு அணிகளும் பாதியாட்டம் வரை மாறிமாறிபுள்ளிகளைப்பெற்றது.

முதல் கால் ப்பாதியின் போது 9:7 என முன்னிலை வகித்த மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை நீல அணி 17:12, 26:18 என அடுத்த கால் பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இறுதியில் 37:28 என்னும் புள்ளிகள் கணக்கில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை நடத்திய 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட தொடரில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை நீல அணி சம்பியனாகியது.

போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரனாக யாழ் இந்துக் கல்லூரியின் ஆர்.கீர்த்திகன், போட்டியின் சிறப்பாட்டக்காரனாக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை நீல அணியின் பீ.சஜிந்தன் தெரிவானார்கள். (க-23)

## மஹேலவின் விருப்பம்

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் மஹேல ஜெயவர்த்தன மீண்டும் தொடக்க வீரராக ஆட விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகள் அடுத்த ஆண்டு தொடங்கவுள்ள நிலையில் இலங்கை அணியின் மூத்தவீரர் 37 வயதான ஜெயவர்த்தன உலகக் கிண்ணப் போட்டிகளோடு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறத் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில் தொடக்க ஆட்டக்காரராக விளையாடும் விருப்பம் தெரிவித்துள்ள ஜெயவர்த்தன இது பற்றி கூறுகையில் என்னை தொடக்க ஆட்டக்காரராக விளையாட அனுமதிக்கும்படி தேர்வாளர்களிடம் மண்டியிட்டு கேட்ட முடியாது.

ஆனால் தொடக்க ஆட்டக்காரர் வரிசை எனக்குப் பொருத்தமானது. உலகக் கிண்ணப் போட்டிகளில் அந்த வரிசையில் ஆடவேண்டும் என்று நினைக்கிறேன்.

அதேநேரத்தில் மிடில் வரிசையில் போதிய அனுபவம் வாய்ந்த துடுப்பாட்டக்காரர்கள் இல்லாததால் அந்த வரிசையில் நான் ஆடவேண்டும் என்று தேர்வாளர்கள் விரும்புகிறார்கள்.

உலகக் கிண்ணத்திற்கு இன்னும் 3 மாதங்கள் இருப்பதால் என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம் என்று கூறியுள்ளார்.

# மைலோ கிண்ண உதைபந்தாட்டம்




நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மைலோ கிணண காற்பந்தாட்டப் போட்டிகள் இவ் வருடமும் இடம் பெறவுள்ளன. இதன் அடிப்படையில் ஆண்களுக்கான போட்டிகள் இடம்பெற்றது.

இதில்இடம்பெற்ற அரியாலை யுனைட்டட் விளையாட்டுக் கழகத்திற்கும் நாவாந்துறை சென் நிக்கீலஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான போட்டியில் நாவாந்துறை சென் நக்கிலஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்திற்கும் கரவெட்டி றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான போட்டியில் 2:1 என்னும் கோல் கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்திற்கும் ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான போட்டியில் 1:0 என்னும் கோல் கணக்கில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக் கழகத்திற்கும் சாவகச்சேரி அன்னை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான போட்டியில் 4:0 என்னும் கோல் கணக்கல் உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

முதலாவது காலிறுதிப் போட்டியானது நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது.

இதில் போட்டி நேரம் நிறைவடைகையில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பெறவில்லை,

சமநிலை உடைப்பு தணட உதை நாடப்பட்ட போது அதை சாதகமாக பயன்படுத்திய பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 5:4 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இப் போட்டியில் வெற்றி பெற்ற பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் கடந்தவருடம் இடம்பெற்ற முதலாவது மைலோ கிண்ணப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது,

இடம்பெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியானது நாவாந்துறை சென் மேரிஷ் விளையாட்டுக் கழகத்திற்கும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது.

போட்டியில் நாவாந்துறை சென் மேரிஷ் விளையாட்டுக் கழகம் 5:4 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இப் போட்டியில் வெற்றி [illegible] நாவாந்துறை சென் மேரிஷ் விளையாட்டுக் கழகம் கடந்த வருடம் இடம் பெற்ற முதலாவது மைலோ கிண்ணப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் சம்பியனாகியிருநதமை குறிப்பிடத்தக்கது. (க)

# பருத்தித்துறை ஹாட்லியை வென்றது சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி

(மானிப்பாய்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 13 வயதிற்குட்பட்ட பாடசாலை அணிகளிற்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதன் ஒரு அங்கமாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையிலான போட்டி ஒன்று இடம்பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத் தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழறசியில் வென்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிமுதலில் களத்தடுப்பாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 38.2 ஓவர்களில் சகல விக்கடகளையும் இழந்து 98 ஓட்டங்களை பெற்றுக் கொணடது.

துடுப்பாட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் ராம் 30 ஓட்டங்களையும் டான்சன் 16 ஓட்டங்களையும் தனுஷன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி சார்பில் லக்ஷன் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கட்களையும் ஆனந்த் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சில் துடுப்பாடிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 32.4 ஓவர்களில் சகல விக்கட்களையும் [illegible]றது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சார்பில் கஜேந்திரன் 27 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் டன்ஷன் 8 ஓட்டங்களுக்கு 4 விக்கட்களையும் பிருந்தன் 6 ஓட்டங்களுக்கு 3 விக்கட்களையும் திடிஷன் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது 2ஆம் இன் னிங்சில் துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி [illegible] ஓவர்களில் [illegible] இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் டன்ஷன் 14 ஓட்டங்களையும் டனுஷ்ராஜ் 10 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்னர்.

பந்துவீச்சில் பருத்தித் துறை ஹாட்லிக்கல்லூரி சார்பில் லக்ஷன் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கட்களையும் ஜெந்திரன் ஒரு விக்கட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 80 ஓட்டங்கள் என்னும் வெற்றி இலக்கோடும் தனது 2ஆம் இன்னிங்சில் துடுப்பாடிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 9 ஓவர்களில் 3 விக்கட்களை இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது போட்டி நேரம் நிறைவடைந்தது.

இதில் ஆனந்த் 14 ஓட்டங்களைன் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் டன்ஷன் மற்றும் பிருந்தன் தலா 1 விக்கட்டைக் கைப்பற்றினர்.

இதன் படி முதல் இன்னிங்சில் 61 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (க-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்து நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் பதவியுயர்வு பெற்றுச் சென்ற அ.அகிலதாஸ் அவர்களுக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் மகத்தான பிரியாவிடை அண்மையில் நடைபெற்றதை படங்களில் காணலாம்.

# மரண அறிவித்தல்

## திருமதி
## அருளம்பலம் பாக்கியலட்சுமி

புங்குடுதீவை பூர்வீகமாகவும் கேகாலையை பிறப்பிடமாகவும் சிவநகர் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்பலம் பாக்கியலட்சுமி அவர்கள் நேற்று (13.11.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதன்- மனோன்மணி தம்பதிகளின் பாசமிகு மகளும், கணபதிப்பிள்ளை அருளம்பலம் (முன்னாள் விவாக பிறப்பு இறப்பு பதிவாளர்- கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும், இராசரத்தினம் திலகவதி (வட்டக்கச்சி), கணேசு புவனேஸ்வரி (உருத்திரபுரம்), கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் (வவுனியா), மனோகரன் ஞானாம்பாள் (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், இ.உதயகுமாரன் (விவாக பிறப்பு இறப்பு பதிவாளர்-கிளிநொச்சி), க.ஜெனார்த்தனன் (கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவை நிலையம் - உருத்திரபுரம்), இ.இளங்குமரன் (கட்டட ஒப்பந்தகாரர் வட்டக்கச்சி), க.ஜெயவேந்தி (லண்டன்), இ.மங்களகுமரன் (லண்டன்), நி.இளவேந்தி (உபஅதிபர் உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), ம.பிருந்தினி (வைத்திய அதிகாரி- ஜெயவர்தனபுர அரசினர் வைத்தியசாலை), மா.அமுதகிரணன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2014) வெள்ளிக்கிழமை இல.76/2 திருவையாறு மேற்கு கிளிநொச்சி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்துமயானத்தில் பிற்பகல் 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.உதயகுமாரன்
விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர்
கிளிநொச்சி

76/2 திருவையாறு
மேற்கு, கிளிநொச்சி.

(சி-9075)

# ரோகித் உலக சாதனை
# இந்தியா அபார வெற்றி




இலங்கைக்கு எதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் ரோகித் சர்மா உலக சாதனை படைத்துள்ளார். மற்றும் இந்திய அணி அப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைக்கு எதிரான 4வது ஒருநாள் போட்டியில் இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக ரஹானே, ரோகித் சர்மா களமிறங்கினர். இருவரும் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரஹானே 28 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், மத்யூஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்னர் ராயுடு வந்த வேகத்தில் எரங்காவின் பந்து வீச்சில் வெறும் 8 ஓட்டங்களில் நடையை கட்டினார். இதனையடுத்து திணறிய இந்திய அணியை காப்பாற்ற அணித் தலைவர் ஹோலி, ரோகித்துடன் ஜோடி சேர்ந்தார்.

தனது சிறப்பான ஆட்டத்தால் ஹோலி அரைசதம் கடந்தார். அவர் 66 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஓட்ட முறையில் வெளியேற்றப்பட்டார். இந்த ஜோடி அணியின ஓட்டங்களை விறுவிறுவென உயர்த்தியது.

அடுத்து வந்த ரெய்னா 11 ஓட்டங்கள் (1 சிக்சர், பவுண்டரி) குவித்து இருந்த நிலையில் ஜெயவர்த்தனேயிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து உத்தப்பா, ரோகித்துடன் இணைந்தார். தொடக்க வீரராக களமிறங்கிய ரோகித் சர்மா இலங்கை அணியின் பந்து வீச்சை புரட்டி எடுத்தார். அதற்கு ஏற்றவாறு இலங்கை வீரர்களும் களத்தடுப்பில் சொதப்பி தள்ளினர்.

விஸ்பரூவம் எடுத்த ரோகித் அரை சதம், சதம், இரட்டை சதம் என ஓட்டங்களை குவித்து கொண்டே சென்றார். மிரட்டி எடுத்த அவர் அதிகபட்சமாக 264 ஓட்டங்கள் (33 பவுண்டரி, 9 சிக்சர்) குவித்து கடைசி பந்தில் ஆட்டமிழந்தார்.

இதன் மூலம் சர்வதேச அரங்கில் 2 முறை இரட்டை சதம் அடித்த வீரர் என்ற சாதனையையும் படைத்தார். இவரது அதிரடி ஆட்டத்தால் 50 ஓவர் முடிவில் இந்திய அணி 5 விக்கெட் இழப்பிற்கு 404 ஓட்டங்கள் குவித்தது.

உத்தப்பா 16 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இதனையடுத்து 405 ஓட்டங்கள் எடுத்தால வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி, 43.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 251 ஓட்டங்கள் எடுத்து தோல்வியை தழுவியது.

அதிகபட்சமாக அஞ்சலா மத்யூஸ் 75 ஓட்டங்களும், லகிறு திரிமன்னே 59 ஓட்டங்களும், டில்ஷான் 34 ஓட்டங்களும், திஸார பெரேரா 29 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் இந்திய அணியின் தவால் குல்கர்னி 4 விக்கெட்டும், உமேஷ் யாதவ், ஸ்டுவர்ட் பின்னி, அக்ஷர் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக ரோகித் ஷர்மா தெரிவு செய்யப்பட்டார்.

இதன்மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை வென்று 4-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

பிறந்ததின வாழ்த்துக்கள்

(8325)



அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தோழில்கள் மற்றும் சிறுதோழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

10.11.2014, 57-வது அகவை காணும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு எமது பிறந்த தின வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:
வாழ்வெழுச்சி உத்தியோகத்தர்கள், ஊர்காவற்றுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச...

ள்ளனர். இதேவேளை 22955 ரூபாயை ஆரம்பச் சம்பளமாகக் கொண்ட வகுதிக்குரிய பதவிநிலை உத்தியோகத்தர்கள் 31.08.2015 வரை இந்த இடைக்காலப் படியைப் பெறுவர். இவர்கள் 01.09.2014 தொடக்கம் நிலுவையுடன் புதிய சம்பளத்தைப் பெறவுள்ளனர்.

புதிய சம்பளக் கட்டமைப்பு 01.01. 2015 தொடக்கம் அமுல்படுத்தப்படும். இதேவேளை ஓய்வூதியம் பெறுவோருக்கு புதிய சம்பளக் கட்டமைப்புக்கு அமைவாக ஓய்வூதியங்களை மறுசீரமைத்து நடை முறைப்படுத்தும் வரை 2014 நவம்பர் மாதம் தொடக்கம் மாதாந்தம் 2500 ரூபாய் வழங்கப்படவுள்ளது.

அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் இக்கொடுப்பனவு சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக வழங்கப்படும் ஓர் இடைக்காலக் கொடுப்பனவாகவே கருதப்படவுள்ளது. (ந)

## தீர்ப்பின்...

எதுவாக இருந்தாலும் சபையின் முதல்வர் என்ற வகையில் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அதிகாரம் இல்லை எனவும் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இந்தியத்...

கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் இதுவரை முடிவு செய்யவில்லை.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மீனவர்களை...

த்தியுள்ளது.

வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யா விட்டால், ஐந்து தமிழக மீனவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கத் தயார் என்று தனது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள பிரபா கணேசன் மூலம் இந்தியத் தூதரகத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னதாக நிபந்தனை விதித்திருந்தார்.

இந்தநிலையிலேயே, நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து தமிழக மீனவர்களையும் நிபந்தனைகள் எதுவுமின்றி உடனடியாக அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது. (எ-11)

## பொது...

தெரியவருகின்றது.

அதில் மிக முக்கியமாக சந்திரிகா குமாரதுங்கவின் பெயர் தெரிவாகலாம் எனவும் கூறப்படுகிறது.

இந்த பொது வேட்பாளர் சர்வ அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றவே என்றும் 17-வது அரசியல் அமைப்பை அமுல்படுத்தும் நோக்கத்தை கொண்டதாகும் என்றும் சொல்லப்படுகின்றது. (எ-11)

## தெரிவுக்குழுவின்...

கைகள் எதிர்வரும் 2015-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முக் கிய அரசியல் கட்சிகள் பல பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக குழுவின் அமர்வுகளில் பங்கேற்கவில்லை.

அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவில்லை. ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமர்வுகளில் இணைத்துக் கொள்ளபபடவில்லல என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## யாழ்-கொழும்புக்கு...

பாணத்துக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய கிழமைகளிலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஞாயிறு, செவ்வாய், மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளிலும் இடம் பெறும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பிலிருந்து இரவு 10 மணிக்கு புறப்படும் இந்த ரயிலானது, மறுநாள் அதிகாலை 6.55 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை அடையும். அதேபோல், யாழ்ப்பாணத்திலிருந்து காலை 8.40 மணிக்கு ஆரம்பமாகும் இநத ரயில் சேவை, மாலை 5.30 மணிக்கு கொழும்பை அடையும்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவை, இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கும் அதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கான சேவை ஞாயிற்றுக்கிழமை முதல்ஆரம்பிக்கும்என புகையிரத நிலைய அதிபர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## பொது பல சேனா...

ஸ்தாபகத் தலைவர் கிரம விமலஜோதி தேரர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். எனினும், அவர் தமது அமைப்பினை பிரதிநிதித்துவம் செய்து கூட்டத்தில் பங்கேற்க வில்லை என பொது பல சேனா இயக்கம் தெரிவித்துள்ளது.

மாறாக பௌத்த கலாசார மையத்தின ஸ்தாபகர் என்ற ரீதியில் இந்தக் கூட்டத்தில் கிரம விமலஜோதி தேரர் பங்கேற்றிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கில் தேசிய அமைப்புக்களினால் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு பொது பல சேனா இயக்கம் ஆதரவளித்துள்ளதாக சில ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், இந்த தகவல் களில் உண்மையல்லை என பொது பல சேனா இயக்கம் அறிவித்துள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் பொது பல சேனா தெரிவித்துள்ளது. (எ-11)

## அரசிலிருந்து...

ஜனாதிபதித் தேர்தலில் எப்படியான முனைப்புகளை மேற்கொள்வது என்பது பற்றி அடுத்த 5 நாட்களுக்குள் தீர்மானிக்கப்பட உள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்களுக்கும் இடையில் நேற்று முக்கியமான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது.

இந்த பேச்சுவார்த்தையின் பிரதிபலன்களுக்கு அமையவே தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருப்பதா அல்லது நிபந்தனைகளுடன் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதா என்பது குறித்து ஜாதிக ஹெல உறுமய நிரந்தர முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

## நிலத்தில் பிளவு...

தியாலயத்துக்கு பாதுகாப்பாக அனுப்பி வைத்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த பகுதியில், மற்றுமொரு மண்சரிவு ஏற்பட்டால், மீரியபெத்தவுக்கு செல்ல முடியாத நிலை ஏற்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது அப்பிரதேசத்தில் கடும்மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## எதிரணிக்...

குறித்த பொதுக் கூட்டணிக்குள்ளேயே இன்னும் சில விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட வேண்டியிருப்பதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

பெரும்பாலும் எதிரணியினரை உள்ளடக்கிய பொதுக் கூட்டணியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்குமாறு அரசாங்கத் தரப்பிலிருந்து வந்திருக்கின்ற அழைப்பை பரிசீலிக்காமல் நிராகரிக்க முடியாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கூறினார்.

அவர்களுடைய செயற்பாட்டில் எமக்கு திருப்தி இல்லாமல் இருந்தாலும் கூட, அவர்கள் ஓர் அழைப்பை விடுக்கின்ற போது நாங்கள் அதுபற்றி சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்றார் சம்பந்தன்.

ஜனாதிபதி தேர்தல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூடி ஆராய்ந்து யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் முடிவொன்றை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும வேட்பாளரை தீர்மானிக்கின்றபோது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான, நிரந்தரமான, நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல்தீர்வு பற்றியும் மக்களின் அன்றாட தேவைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றியும் கருத்தில் கொள்ளப்படும் என்றும் இரா. சம்பந்தன் கூறினார். (எ-11)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
After A/L What Next???

Spoken English With Grammar - Quick Learning Course
Duration: (1 1/2 Months)
Reading, Writing, Speaking, Listening
(Audio & Video)

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

Diploma In English
Duration: (2 Months)
Internet, E-mail, Internet Chatting ... (Audio & Video System)

B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds ... IELTS-4.5 ... British High Commission ...
Duration: (2 Months)

IELTS Acadamic/General
We do Official Online Registration for Exam Candidates
Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
Duration: (2 Months)

15th Saturday 2014@8.00am
16th Sunday 2014@11.00am
17th Monday 2014@9.00am
19th Wednesday 2014@3.00pm

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 0212224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo,-06. Tel 0112500207 (சி-9056)
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்
அருள் ஒளி தர்சன மாலையும் திருக்கார்த்திகை சிறப்புப் பூஜையும்



இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 16.11.2014.
ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி



வரமருளிக் காத்தருள இராஜேஸ்வரி அம்மானாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளி தர்சன மாலையும் திருக்கார்த்திகை சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும் பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 4.30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் சேவையில் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது.

யாழ் தொடர்புகளுக்கு 0779825004 ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192 (8316)

வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி வகுப்புக்கள்
www.nationjobbank.com
Diploma in Air Ticketing
Contact 071 0 920 920
10% OFF
Duration - 6 Months Course Fee - 55000 LKR
Receptionist
Data Entry Operator
Printed Media Designer
Clerk
10% OFF
Duration - 3 Months Course Fee - 6500 LKR
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்.
அனுபவம் வாய்ந்த தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் விரிவுரைகள்
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பிற்கான உத்தரவாதம்.
வகுப்புக்கள் கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் நடைபெறும்
இது தேசிய வங்கியால் ஒழுங்கமைக்கப்பட்டது.
HEAD OFFICE 16 1/2 E.S.Fernando Mw. Colombo - 06.
JAFFNA BRANCH 128, Brown Road. Jaffna. (சி-9071)
VAVUNIYA BRANCH 179 A, Railway Station Road, Vairavapuliyankulam, Vavuniya.

ELTC
ஆங்கில மொழி போதனாக் கல்லூரி வழங்கும்
DIPLOMA IN PRE-SCHOOL & PRIMARY TEACHING
Duration: 01 Year
Lectures: Saturdays & Sundays
கற்கைநெறி முடிவில் சர்வதேச பாடசாலையில் பயிற்சி வழங்கப்படும்
ENGLISH LANGUAGE TEACHING COLLEGE
15-11-2014
அன்று அனுமதிகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு அனுமதிக் கட்டணம் 5000/= மட்டுமே
TEACHERS TRAINING CENTRE
133,A9 ROAD, KACHCHERI, JAFFNA.TP: 077 910 1787
(சி-9074)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org